பரதகலைச் சித்திரம்

தொகுப்பாளர் :

டி. கே. ராஜலட்சுமி

டி. ஆர். அருணாசலம்

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை-5 : : திருச்சி-2

பரதகலைச் சித்திரம்

தொகுப்பாளர் :

டி. கே. ராஜலட்சுமி

டி. ஆர். அருணாசலம்

பழனியப்பா பிரதர்ஸ்

திருச்சி - 2 :: சென்னை - 5

பதிப்புரிமை.
முதற்பதிப்பு :
ஜூன், 1964

விலை ரூ. 5-00

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சென்னை - 5.

பரதகலைச் சித்திரம்

காணிக்கை

தஞ்சை பரதகலாசிரியர் அமரர் ஸ்ரீ எல். பிச்சையா பிள்ளை அவர்களுக்கு.

முகவுரை

உலகிலே நாட்டியங்கள் பல வகைப்படும், பரதம், கதக், கதகளி, குச்சிப்புடி, யக்ஷகாணம், பாகவத நாடகம், மணிப்புரி, ஜாவா நாடகம், பர்மா 'புவே'. மலாய் ரோங்கின், மேற்கத்திய 'பாலே' போன்று எத்தனை எத்தனையோ நாட்டியங்களை நாம் இன்று காண்கின்றோம். எல்லாவற்றிலும் இலக்கண அமைதியும் நிலையான தரமும் உள்ள நாட்டியம் நமது பரதமே!

'பரதம்' என்ற சொல்லின் அமைப்பும், பொருளுமே நமது கலையறிவுக்கு ஒரு நற்சான்றாகும்! நாட்டியத்தின் உட்கோளான மூன்று சொற்களின் தலை எழுத்துக் கடை எழுத்துக் கூட்டமே 'பரதம்' என்றாயிற்று. நாட்டியத்தின் உட்கோள் பாவம், ராகம், தாளம். அவற்றின் முதல் எழுத்துக்கள் முறையே ப-ர-த ஆகும். மூன்று சொற்களின் கடை எழுத்து 'ம்' ஆகும். 'ப', 'ர', 'த', மூன்றையும் முறையாக எழுதிப் பின் மூன்று சொற்களின் கடை எழுத்தான 'ம்' ஐ இறுதியில் எழுதினல் 'பரதம்' என்றாகும் உண்மை புலப்படும். அந்தச் சொல்லின் அருமையையும் உணரலாம்.

இக்கலை காலம் கணிக்க அரிய ஒரு பழங் கலை. தமிழர்தம் அருங் கலைகளுள் தலை சிறந்தது. ஆடல், கூத்து, நாடகம், நட்டம் என்றெல்லாம் பண்டைத் தமிழர் வழங்கி வந்தனர். 'சதி' என்ற சொல் பழம் நூல்களில் காணப்படுகிறது. இச் சொல்லே 'ஜதி', 'யதி' என்றெல்லாம் மாறிப் பிறமொழி நூல்களில் குறிக்கப்படுகின்றது. இதையே பிற்காலத் தமிழர்கள் 'சதிர்' என்று வழங்கலாயினர். 'துத்தி' என்றும் 'முகவீணை' என்றும் சொல்லப்பெற்ற, அளவால் சிறிய, நாதஸ்வரம் போன்ற, மேளத்தை பின்னியமாக கொண்டிருந்தமையால் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ''சின்ன மேளம்'' என்றும் வழங்கி வந்தனர் இதை. பண்டைத் தமிழர் நாகரிகத்திற்கு மிகவும் பழம் சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிந்துவெளிப் புதை பொருள்களில் நாட்டிய நங்கை உருவமும் கிடைத்திருக்கிறது. சிதம்பரம் போன்ற பெருங்கோயில்கள் பலவற்றில் கோபுர வாயில்கள், விமானங்கள், தூண்கள், கோட்டங்கள் முதலான இடங்களிலுள்ள சிற்பங்களில் நாட்டிய நிலைகள் எண்ணற்றவை காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களில் முறையும், நிலையும் பேசப்படுகின்றன. ஆட்டத்தில் வல்லமை பெற்ற நங்கைக்குத் 'தலைக் கோல்' பரிசு கொடுப்பதை சிலம்பு போன்ற நூல்களால் அறிகிறோம். அப்படித் தலைக்கோல் பரிசு பெற்ற ஆடல் நங்கையரைத் 'தலைக் கோலி' என்று பாராட்டிக் கல் வெட்டுகளும் சிறப்பிக்கின்றன.

கம்பனில் இக்கலை பற்றிக் காணப்படுகிற பலவற்றில் இரண்டை இங்கே சிறிது பார்க்கலாம்.

''பதங்களில், தண்ணுமை, பாணி, பண்உற
விதங்களின், முறை சதி மிதிப்பவர்
மதங்கியர்..............''

(பதம் - சப்தம், சொல், நடனப் பாடல்; தண்ணுமை-மிருதங்கம்; பாணி - தாள உறுப்பு; பண்ணுற - ஒத்தியல; விதங்களின் - வகை களின்; சதி - ஜதி, தாளத்திற்கேற்ற அடிவைப்பு; மதங்கியர் - ஆட வல்ல மகளிர்)

''நெய்திரள் நரம்பின் தந்த
மழலையின் இயன்ற பாடல்,
தை வரு மகர வீணை
தண்ணுமை தழுவித் தூங்க,
கை வழி நயனம் செல்ல,
கண் வழி மனமும் செல்ல
ஐய, நுண், இடையார் ஆடும்
ஆடக அரங்கு.....................''

(நெய் - வரியப்பட்ட; திரள் - விறைப்பான; மழலையின் -குழந்தை மொழிபோன்ற இனிமையுடன்; தைவரு - தடவி வாசிக்கும்; தழுவித் தூங்க - இணைந்து ஒன்ற; கை - முத்திரை ஹஸ்தம்; நயனம் - கண்; ஐய, நுண், இடையார் - உண்டோ இல்லையோ என்று மயங்க வைக் கும் சிற்றிடையோர்; ஆடக அரங்கு - பொன்னொளிரும் நாட்டிய மேடை.)

''கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல'' என்ற கருத்து சம்ஸ்கிருத நாட்டிய சாஸ்திரத்தில்

''யதோ ஹஸ்தஸ், ததோ த்ருஷ்டி;
யதோ த்ருஷ்டிஸ், ததோ மன:''

என்று கூறப்பட்டிருப்பது ஒப்பிட்டு மகிழ்ந்தின்புறத் தக்கதாகும்

தமிழனின் அன்றாடச் செயல்களான விளையாடல், நீராடல், நகை யாடல், போராடல், உரையாடல், வாதாடல், வேட்டையாடல், உண்டா டல், களியாடல், ஒற்றாடல், சூதாடல் போன்ற எத்தனையோ சொற் கள் ஆடல் ஆடல் என்றே முடிவதை ஊன்றி ஆய்வோர்க்கு ஆடல் என் பது தமிழனின் உயிரோடு குருதியோடு எப்படிக் கலந்து நிற்கிறது என்ற உண்மை நன்கு புலப்படும்.

இன்னும், இக்கலை தமிழ்நாட்டுக் கலையே என்பதற்கு எத்தனையோ சான்றுகளைக் காட்டலாம். அதற்குக் களம் இதுவல்லவே! ஆனால் ஒன்றை மட்டும் கூறி மேலே செல்கிறேன். நடனக்கலைக்கே ஒரு அற்புத உருவைக்கொடுத்து, மூர்த்திகரித்து. அம்பலக்கூத்தன்,

ஆடவல்லான், கூத்தப்பெருமான் - நடராஜன் என்றெல்லாம் பெயர் சூட்டிக் கோயிலில் வைத்துக் கொண்டாடுபவன் இன்றும் தமிழனே. இது ஒன்று போதாவோ?

இக்கலைக்குப் பழங்காலத்தில் பல இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் சிலப்பதிகாரம் போன்ற நூல்களின் உரைகளில் காணலாம். இக்கலையின் உயர்வையும், அவை, எல்லார்க்கும் பயன்பட வேண்டும் என்ற பெரு நோக்கையும் உணர்ந்த பல மேதைகள் பிற்காலத்தில் இலக்கண நூல்கள் சிலவற்றைச் செய்தளித்தனர். அதுவும் இந்தியாவின் பொது மொழியாக கலை மொழியாக அமைந்த சம்ஸ்கிருதத்தில்அவற்றை ஆக்கி உபகரித்தனர்.

முதலில் இக்கலைக்குரிய நாட்டிய சாஸ்திரத்தை ஆரிய மொழியில் இயற்றியவரின் இயற் பெயர் அறியுமாறில்லை. பரத நாட்டியத்திற்கு இலக்கணம் வகுத்த அப்பெரியாரைப் பரத முனிவர் என்றே வழங்கி வருகிறது உலகம். அதற்கு பின்னர் வேறு சில நூல்கள் ஆக்கப் பெற்றாலும் தேவேந்திரன் என்பவரால் ஆக்கப்பெற்ற ''சங்கீத முக்தா வலி'' குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1. புஷ்பாஞ்சலி, 2. முகசாலி, 3. சுத்தயதி, 4. சப்தசாலி, 5. ஸூடாதிசப்தம், 6. சப்தம், 7. சப்த ஸூடகீதம், 8. பல்வித கீதம், 9. பிரபந்த நர்த்தனம், 10. சிந்து, 11. தரு, 12. துருவபதம், என்று லாஸ்ய நடனத்தின் வரிசை முறையை அழகாக அந்நூல் குறிப்பிடுகிறது.

அதற்குப் பிறகு கி.பி. 1710ல் தஞ்சை துளஜா ராஜா என்பவர் ஆக்கிய 'சங்கீத சாராம்ருதம்' குறிப்பிடத்தக்க தாகும். அதில்,

1. தட்டடைவு, குத்தடைவு, நாட்டித் தட்டடைவு, தட்டி நெட்டடைவு, அனுக்கிரக அடைவு என்பதாக அடைவு வகைகள் விளக்கப்படுகின்றன. இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். 'அடைவு என்பது பிழை' என்றும், 'அடவு என்பதே சரி' என்றும், இது 'அடி என்று பொருள் தருவதான அடு. அடுகு அல்லது அடுவு என்ற தெலுங்குச் சொல்லின் திரிபே' என்றும்,வாதிப்பார்கள் சில அறிஞர்கள்.

ஸ்தானம், சாரி, கரணம், அங்கஹாரம்,

(ஸ்தானம் - நிற்கும் நிலை; சாரி - கால் அசைவு; கரணம் - கைகளின் கூட்டசைவும், அவற்றின் நிலையும்; அங்கஹாரம் - ஒரு நிலையினின்றும் மற்றொரு நிலைக்குச் சென்று பொருந்தும் கரணங்கள் பலவற்றையுடைய கோவை) முதலியவை செறிந்துள்ள காரணத்தால் அப்பொருள் தரும் 'அடைவு' என்ற தமிழ்ச் சொல்லே மூலச்சொல்லாகும் என்பதும், அதை அடைவு என்று வழங்குவதே சரி என்பதும் என் கருத்து.

பண்டை நூல்களில் நிருத்தமானது தாண்டவம், லாஸ்யம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சிவன் ஆடியதைத் தாண் டவம் என்றும், பார்வதி ஆடியதை லாஸ்யம் என்றும் கூறுவர் நூலோர். அவற்றின் முறைகளை ஸ்தானம், சாரீ, கரணம், அங்க ஹாரம் என்றெல்லாம் வகுத்துத் தொகுத் துரைப்பார்கள். அவற்றுக் கும் பரதத்தின் அடிப்படையாக விளங்கும், காலடி, தட்டு, அடைவு ஆகியவற்றிற்கும் உள்ள ஒற்றுமை கண்டின்புறத் தக்கதாகும். சாரீ கரணம் அங்கஹாரம் என்பன எல்லாம் நம் அடைவுகளுள்ளும், திர்மானத்தினுள்ளும் அடங்கிக் கிடப்பதை நாம் நன்குணரலாம்.

அடைவுகளின் தொகை நூற்றுக்கும் மேற்பட்டது என்றாலும் அதைப் பத்தாக வகைப்படுத்தி அவற்றுள் பல பிரிவுகளை அமைத்து அனைத்தையும் அடக்கியுள்ளார்கள். நாடகத்தில் பலர் வெவ்வேறு வேடங்களைத் தாங்கி நடிப்பதால் கதாபாத்திரங்களில் உணர்ச்சியைத் தனித்தனியே வெளிப்படுத்துவது எளிது. ஆனால் நாட்டியத்திலோ ஒரே நடிகை ஒன்றுக்கொன்று முரண்பட்ட பாத்திரங்களாய் நடிக்க வேண்டும். மலரம்பு எய்யும் மன்மதனாகவும், மன்மதபாணத்திற்கு இலக்கான நாயகியாகவும், ஏக காலத்தில் அவளொருத்தியே நடிக்க வேண்டும். எனவே, சில உத்தி முறைகளைக் கையாளுவதன் மூலமே குறைகளை நிறைவு செய்யவேண்டும். நாடகத்தில் சோகத்தால் தேம்பியழுபவள் உண்மையாகவே கண்ணீரை உதிர்க்க முடியும். நாட்டியத்திலோ மோதிரவிரலால் கண்ணிமை வழித்து விட்டு விரலைச் சுண்டிவிடுவதான அபிநயத்தால் அந்த உணர்ச்சி பாவத்தை அப்படியே கொண்டு வந்து விடலாம். பயிற்சியின் முதிர்ச்சிதான் அதைச் செம்மையாகக் காட்டமுடியும்.

அபிநயத்தின் மூலந்தான் பாவம் உணர்த்தப்படுகிறது. அபிநயம் என்பது ஒலியாலான சொல்லற்றது; எம்மொழிக்கும் பொதுவானது. மொழியா மொழி என்று கூறலாம் அபிநயத்தை. அம்மொழியின் நெடுங்கணக்கு (அரிச்சுவடி) அபிநயக் கைகளேயாகும். இதை அடியார்க்கு நல்லார் ''தொழிற்கை'' என்பார். மற்றைப்படி ஆட்டத் தில் பயன்படும் கையை ''எழிற்கை'' என்று கூறுவார் அவர்.

மொழியில் எழுத்துப்போல அபிநயக்கைகளும் தனித்தும், இணைந்தும் வந்து பணியாற்றும். மொழியில் தனித்து நிற்பனவற்றை உயிர் என்றும் மெய் என்றும் வழங்குவோம். இணைந்து நிற்பன வற்றை உயிர்மெய் என்போம். அப்படியே

தனிக்கையை (இடக்கை - வலக்கை) அஸம்யுதம் (சேராக்கை) என்றும், இணைந்தகையை (ஸம்யுதம்) என்றும் சொல்வது மரபு. இதையே மேலும் விளக்கமாக முறையே அஸம்யுத ஹஸ்தம் என்றும், ஸம்யுத ஹஸ்தம் என்றும் கலைஞர்கள் கூறுவார்கள். ஸம்யுத ஹஸ்

தத்தில் அஞ்சலி முதல் பேருண்டம் வரை 23 பிரிவுகளையும், அஸம்யுத ஹஸ்தத்தில் பதாகை முதல் திரிசூலம் வரையுள்ள 28 பிரிவுகளையும் இந் நூலில் தந்திருக்கிறார்கள் இதைத் தொகுத்தோர். வியாக்ரம், ஊர்ணநாபம் ஆகிய இரண்டையும் கூட்டி 30 பிரிவுகளாகக் கொள்ளுவது முண்டு. அது ஒரு முறை; இது ஒரு முறை.

இந் நூலைத் தொகுத்து வெளியிடுவோர் நமது பாராட்டிற்கு மிகவும் உரியவர்கள். ஒருவர் பரதகலைப் பரம்பரையில் வந்த திருமதி. டி. கே. ராஜலட்சுமி அவர்கள். அவர் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் கலை வார்சு. நடன ஆசிரியையாக இன்றும் நற்பணியாற்றி வருபவர். மற்றவர் கலையுணர்வும் சேவை மனமும் படைத்தவர். அரும் பொருளீந்து திருப்பணி பல புரிந்த பெரும் குடும்பத்தில் உதித்தவர். இன்றும் கோயிலறங்காவலராக நின்று பணியாற்றுபவர். இதை ஒரு நெறிப்படுத்தி வெளியிட வேண்டும் என்று அடியிட்டவர் தஞ்சையில் வாழ்ந்த பரதகலைப் புலவர் திரு எல். பிச்சையாபிள்ளை. அவர் காலமாய்விட்டதால் அவரிடம் அன்புடைய இவர்கள் அதை ஒருவாறு தொகுத்து விளக்கம் தந்து வெளியிடுகிறார்கள். இதை ஒரு பூரணமான நூல் என்று சொல்ல முடியாது. கற்போருக்கும், கற்பிப்போருக்கும் ஓரளவு உதவக் கூடிய கையேடு (Hand book) போலத்தான் இதைக் கருத வேண்டும். இதில் ஹஸ்தங்களையும் அதன் வினியோகங்களையும் பெயர், தொழில், விளக்கங்களுடன் எடுத்துரைக்கப்படுகிறது. பின்னர் பல்வேறு தேவதைகளையும் உணர்த்துவதற்கான தேவதா ஹஸ்தங்களின் அமைதிகளையும் இந் நூலுள் காணலாம். மற்றும் மானிட சாதி, இராக்கத சாதி உறவு நிலை முதலிய பிடிகளையும், கைவிரல்கள், பாதலட்சணம், பல அவஸ்தைகள், நாயகிலட்சணம், ரசமும் அதன் உற்பத்தியும் போன்ற பல்வேறு பகுதிகளையும் பற்றிச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறுகிறது இந் நூல். இந்த முயற்சியில் ஈடுபட்ட இருவர்க்கும் ஊக்கமூட்டக் கலையன்பர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். எல்லாம் நிறைந்த, நாட்டியக்கலை விளக்க நூல்கள் தோன்றிப் பயன் விளைக்க இந் நூல் உதவுவதாக!

மேலும் செவ்விய நூல்கள் பலவற்றை இவ்வாசிரியர்கள் தர எல்லாம் வல்ல இறைவன் தண்ணருள் சுரப்பானாக!

காரைக்குடி,
4-8-1964

சா. கணேசன்.

Sri C. SUBRAMANIAM, B.A., B.L.,
(Minister of Steel, Mines & Heavy Engineering, Govt. of India.)

அளித்த

அணிந்துரை

பரதநாட்டியம் பாரதத்தின் புராதனக் கலையாகக் கருதப் பட்டு வருகிறது. பழம்பெரும் காலத்தில் அரச அவைகளில் நாட்டியம் ஒரு முக்கிய கலையாக விளங்கியது. அண்டை நாட்டு மன்னர் அவைக்கு வருகை தந்தபோதும், முக்கிய விழாக்களிலும் நாட்டிய விருந்து அளிக்கப்பட்டதாக பழங் காவியங்கள் கூறுகின்றன.

அக்காலங்களில் நாட்டியத்தை தெய்வீகக் கலையாகப் போற்றி வளர்த்தனர். முன்னாளில் இறைவன் சன்னிதியில் நாட்டியம் நாள்தோறும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது ஏன்? நாட்டியத்தின் உருவாக இறைவனே எழுந்தருளி ஊர்த்துவதாண்டவம் ஆடியதாகப் புராணங்களில் படிக்கிறோம்.

மேலும், தமிழ்நாட்டில் பழங்காலத்தில் நாட்டியத்திற்கு எத்தனை முக்கியத்துவம் அளித்தனர் என்பதைப் பல கல் வெட்டுகளில் காணலாம். தமிழ் மூவேந்தர்களும் அவர்களுக்குப் பின் வந்தவர்களும். கோயில்களில் ஒவ்வொரு கல்லிலும் நாட்டியத்தின் பல முத்திரைகளை வடிவங்களாகச் செதுக்கி அதை அழியாக் கலையாக வடித்துள்ளனர். தெய்வ சன்னிதியில் நடன சிற்பங்களை அமைத்ததன் மூலம் அவர்கள் நாட்டியத்தைச் சுகபோகத்திற்கான கேளிக்கையாகக் கருதா

மல் அதைத் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகப் போற்றி வளர்த்தனர் என்பதற்குச் சான்றுகும்.

ஆனால் இடைக்காலத்தில் நாட்டியம் என்பது ஒரு குலத்தவர் தொழிலாக இருந்து வந்தது. அச்சமயம் நாட்டியம் ஆடுவதையோ, அதைக் கற்பதையோ மிகத்தாழ்வாக எண்ணி வந்தனர். நாட்டியமாடுபவர்களைக் கணிகையர் எனக் கேவலமாகக் கருதப்பட்ட காலமும் உண்டு. ஆனால் அக்காலம் மாறி இப்போது நாட்டியம் ஒரு கலையாகக் கருதப்படுவதுடன், பல நற்குடிப் பெண்களும் விரும்பிக் கற்று வருகின்றனர். மேலும் அதைப் பரப்பிப் பாதுகாக்க சர்க்காரும் முயற்சி செய்து வருகிறது. நமது நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்ற பலர் ஏனைய நாடுகள் சென்று அங்கெல்லாம் நமது கலையைப் பரப்பி வருகிறார்கள்.

மேல்நாட்டினரும், நமது பாரதத்தின் நாட்டியக் கலையைக் கண்டு மெச்சிப் புகழ்கின்றனர். அதனால்தான் போலும் மேல் நாட்டிலிருந்து பலர் நம்நாடு வந்து இக்கலையைக் கற்க முற்பட்டுள்ளனர். இப்படிக் கற்பவரின் எண்ணிக்கையும் நாள் தோறும் பெருகிவருகிறது. இவையெல்லாம் நமது கலை, கடல் கடந்து பெயரும் புகழும் பெற்று வருவதையே காட்டுகிறது.

நாட்டியக் கலையை எளிதில் கற்றுக்கொள்வது என்பது இயலாத காரியம். உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் அசைவை ஏற்படுத்த வேண்டும். இதற்கு இடைவிடாத நீண்டநாள் பயிற்சி அவசியம்.

இத்தகைய நாட்டியத்தைத் தெளிவான முறையில் பட விளக்கங்களுடன் புத்தக வடிவில் தமிழ்மொழியில் ராஜலட்சுமியும், அருணாசலமும், பல ஆண்டுகள் இத்துறையில் ஈடுபட்டு, பல மாணாக்கியரைத் தயாரித்து மலாயா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்கு அழைத்துப் போய்ப் புகழ்பெற்று வந்துள்ள நிலையில் வெளிக்கொணர முன் வந்துள்ளது பாராட்டுதற்குரியதாகும். இப்புத்தகத்தைத் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்பர் என்று நம்புகிறேன்.

புது டெல்ஹி
12—4—1964

சி. சுப்பிரமணியம்

சிறப்புரை

ஸங்கீதக் கலையும், நாட்டியக் கலையும் பாரதத் தாயின் இரு கண்கள் எனலாம். இவ்விரு கலைகளையும், பெரியோர் களும், அறிவாளிகளும் சிறந்த முறையில் வளர்த்துள்ளார்கள். இதர தேசக்கலைகளில் காணப்படாத பல அரிய அம்சங்களை நம் நாட்டின் இசையிலும் நாட்டியத்திலும் காணலாம். ராகமும், அபிநயமும் நம்மால் உலக சங்கீதத்திற்கும், நாட்டி யத்திற்கும் கொடுக்கப்பட்ட சிறந்த கொடைகள் எனலாம். ஒரு ராகத்தை ஆலாபனை செய்வதையும், அதன் நாதவடிவத் தைப் பல உருப்படிகளின் மூலம் சித்திரித்துக் காட்டுவதையும், நம் நாட்டில்தான் காணலாம். அதேமாதிரி தாள வித்தியாசங் களைக் காலில் அடவு ஜாதிகளின் மூலம் காண்பிப்பதையும், ஒரு ஸாஹித்தியத்தில் அடங்கியுள்ள உட்கருத்துக்களைத் தக்க அபிநயத்தின் மூலம் விளக்கிக் காட்டுவதையும் நம் நாட்டில் தான் பார்க்க முடியும். இந்த அபூர்வ விஷயங்களை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத் துடனேயே அயல் நாடுகளிலிருந்து பலர் இப்பொழுது இங்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

எந்தத்தேசங்களில் நல்லதோர் இசைக்கலையும், நாட்டியக் கலையும் விருத்தியாகவில்லையோ அங்கெல்லாம் மேல்நாட்டு ஸங்கீதமும், மேல் நாட்டு நாட்டியக் கலையும் சுலபமாகப் பரவ லாயிற்று. இதற்குச் சான்றாக, ஆசியா கண்டத்திலுள்ள தென்கிழக்குத் தேசங்களைக் குறிப்பிடலாம். இந்தியாவில், அடிப்படையான தத்துவங்களைக் கொண்டு இசைக்கலையும், நாட்டியக் கலையும் வளர்ந்துள்ளதால் மேல்நாட்டுக்கலை நம் முடைய கலைகளைச் சற்றேனும் தாக்க முடியவில்லை.

தென்னிந்தியா பரதர் காலத்திலிருந்தே (கி. மு. 4-ம் நூற்றாண்டு) கலைகளுக்கு பெயர் போனது. தனது நாட்டிய

சாஸ்திர நூலில் 14-ம் அத்தியாயத்தில் பரதர் பின்வருமாறு கூறுகிறுர்:—

"தென்னிந்திய மக்கள், பற்பல நடனங்களிலும், வாய்ப் பாட்டிலும், வாத்திய ஸங்கீதத்திலும் விசேஷ ஆர்வம் காட்டு கிருர்கள். அவர்களது கலைகளில் அழகும் மதுரமும் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. அவர்களின் சாமர்த்தியமான அங்க அபிநயங்கள் மெருகுடன் பிரகாசிக்கின்றன. அப்படி லலித கலைகள் உலாவும் நாடானது வடக்கே விந்திய பர்வதத் தாலும் ஏனைய மூன்று திக்குகளில் ஸமுத்திரத்தாலும் சூழப் பட்டுள்ளது."

ஸங்கீதம் பயிலுவதற்குப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இதே மாதிரி நாட்டியம் பயிலுவதற்குச் சீரிய முறையில் வந் துள்ள நூல்கள் சிலவே. இந்தப் புஸ்தகத்தில் நாட்டிய சம்பந்தமான சாஸ்திர விஷயங்களைப் படிப்படியாக எல்லோரும் புரிந்து கொள்ளும் முறையில் விளக்கப்பட்டுள்ளது. நாட்டியக் கலைச் சொற்கள், ஸபாபதியின் லக்ஷணம், ஆடுபவரின் லக்ஷணம், கிண்கிணியின் லக்ஷணம், நாயக-நாயகிகளின் வித்தியாசங்கள், ரஸங்கள் முதலிய விஷயங்களும், பல்வேறு ஹஸ்தங்களின் விளக்கங்களும் வினியோகங்களும் இந்நூலில் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன. ஹஸ்தங்களை விளக்கும் படங்களும் அமைந்துள்ளன.

தஞ்சாவூர், நாட்டியக் கலைக்குப் பெயர்போனது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். சமீப காலத்திலிருந்த பிச்சையா பிள்ளை அவர்கள் நாட்டிய சாஸ்திரத்திலும், பயிற்சி யிலும் சிறந்த வல்லுநர் ஆவர். அவருடைய உதவியைக் கொண்டு அவருடைய உற்ற நண்பர் கணபதி ஐயரவர்கள் தயாரித்ததை அன்னரின் கலை அன்பர்கள் தொகுத்து வெளியிடும் இப்புஸ்தகம், மாணவ மாணவிகளுக்கு மட்டுமே யன்றி, நாட்டியக் கலையின் விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களுக்கும் பயன்படும்.

19 மார்ச் 1964. **பி. சாம்பமூர்த்தி.**

நூன்முகம்

கலைத் தெய்வமான கூத்தப்பிரானையும், தமிழ்த் தாயையும் தாள் வணங்கி,இக்கலைப் புத்தகத்தைத் தமிழ்ப்பெரு மக்களுக்கு மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றோம். இதில் எங்கள் குறைகளை நாங்கள் நன்கறிகிறோம். இன்னும் பல நுட்பமான விஷயங்கள் இதில் சேர்க்கப்படவில்லை; மேலும் பல படங்கள் இடம் பெறவில்லை. பாத கலையின் பூரணமான நூல் என இதைச் சொல்வதிற்கில்லை என்பதையும் அறிவோம். பல ஆண்டுகள் தாமதமானதினாலும், மேலும் தாமதிக்க வேண்டாமென்ற காரணத்தினாலும் இதைப் பிரசுரிக்கிறோம். அடுத்து வரும் பதிப்புகளில் இக் குறைகளை நிவர்த்திக்க முயல்கின்றோம்.

இப்புத்தக வேலை தொடங்கி பல ஆண்டுகளாகியும், பல்வேறு காரணங்களால் காலங்கடந்து வெளியிடும்படி நேரிட்டது. காலஞ் சென்ற தஞ்சை திரு. கணபதி அய்யர் மிகுந்த பிரயாசையின் பேரில் பல அரிய பொருள்களையும், படங்களையும் சேகரித்தார். ஆரம்ப முதல் அவருடனிருந்து இத் தயாரிப்பு வேலையில் பங்கு கொண்ட நிலையில், அவற்றுடன் மேலும் பல விஷயங்களைச் சேர்த்தும், பல படங்களைத் தயாரித்தும் இப்போது இதை வெளியிடுகின்றோம். ஹஸ்தப் படங்களையும், சில விபரங்களையும் கொடுத்துதவி இப் புத்தகத்தில் சேர்த்துக் கொள்ள அனுமதியளித்த திரு. கணபதி அய்யரின் மனைவியாருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் முதற்கண் எங்கள் இதயம் நிறைந்த நன்றி.

தமது பல முக்கிய வேலைகளினிடையே இந்நூல் இன்றைய உருவில் அமைய மிக்க பிரயாசை எடுத்துக் கொண்ட, அரிய முகவுரை ஒன்றை எழுதி உதவிய தமிழறிஞர்-கம்பதாஸன்-திரு. சா. கணேசன் அவர்களுக்கும், கேட்டவுடன் தயங்காமல் சிறப்புரை அளித்துதவிய பேராசிரியர் திரு. பி. சாம்பமூர்த்தி அவர்களுக்கும், இந் நூலுக்கே ஒரு அணிகலனாக விளங்கும் தன்மையில் சிறப்பான அணிந்துரை ஒன்றை எழுதி அனுப்புவித்த நம் மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. C. சுப்பிரமணியம் அவர்களுக்கும் எங்களின் உளம் நிறைந்த நன்றியும், வணக்கமும். இப் பணியில் எங்களுக்கு பல துறைகளிலும் ஒத்துழைத்த கலையன்பர்கள் அத்துணைப் பேருக்கும் எங்கள் நன்றி.

இறுதியாக—ஆனால் குறிப்பாக—இந்நூலைச் சிறந்த முறையிலே, தங்களுக்கே உரித்தான பாணியில், பல இன்னல்களுக்கும் மத்தியில் வெளியிட்டுத்தந்த-புத்தக வெளியீட்டாளர்-பழனியப்பா சகோதரர்கள் எங்களின் பாராட்டுக்கு உரியவர்கள். அவர்கட்கு எங்களின் நன்றியும் வணக்கமும் உரித்தாகும்.

காரைக்குடி
7-8-64

டி. கே. ராஜலெட்சுமி
டி. ஆர். அருணாசலம்

பரதகலைச் சித்திரம்



நடனநாயகன்

> " உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
> நிலவுலாவிய நீர்மலி வேணியன்
> அலகில் சோதியன் அம்பலத்தாடுவான் "
> ஆன இறைவனே, இப்பரதக்கலையின்
> கண்கண்ட வடிவம்.

இந்த சராசரம் நிறைந்த உலகம் முழுமையும் சரீரபிநய மாகவும், நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், பதினெண் புராணங்களும், சொல்லபிநயமாகவும், சந்திரன், நட்சத் திரங்கள் முதலியவை ஆஹார்யபிநயமாகவும், தானே ஸாத்விகபிநய ஸ்வரூபமாயுள்ள ஈசுவரனைப் பிரார்த்திக் கின்ருேம்.

இவ்வாறு ஈசனைத் தோத்தரித்த பிறகு கடவுளின் ஆசி யால் பெற்ற நுண்ணிய அறிவைக் கொண்டு, ஆத் மிகம், தெய்விகம், பௌதிகம் என்று கூறப்படும் மூவித தாபங்களையும் போக்கக் கூடிய நர்த்தனக் கலையின் பிறப்பையும், அதன் லக்ஷணத்தையும் தெரிந்து கொள்ள முயல்வோம்.



நாட்டியத்தின் பிறப்பு

நர்த்தனம் மூவகைப்படும் :—அவை—நாட்டியம், நிருத்தம், நிருத்யம் என்பனவாம்.

முதன் முதலில் பிரம்மதேவன் நாட்டிய வேதத்தைப் பரத முனிவருக்குபதேசித்தார். பரதர் அந்த நாட்டியத்தை கந்தருவர், அப்ஸரஸ் ஸ்திரீகள் என்று சொல்லப்படும் விண்ணுலக வாசிகளுக்குப் பயிற்றுவித்து, அவர்களைக் கொண்டு நாட்டியம், நிருத்தம், நிருத்யம் ஆகிய மூன்றையும் மகாதேவன் முன் நடத்திக் காட்டினர்.

அப்பொழுது மகாதேவனகிய சிவபெருமானுக்கே உரித்தான தாண்டவம் என்னும் உத்தமமான (கடுமையான) நர்த்தனத்தைப் பரத முனிவருக்குக் கற்பிக்கும்படி தன்னுடைய கணங்களில் மேலானவராகிய நந்திகேசுவரருக்கு உமாமகேசன் ஆக்ஞாபித்தார். அவ்விதமே நந்திகேசுவரரும் பரத ரிஷிக்கு தாண்டவ நர்த்தனத்தைக் கற்பித்தார். பின் பரதருக்கெதிரில் சிவபெருமான், தனது பிராட்டி பார்வதிக்கு மிகவும் கோமளமான லாஸ்யம் எனும நாட்டியத்தைக் கற்பித்தார். அதனையும் பார்வதியின் வாயிலாய் பரத ரிஷி கற்றுக் கொண்டார்.

பரத முனிவர் ஈசுவரனல் நந்திகேசுவரர் மூலமாக தாண்டவமும், பார்வதியின் மூலமாக லாஸ்யமும் கற்றுக் கொண்டமையால் தாண்டவம் ஆடவர்களுக்கு ஏற்றதென்றும், லாஸ்யம் மிகவும் கோமளமான பெண்களுக்கு ஏற்றதென்றும் புலனகிறது. ஏனெனில், பெண்கள் கோமளமான காத்திரமுடையவர்களாதலால் அவர்களால் நடிக்கப்பட்டால்தான் லாஸ்யத்தின் மேன்மை விளங்கும்.

இவ்விதம் நந்திகேசுவரரைக் கொண்டு தாண்டவத்தினைப் பயின்ற பரத ரிஷி முதலியவர்கள் அதனை மனிதர்களுக்கும் கற்பித்தார்கள்.

அம்மட்டுமன்றி நாட்டியம், நிருத்தம், நிருத்யம் இவை மூன்றினையும், பரதர் கந்தருவர்களுக்கும் அப்ஸரஸ் நங்கையர்களுக்கும் சொல்லிக் கொடுத்ததால் நாட்டியத்தைப்பற்றிய சகல விஷயங்களும் வெளியாயின.

ஆனால், ரிஷீஸ்வர்களிடமிருந்து ஆடவர்கள் நாட்டியத்தைக் கற்றுக் கொள்வதற்கு முன்பே புகழ் பெற்ற அரசகுல நங்கைகளும், ராஜ கன்னிகைகளும், நாட்டியப் பயிற்சி பெற்றார்கள்.

சிவபக்தர்களில் மேலானவனான பாணாசூரனுடைய மகள் உஷை பார்வதியின் தோழியானதால், பார்வதி தன் தோழி உஷைக்கு, இந்நாட்டியக் கலையைக் கற்பிக்க, அவள் துவாரகையில் வசிக்கும் கோபிகைகளுக்கு இக் கலையினைக் கற்பித்தாள். அவ்விடைக்குலப்பெண்கள் ஸௌராஷ்டிர தேசத்திலிருந்த பெண்களுககும் கற்றுக் கொடுத்தனர். அவர்கள் பிறநாட்டுப் பெண்களுக்கு இக் கலையினைக் கற்பிக்க இவ்விதமாக இவ்வுலகில் நாட்டிய சாஸ்திரம் பரவலாயிற்று.

நாட்டியத்தின் பெருமை

ரிக் வேதத்தினின்று வாக்கியமும், யஜுர் வேதத்தினின்று அபிநயமும், சாம வேதத்தினின்று கானமும், அதர்வண வேதத்தினின்று ரஸமும் ஆகிய நான்கையும் ஒன்றாக்கி சதுர்முகன், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு பெரும் பேறுகளையும் அளிக்க வல்ல நாட்டிய சாஸ்திரத்தை நிர்மாணித்தார்.

இந்நாட்டியத்தைப் பார்ப்பதால் நற்கீர்த்தி, முதிர்ந்த அனுபவம், அழகு, சாதுரியம் இவை நான்கும் அதிகரிக்கின்றன என்பது கருத்து. மேலும், ஈகை, எடுத்த காரியத்தில் திடசித்தம், சுகம்-துக்கம் இரண்டையும் சமமாகக் கொள்ளுதல், சிருங்கார இன்பங்கள் ஆகிய குணங்களும் நாட்டியத்தைப் பார்ப்பதால் பெறக் கூடும்.

நாட்டியப் புகழ்ச்சி

நாட்டியத்தைப் பார்க்கும் மனிதன் தர்மார்த்த காம மோக்ஷமாகிய நான்கு புருஷார்த்தங்களையும் பெறுகிறான் என்று கூறப்படுகிறது. மோக்ஷம் என்பது பேரானந்தப் பிராப்தியாகும். ஆனால், பேரானந்தம் இகத்தில் கிட்ட மாட்டாது நாட்டியத்தைப் பார்ப்பதால் உண்டாகும்

ஆனந்தமே, பேரானந்தத்தை உணர்த்துகிறது, என்று காரணம் காட்டல் எளிதாகும்.

நாட்டிய கிரமம்

வைராக்கிய சீலரும், எப்பொழுதும் பிரஹ்ம நிஷ்டையில் சிறந்தவருமான நாரத முனிவரைப் போன்ற மஹரிஷிகள் இந்த நாட்டியக் கலையில் லயித்திருக்கின்றார்கள். அதனால் ப்ரஹ்மானந்தத்தைவிட நாட்டியானந்தமே சிறந்ததென்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். எனவே பேரானந்தத்தைவிட நாட்டியானந்தமே சிறந்ததென்பது கருத்து.

இங்ஙனம் எல்லோரும் நாட்டியக் கலையை அனுபவிக்க வேண்டுமென்றால் நாட்டியானந்தமே ப்ரஹ்மானந்தத்தை விடச் சிறந்ததென்றும், மோக்ஷத்தைப் பெறுவதற்குக் காரணமானதென்றும் அறிந்து மன்னர்கள் முடிசூட்டும் காலத்திலும், யாத்திரைக்குப் புறப்படும் காலத்திலும், ஆலயங்களின் திருவிழாக் காலத்திலும், திருமணம் நடைபெறுங் காலத்திலும், கிராமப் பிரவேச காலத்திலும், புது மனை புகும் காலத்திலும், புத்ர ஜன்ம காலத்திலும் நான்முகனால் பரதருக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட நிருத்தத்தைப் பார்த்தானந்திக்க வேண்டும் என்று பெரியோர் கூறுவர்.



பரத ஆசான்

சிஷ்யன் வணங்கக் கூடிய தன்மையும், எல்லாப் பிராணி களிடத்தும் அதனதன் மனோ துக்கம் நீங்கும்படியான கிருபா நோக்கமும், தன்னால் யாதொன்றும் முடியாமற் போனாலும், சகல பிராணிகளிடமும் நிறைந்திருக்கும் வல்லபக் கடவுள் கிருபையால் முடியுமாதலால், தன் சிஷ்யன் மனத்திலிருக்கும் அழுக்கை நீக்கும்படி கோரும் தெய்வ பக்தியும், மேலான யுக்தியும், கல்வியை எளிதாகக் கற்றுக் கொடுப்பதில் தேர்ச்சியும், சிஷ்யன் மனத்தில் படும்படியாக உதாரணங்களால் எடுத்துக் காட்டும் வல்லமையும், தன் சிஷ்யர்கள், ஞானஹீனத்தினாற் செய்யுங் குற்றங்களைப் பொறுத்து, அவர்கள் தன்னிடம் கொண்ட பக்திக்குத் தகுந்தபடி அநுக்கிரகித்தும், அநேக சாஸ்திர புராண ஆகா மாதிகளின் இரசத்தை உள்ளுணர்ந்தும், உத்தமமான இரகசியார்த்தங்களைத் தெரிந்து கொண்டும், அநேக சபை களில் பிரசங்கித்துப் பெற்ற கீர்த்தி பரவியும், எவ்வித அற்ப வித்வான்களாலும் பேதிக்கப்படாத தேர்ச்சி பெற்ற மன வலிமையும், பெற்றிருப்பதுடன்—

சிஷ்யர்கள் ஏழைகளாய் இருந்தால் அவர்களுக்கு ஆதரவு தந்து காப்பாற்றும் சக்தியும், யாவரும் மேம்பாடான காரியங்களைக் கோரும்படி சிறந்து விளங்கியும், சிஷ்யர் களுக்கு உண்மைகளைச் சந்தேகமறக் காட்டும் பெருமையும், நல்லோர்களே வந்து அடிக்கடி கலந்து பேசும் தகுதியும், உலக நடவடிக்கைகளைச் செவ்வையாக அறிதலும் ஆகிய நற்குணங்களை உடையவர்களே, இந்நாட்டியக் கலையைப் பயிற்றுவிக்கத் தக்க குரு ஆவார்கள்.

இவ்விதம் சற்குணம் வாய்ந்த இவர்கள், மத்ஸியம், கூர்மம், பிரமரம் எனும் தந்திரங்களைக் கொண்டு விளங்கு பவர்களாய் இருப்பார்கள்.

மத்ஸியம் :

மீனானது தன் சினையைப் பீச்சித் திரும்பிப் பார்த்த அளவில், அதுகள் குஞ்சுகளாகித் தாயைத் தொடர்ந்து விளையாடுவதுபோல, ஞான ஜீவனில்லாத சிஷ்யர்களுக்கு ஆசான் ஆனவர் கிருபா நோக்கம் செய்தவுடன், சிஷ்யர்கள் மனம் பொங்கி ஆசானை அடுத்து அவர்போல வாழும்படி செய்தல்.

கூர்மம் :

ஆமை முட்டையைக் கரையிலிட்டு நீரில் மூழ்கி, அம் முட்டையினிடத்து ஞாபகத்தைச் செலுத்தி இருக்கும் வலிமையால், அம்முட்டை குஞ்சாகித் தன்னிடம் வரும்படி செய்வதுபோல, ஆசான் சிஷ்யனை ஒரு தடவை பார்வையிட்டுப் பிறகு அவனுக்கு ஆசீர்வதித்து, அடிக்கடி தன் ஞாபகத்தினாலேயே சிஷ்யன் மனந்தேறித் தன்னைப் போலடையும்படி பண்ணுதல்.


பிரமரம் :

குளவி எங்கேயோ கிடக்கும் ஒரு புழுவைக் கொண்டு வந்து தன் கூட்டில் வைத்து, அடிக்கடி தான் கொட்டுதல் போல பாசாங்கு செய்வதனால் அப்புழுவுக்கு குளவியின் ஞாபக மீறுதலால் அக்குளவியின் உருவைப் பெறுவதைப் போல, அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கும் சிஷ்யனை ஆசான் தன்னிடம் கொண்டு வந்து வைத்துக் கொண்டு பொய்யாகப் பயமுறுத்தி அவனைத் தெளிவடையும்படி செய்தல்.

இப்படிப் பட்ட தந்திரங்களை உடையவர்களே உத்தம குரு இலட்சணத்தின் தகுதிக்கு உரியவர்களாம்.

கற்கும் முறை

தான் அப்பியாசிக்கும் முறையறிந்து கற்றல், பாடத்தைப் போற்றல், ஆசானிடத்தில் அமைதியாக இருந்து பாடங் கேட்டல், கேட்ட பாடத்தைச் சிந்தித்தல், தன்னுடன் கற்பவர்களோடு சேர்ந்து இருத்தல், பழைய பாடம் முதலியவைகளில் கேள்வி கேட்டல், அந்நியர் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லுதல், பிரசங்கித்தல் போன்ற குணங்களைப் பயில்வோர் கைக்கொள்ளுதலால் அவர்களின் கல்வி பரிசுத்தமாகப் பிரகாசிக்கும்.



அரங்கம்

அரங்கத்தின் வடக்கு முகத்திலேனும் கிழக்கு முகத்திலேனும் சிம்மாசனத்தின் மீது சபாபதி இருக்க,அவன் தேவி அலங்காரங்களுடன் இடப்பக்கத்தில் இருக்க, வலப்பக்கத்தில் அமைச்சனும், வலமிடங்களில் கவிநாயகர்களுமிருக்க, மற்ற புவி அரசர்களும் நின்றிருத்தல் சபாமண்டபத்தின் சீராகும்.

அரங்க நாயகன்

ஸ்ரீமான், சகல சாஸ்திரம் உணர்ந்தவன், கலா சோதனை தெரிந்த நிபுணன், பாவமற்றவன், நற்குணம், தயவு,சத்தியவாக்கு, தாட்சண்யம் இவற்றை உடையவன், பூமான், பிரசன்னமுகன், தரும சிந்தனை, கீர்த்தி, பெருமை ஆதரவு இவற்றை உடையோன், புண்ணியன், ஈகையாளன், புகழ், சௌந்தர்யம், ஞானம் இவற்றில் மனம் செலுத்தும் கனநய விலாசமுடையவன், காமன் ஒத்த அழகுடையவன், யூகமுடையவன், இலக்கண இலக்கியமறிந்தவன், கனவான், தராதரம் அறிந்த சதுரன் இத்தகையோன் சபைக்கு அதிபனுவான்.



அரங்கினர்

இரசிகர், மனமாசற்றவர், நடுநிலையில் உள்ளவர், மேன்மையுடையோர், சாவதானமுள்ளோர், நடனக் குற்றங் களைப் பொறுத்து நீதியைக் கூறுபவர், பாவ புண்ணியம் உணரும் சாமர்த்தியம், நல்ல குணம், தைரியம் முதலிய வினயமுடையோர், மதமாச்சரியம், துர்வாதம், தீய நினைப்பு என்பன இல்லாதவர், உபகாரசித்தம், பேச்சுத்திறம், பொறுமை ஆகிய இவற்றினை உடையவர்களே சபையின் இலட்சணத்தைத் தாங்கிநிற்கும் தன்மை பெற்றவர்ஆவார்.



பக்கவாத்தியங்கள்

சபைத் தலைவன் எதிரில் பாத்திரமும், அவன் வலப் புறம் மத்தளம், அருகில் சங்க, காகள வாத்தியங்கள், இடப்புறம் காயகன், பின் சுருதிக்காரன், அவனருகில் லாஸ்யக்காரன், அவன்பின் பரதசரணியைத் தெரிவிக்கும் நடனாசிரியன் ஆகியோர் நிற்பர்.

அரங்கதேவஸ்துதி

வேதங்கள் கிளைகளாகவும், சாஸ்திரங்கள் மலர்களாக வும், கற்றோர்கள் தும்பிகளாகவும் அமைந்த சபையாகிய கற்பக விருக்ஷத்தைப் புகழ்ந்து வணங்குவேன்.

பூமகள் வணக்கம்

ஹரிபக்தி உண்டாகி அழகிய இரத்தினப் பணிகள் பூணும் பூமாதேவியே! பெரும் இரத்தினங்களைத் தரும்தாயே! கூர்மம், ஆதிசேஷன் இவர்களின் முடியில் அமைந்தவளே! மேருவைத் தாங்குபவளே! திக்கஜங்களைக் கொண்டவளே! ஐம்பூதங்கள் அமைந்த மின்னே! பொறுமைச் செல்வி! நடனத்தில் என் பாதங்கள் உன்மேற்படும் குற்றங்களைப் பொறுத்தருள்வாய்! பாதுகாப்பாய்!

பரதகுல பாக்கியமே! பாவரஸ ஆனந்த உருவாய் எழுந்த ஒளியே! ஜகன் மோகனமே! இன்பவுலமே! அரங்க மாக வளரும் அம்மையே! என்னை ஆள்வாயாக.

நடனமாதின் இலட்சணம்

சிவந்த மேனியுடன். மலர்ந்த தாமரைமலர் போன்ற ஒளியுடைய முகத்தை உடையவளாயும், மிகப்பருத்தல், மிக இளைத்தல், மிக உயரம், மிகக்குறுகல் இல்லாத உடலும் தக்க ரூபமும், உத்தம தனங்களுடன் அறிவு உரம் பெற்ற வளாயும், மனோகரம், தாளசுரஞானம், விசால நேத்திரம், ஒருங்கோடு அமைந்த அவயவஅமைப்பு, முகமலர்ச்சி இவற்றைக் கொண்டவளாயும், ஹஸ்த அங்க வின்யாசங்களை

நன்கு தெரிந்தவளாயும், ஒத்திய தாளச்சுருதி தவருத சொல்லே ஒக்க அடித்த பிறகு, தான் கற்றகல்வி மறவாமல் சாஸ்திர விசாரணேயில் கருத்தை ஊன்றிப் பித்து நோய், சலிப்பு, மெலிவு, பின் செல்லுதல் முதலிய குற்றங்கள் இல்லாமல், பக்தியுடன் மதுரவாசகம் பேசி, இசைப் புலமை நிறைந்த பாடலேப் பாடும் இனிய குரலேப் பெற்றவளாயும், கோபமில்லாமல், துறவிகள், தெய்வம், ஆசான், இவர்களிடம் பக்தி கொண்ட வளாயுமிருப்பவளே உத்தம நடன நடிகைக்குரியவள் ஆவாள். மற்றும் இத் தகையவள் சபையினருக்கு முன்னே, கீழ்த்திசையில் திரையை நீக்கி எழுந்தபூரணச் சந்திரன் போலவும், பூத்த வஞ்சிக்கொடி போலவும், கார்மேகம் கிழித்து மின்னல் வெளிப்பட்டது போலவும் விளங்குவாள்.

அபாத்திர நடனமாது

பூவிழுந்த கண், கூந்தலின்மை, அம்மை வடுக்கள் உள்ளமுகம், தொய்ந்த தனம், மிகப்பருத்திருத்தல், மிக இளேத்திருத்தல், பனேபோன்ற உயரம், அதிகக் கூனல், மிகக் குட்டை, மாற்றுக்கண், முழிக்கண், நீர்க்கண், மாலேக் கண், முதலிய அவலட்சணங்களேக் கொண்டவர்களும், சொற்பொருளறியாமை, குறிப்பறியாமை, பொறுமை யின்மை, வாத்தியம், கானம், நிருத்தம் இவற்றின் விதங்கள் தெரியாமை, குருவின் சொல்மீறிய நடத்தை உடையவள் கோபம், சபைமுன்னே கூந்தலேக் கோதி முடித்தல், உடலேச் சொறிதல், ஈர நாக்கினுல் உதடுகளேத் தடவுதல், உதட்டைக் கடித்தல், மூக்கைத் தடவுதல், இருகுரலால் பேசுதல், தரையில் விழுந்த ஆபரணத்தைத் தேடல்போன்ற செய்கைகளுடன், ஈனசுரமாய் விளங்குபவர்கள் நடன நடிகையாவதற்கு 'அபாத்திரர்கள்' ஆவார்கள்.

கிண்கிணி

வெண்கலம், செம்பு, வெள்ளி இம்மூன்றினுள் ஒன்ருல் கிண்கிணி செய்யப்படும். இதற்கு ஆதி தெய்வம் தாராகணம் ஆகும். அதனேக் கறுப்புக் கயிற்றில் கோத்து உறுதியாய் முடிப்புப் போடவேண்டும்.

கால் ஒன்றுக்கு இருநூறு வீதம் கெச்சை கட்டி அணிவது நல்லது. அல்லது வலக்காலில் நூறும், இடக் காலில் நூறும் கட்டி நடனமாதானவள் ஆடலாம்.

விநாயக வணக்கம்

முதலில் கணபதிக்கு முரசு வாத்தியத்துடன் பூஜை நைவேத்தியங்கள் செய்து ஆகாயத்திற்கும், பூமிக்கும் அந்த அந்த வாத்தியங்களை முழக்கியபிறகு, குருமொழியை மனங்கொண்டு, ஆலாபனம் செய்து கட்டுப்பாட்டுடன் பாடி ஆடுதலே பரம்பொருளுக்கு ஏற்கும்.

நாட்டிய ஆரம்பம்

ஆடுபவள் இரண்டு கைகளை இடுப்பில் வைத்து நிமிர்ந்துகொண்டு, இரண்டு பாதங்களும் ஒன்று சேர நின்று, இரண்டு கைகளையும் சிகரமுத்திரைகளாக்கி மார்பில் இயற்கையாய் நிறுத்தி, கால்கள் இரண்டையும் உறமாகத் தட்டி, பிறகு இரு கையை டோளமாய்ப் பூமியைத் தொட்டு நன்ருக நிமிர்ந்து வணங்குதல், நாட்டியத்தின் ஆதியிலும் இறுதியிலும் செய்யும் வந்தனங்களாகும்.

மேற்சொன்ன பூர்வாங்க ஆரம்ப விதியை முடித்துக் கொண்டு நாட்டியப் பாத்திரமானவள், நிருத்தியத்தைத் தொடங்கவேண்டும்.

நடன பேதங்கள்

ஓதுதல், அபிநயம், கீதம், ரஸம் என்ற நான்கு அமைப்புகளுடன் கூடிய நடனம், மூன்று விதங்களாகும். அவைகளாவன : நாட்டியம், நிருத்தம், நிருத்தியம்.

நாட்டியம்

நாடகத்திற்குச் சிறந்ததான ரஸாபிநயம், பாவாபிநயம் இவைகளைத் தத்ரூபமாக நடித்துக் காட்டுவதே நாட்டியம் எனப்படும். ஆனல், நாட்டியம் எனும் வார்த்தை ரஸத்தையே குறிக்கிறது. எனவே அதை ரஸமாகக் கொள்ளலாமோ வெனில், ரஸத்திற்கு நர்த்தன பேதங்கள் பொருந்துவது இல்லை. ரஸமானது கிரஹிக்கப்படவேண்டு மாயின், நாட்டியம் நடித்துக் காட்டப்படவேண்டும். ஆகை யால் இதை அனுசரித்துப் பழமையான கதைகளைக் காட்டி அபிநயிக்கப்படுவது நாட்டியமாகும்.

நிருத்தம்

அபிநயங்களின்றி அங்கப்பிரத்யங்கங்கள் இவைகளுக்குச் சொல்லப்பட்ட முறையில், சரீரத்தை மட்டும் வேண்டிய

வகையில் அசைப்பதும், வளைப்பதும் நிருத்தமாகும். இந்நிருத்தம் ரஸபாவங்களை நீக்கிப் பொருத்தப்பட்ட விந்யாசமாம். அதாவது, தாளம்—லயம் ஆகியவற்றைப் பொருத்திக் காட்டல் என்பது அதன் கருத்து.

நிருத்தியம்

கீதம், அபிநயம், பாவம் இவைகளைக் கொண்டு தாளக்கட்டுவிடாமல் ஆடவேண்டியவையே இந்நிருத்தியமாம். வாயினால் பாடி, பாட்டின் பொருளை முத்திரைகளினாலும், பாவங்களைக் கண்களினாலும், தாளத்தினைப் பாதங்களினாலும் தட்டி இதனை ஆடிக்காட்ட வேண்டும். சுருங்கக் கூறினால், ரஸபாவங்களைக் கூட்டி அபிநயித்தலே நிருத்தியமாகும். மேலும் இந்நிருத்தியம், நாட்டியம், நிருத்தம் இவைகளைவிடத் தலை சிறந்ததாயும், முக்கியத்துவமுள்ளதாயும் விளங்கும்.

"கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல, ஐயநுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு" என்பது கம்பர் வாக்கு.

தாண்டவ லாஸ்யம்

தாண்டவ லாஸ்யமெனும் இருவகைக் கூத்தினுள் தாண்டவத்தில் உத்தான தாண்டவம் என்பது ஒரு கூறு. அது நின்று அபிநயித்தலாகும். சுகுமார லாஸ்யமென்பது ஒரு கூறு. அது உட்கார்ந்து அபிநயித்தலாகும்.

அபிநயம்

நிருத்தியத்தில் முதன்மையாக உள்ள அபிநயம் நான்கு வகைப்படும். அவையாவன :

(1) ஆங்கீகம், (2) வாசிகம்,
(3) ஆஹார்யம், (4) ஸாத்விகம்.

ஆங்கீகம் :—அங்கங்களின் அசைவுகளினால் காண்பிக்கப் படும். அபிநயம் 'ஆங்கீகம்' எனவும்படும்.

வாசிகம் :—காவியங்களிலும், நாடகங்களிலும் காணும் வார்த்தைகளின் உபயோகத்தைக் கொண்ட அபிநயம் 'வாசிகாபிநயம்' எனப்படும்.

ஆஹார்யம் :—வளைகளாலும், மாலைகளாலும், மற்றும் தக்க உடைகளாலும் அலங்கரித்துக் கொண்டு செய்யும் அபிநயம் 'ஆஹார்யம்' எனப்படும்.

ஸாத்விகம் :—மனோநிலையை (ஸாத்விக) விளக்கிக் காட்டும் பாவங்களைக் கொண்டது 'ஸாத்விக அபிநயம்' எனப் பெயர் பெறும். சமாதிநிலை, வியர்த்தல், மயிர்க் கூச்சம், குரல் மாற்றம், நடுங்குதல், முகவர்ணபேதம், கண்ணீர் வடித்தல், மூர்ச்சையாதல் போன்ற எட்டுவித மனோநிலைகளைக் காண்பிக்கவே ''ஸாத்விக அபிநயம்'' உபயோகப்படும்.

இனி ஆங்கீக அபிநயத்தின் சாதனங்களும், அங்க அசைவுகளும், என்ன என்று பார்ப்போம்.

764

ஆங்கீக அபிநயம்

அங்கம் பிரத்யங்கம் உபாங்கம்

மேற்கண்டவாறு ஆங்கீக அபிநய சாதனங்கள், 'அங்கம்', 'பிரத்யங்கம்', 'உபாங்கம்', என 3 வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

அங்கம் :—தலை, கைகள், மார்பு, இருபக்கங்கள், இடுப்பு, பாதங்கள் என ஆறாகும். சிலர் கழுத்தையும் ஓர் அங்கமாகக் கொள்வதுண்டு.

பிரத்யங்கம் :—தோள்கள், கைகள், முதுகு, வயிறு, தொடைகள், முழங்கால்கள் என்று ஆறாகும். சிலர் மணிக்கட்டுகள், குதிகால்கள், கழுத்து இவைகளையும் பிரத்யங்கங்களில் அதிகப்படியாய்ச் சேர்த்துக்கொள்ளுகின்றனர்.

உபாங்கம் :—தோள்கள், கண்கள், புருவங்கள், கண்விழிகள், கன்னங்கள், மூக்கு, தாடைகள், உதடுகள், பற்கள், நாக்கு, முகவாய்க்கட்டை, முகம், முதலியவைகளுடன், குதிகால்கள், மணிக்கட்டுகள், கால்விரல்கள், கைவிரல்கள் இவைகளும் பூர்வ சாஸ்திரப்படி உபாங்கங்களேயாகும்.

ஒரு அங்க உறுப்பு அபிநயத்தில் உபயோகப்படும் போது பிரத்யங்கம், உபாங்கங்களையும்கூட நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மேற்சொன்ன மூன்று வித சாதனங்களிலும் முக்கியமானவை சிலவேயாகும். அவை யாவன:—தலை, கண்கள், கழுத்து, கைகள், கால்கள்.

இனி இந்த உறுப்புகள் உபயோகப்படும் போது உண்டாகும் பேதங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சிரோபேதங்கள்

ஸமம், உத்வாஹிதம், அதோமுகம், ஆலோலிதம்,
துதம், கம்பிதம், பராவிருத்தம், உத்க்ஷிப்தம்
பரிவாஹிதம்,

சிரோபேதங்கள் என (தலை வேறுபாடு) 9 வகைப்படும்.

ஸமம் :—தலையை மேலே உயர்த்தாமலும், கீழே தாழ்த்தாமலும், அசைவற்ற நிலையில் வைத்திருப்பது 'சமசிரசு' எனப்படும்.

பிரயோகம் :—நிருத்யாரம்பம், ஜபம் செய்தல், கர்வம், விஸ்வாஸம், பிராணீய கோபம், நிஷ்கிரியை (வேலை இல்லாமை) இவற்றிற்குச் 'சமசிரசு'பயன்படும்.

உத்வாஹிதம் : உயரே நிமிர்த்திய தலை உத்வாஹிதம் ஆகும்.

பிரயோகங்கள் :—கொடி, சந்திரன், ஆகாயம், மலை, ஆகாயத்தில் செல்லக்கூடிய வஸ்துக்கள், உயரமான வஸ்துக்கள், இவற்றைக் காட்ட 'உத்வாஹித சிரசு' பயன்படும்.

அதோமுகம் :—குனிந்த தலை அதோமுகமாகும்.

பிரயோகம் :—வெட்கம், துக்கம், வணக்கம், அநாவசியமான கவலை, மயக்கம், கீழே உள்ள வஸ்துக்களைக் காட்டுவது, தண்ணீரில் மூழ்குவது முதலியவற்றைக் குறிப்பிட "அதோமுக சிரசு" பயன்படும்.

ஆலோலிதம் :—தலையை வட்டமாகச் சுற்றுவது ஆலோலிதமாகும்.

பிரயோகம் :—தூக்கத்தின் வேகம், பேய் பிடித்திருப்பது, குடிமயக்கம், மயக்கம், பிரயாணம் (சுற்று) அருவருப்பை உண்டாக்கும் அடக்கமுடியாத சிரிப்பு இவைகளைக் காட்ட 'ஆலோலித சிரசு' பயன்படும்.

துதம் :—வலப்பக்கமும், இடப்பக்கமும், தலையைத் திருப்புதல் 'துதம்' எனப்படும்.

பிரயோகம் :—'அது பழக்கத்தில் இல்லை' என்று சொல்லுதல், இருபக்கங்களிலும் விரைவாகப் பார்த்தல், பிறர் உற்சாகத்தைக் குறைத்தல், ஆச்சரியப்

படுதல், வருத்தமுறல், விருப்பமற்ற ஜுரம், பயம், மது அருந்தியவனுடைய முதல் அவஸ்தை, யுத்தம், முயற்சி, தடுப்பது, பழிக்குப் பழி, தன் அவயவங்களைப் பார்த்துப் பக்கத்திலிருப்பவர்களைக் கூப்பிடுவது ஆகிய வற்றை விளக்க "துதசிரசை" உபயோகித்தல் வேண்டும்.

கம்பிதம் :—தலையை மேலும் கீழும் அசைத்தல் 'கம்பிதம்' எனப் பெயர் பெறும்.

பிரயோகம் :—குற்றத்தை எடுத்துக் காண்பித்தல், 'நிறுத்து' என்று சொல்லுதல், விசாரணை, சுட்டிக் காண்பித்தல், அருகிலிருந்து கூப்பிடுதல், தேவதை களைக் கூப்பிட்டுப் பயமுறுத்தல் ஆகியவைகளைக் காட்ட 'கம்பித சிரசை'ப் பயன் படுத்தவேண்டும்.

பராவிருத்தம் :—அலக்ஷியமாய்த் தலையைத் திருப்புவது 'பராவிருத்தப்' ஆகும்.

பிரயோகம் :—'அந்தக் காரியத்தைச் செய்' என்று உத்தரவிடல், கோபம், அவமானம் இவைகளால முகத்தைத் திருப்பிக் கொள்ளுதல், அலக்ஷியம் செய் தல், தலைமயிரை முடிதல், அம்பருத்தூணி முதலிய வற்றைக் குறிக்க 'பராவிருத்த' சிரசு பயன்படும்.

உத்க்ஷிப்தம் :—தலையை ஒரு பக்கமாகத் திருப்பி உயரே தூக்குவது 'உத்க்ஷிப்தம்' ஆகும்.

பிரயோகம் :—"இதைப் பிடி" என்று உத்தரவிடுதல், அல்லது 'வா' என்று அழைத்தல், ஏதாவது ஒரு வஸ்துவைத் தாங்குதல், அங்கீகரித்தல் முதலியவை களைக் காட்ட மேற்கண்ட சிரசு பயன்படும்.

பரிவாஹிதம் :—தலையை மெதுவாகச் சாமரத்தைப்போல் இருபக்கங்களிலும் அசைத்தல் 'பரிவாஹிதம்' எனப்படும்.

பிரயோகம் :—காற்றுநிரப்புதல், ஆமோதித்தல், விரகதாபம், மோகம், தோத்திரம், திருப்தி இவைகளைக் குறிக்க மேற்கண்ட சிரசைப் பயன்படுத்தவேண்டும்.

திருஷ்டி பேதங்கள்

ஸமம், ஆலோகிதம், ஸாசி, ப்ரலோகிதம்,
நிமீலிதம், உல்லோகிதம், அனுவிருத்தம்,
அவலோகிதம்.

மேற்கண்டவாறு கண்களின் தொழில் பேதங்கள் எட்டு வகைப்படும்.

ஸமம் :—ஆனந்தத்தோடு கூடி தேவமங்கையர்போல் பார்ப்பது "ஸமதிருஷ்டி" ஆகும்.

பிரயோகம் :—நாட்டியத்தொடக்கம், அளவுகோல், மற்றவர்கள் என்ன எண்ணுகிருர்கள் என்று யோசித்தல், ஆச்சரியம், விக்ரகம் முதலியவற்றைக் குறிக்க 'சமதிருஷ்டி'யை உபயோகிக்கவேண்டும்.

ஆலோகிதம்:—நன்ருகத் திறந்த கண்களோடு சடாரென்று பார்த்தல் 'ஆலோகித திருஷ்டி'யாம்.

பிரயோகம் :—அநேக விதமான வஸ்துக்களைச் சுட்டிக் காண்பிப்பது, யாசிப்பது, குயவன் சக்கரம் சுற்றுவது முதலியவைகளைக் குறிக்க இந்தத் திருஷ்டி பயன் படும்.

ஸாசி :—தான் இருக்குமிடத்திலிருந்து குறுக்கே பார்த்துக் கடைக்கண்களால் நோக்குவது 'ஸாசி திருஷ்டி' யாகும்.

பிரயோகங்கள் :—அம்பினுல் அடையாளம் செய்வது, மறைமுகமாகச் சொல்வது, பழைய சம்பவத்தை நினைப்பது, முகத்தின் மீசையைத் தொடுவது, கிளி யைக் குறித்துக் காட்டுவது முதலியவற்றிற்கு 'ஸாசி திருஷ்டி' உபயோகப்படும்.

ப்ரலோகிதம் :—ஓர் பக்கத்திலிருந்து மற்ருேர் பக்கத்தில் பார்ப்பது (ஆக இரண்டு பக்கங்களிலும் பார்ப்பது) 'ப்ரலோகித திருஷ்டி' எனப்படும்.

பிரயோகம் :—இரண்டு பக்கங்களிலும் உள்ள பொருட் களைச் சுட்டிக்காண்பிப்பது, அளவுகடந்த வாத்ஸல்யம், நகருதல், மூடத்தனம் முதலியவைகளைக் குறிக்க மேற்கண்ட திருஷ்டியைப் பயன்படுத்தவேண்டும்.

நிமீலிதம் :—பாதி மூடிய கண்களை உடைய பார்வைக்கு 'நிமீலித திருஷ்டி' என்று பெயர்.

பிரயோகம் :— பாம்பு, அடிமைத்தனம், தோத்திரங்களை மனனம் செய்தல், வந்தனம், கூர்ந்து கவனித்தல், தியானம் முதலியவைகளைக் குறிக்க 'நிமீலித திருஷ்டி' பயன்படும்.

உல்லோகிதம் .—உயரே செலுத்திய பார்வை "உல்லோகித திருஷ்டி" ஆகும்.

பிரயோகம் :—கொடியின் உச்சி, உயரம், தேவமண்டலம், பூர்வஜன்மம், கோபுரம், சந்திர வெளிச்சம் முதலியவைகளைக் காட்ட மேற்கூறிய திருஷ்டி பயன்படும்.

அனுவிருத்தம் :—வேகமாக மேலும் கீழும் செலுத்தப்படும் பார்வை "அனுவிருத்த திருஷ்டி"யாகும்.

பிரயோகம் :—கோபப்பார்வை, நண்பர்களை வரவேற்பது முதலியவற்றைக் காட்ட "அனுவிருத்த திருஷ்டி" பயன்படும்.

அவலோகிதம் :—கீழே செலுத்தப்பட்ட பார்வை 'அவலோகித திருஷ்டி'யாகும்.

பிரயோகம் :—நிழலைப் பார்ப்பது, பிரதிபிம்பம், ஆலோசனை செய்தல், விவாதம், நன்கு படித்தல், தன் அவயவங்களைப் பார்த்தல், செல்லுதல் முதலியவைகளைக் காட்ட அவலோகித திருஷ்டி பயன்படும்.

இனி கழுத்தின் பேதங்களையும், அவற்றின் பிரயோகங்களையும் பற்றிச் சிறிது கவனிப்போம்.

கழுத்தின் பேதங்கள்

ஸுந்தரிக்ரீவா, திரச்சீனுக்ரீவா, பரிவர்த்திதாக்ரீவா, பிரகம்பிதாக்ரீவா.

மேலே கண்டவாறு கழுத்தின் பேதங்கள் ஸுந்தரி திரச்சீனு, பரிவர்த்திதா, பிரகம்பிதா என நான்கு வகைப் படும்.

ஸுந்தரிக்ரீவா :—கழுத்தை வலது இடது பக்கமாக அசைத்தல் 'ஸுந்தரிக்ரீவா' ஆகும்.

பிரயோகம் :—நட்பின் தொடக்கம், மிகவும் நல்லது என்ற பாவத்தை விளக்குவது, முயற்சி, மகிழ்ச்சியோடு ஆமோதித்தல் முதலியவற்றைக் காட்ட ஸுந்தரிக்ரீவா பயன்படும்.

திரச்சீனுக்ரீவா :—பாம்பு ஊர்வதுபோல் இரண்டு பக்கங்களிலும் கழுத்தை உயரே அசைத்தல் 'திரச்சீனுக்ரீவா' ஆகும்.

பிரயோகம் :—வாட்பயிற்சி, பாம்பு ஊர்ந்து செல்லுதல் இவைகளைக் காட்ட 'திரச்சீனுக்ரீவா' பயன்படும்.

பரிவர்த்திதாக்ரீவா :—ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் பிறைச்சந்திரன்போல் கழுத்தை வளைத்துச் செல்வது 'பரிவர்த்திதாக்ரீவா' ஆகும்.

பிரயோகம் :—சிருங்கார நடனம், ப்ரியையினுடைய கன்னங்களில் முத்தமிடல் இவைகளைக் குறிக்க மேலே கண்ட 'பரிவர்த்திதாக்ரீவா' பயன்படும்.

பிரகம்பிதாக்ரீவா :—பெண்புருவின் கழுத்து அசைவுபோல் கழுத்தை முன்னும் பின்னும் அசைத்தல் 'பிரகம்பிதாக்ரீவா' ஆகும்.

பிரயோகம் :—தேசிய நடனம், 'நீ, நான்,' என்று சொல்வது, சம்போக காலத்தில் தம்பதிகளின் ஏகாந்தமான சம்பாஷணை, ஊஞ்சலில் ஆடுவது இவைகளைக் குறிக்க "பிரகம்பிதாக்ரீவா"வை உபயோகப் படுத்தவேண்டும்.

கைகளின் அசைவுகள்

பிரஸாரிதம், குஞ்சிதம், ரேஸிதம், பொங்கிதம், யாவிருத்தம், பரிவர்த்தம், சங்கேதம், சீஸனம், அபவேஷ்டிதம், பிரேரிதம், பதார்த்மா, துவேஷ்டிதம்.

பிரஸாரிதம் — கையைத் தூக்குதல்.

குஞ்சிதம் — கையை உள்ளிழுத்தல்.

ரேஸிதம் — மெதுவாகக் கையைத் தலைக்குமேல் தூக்குதல்.

பொங்கிதம் — (கடுமையாகி) கையைப் பதறும்படி காட்டுதல்.

யாவிருத்தம் — கையைப் பிரதக்ஷணமாகச் சுற்றுதல்.

பரிவர்த்தம் — கையை அப்ரதக்ஷிணமாகச் சுற்றுதல்.

சங்கேதம் — சந்தேகம் கொள்ளும் நிலைமையைக் குறிப்பது.

சீஸனம் — பொருளை விரல் மூலமாகக் காட்டுவது.

அபவேஷ்டிதம் — கைகளை, ஒன்றைத் தலைக்கு மேலும் மற்றொன்றை மார்புக்கு நேராகவும் கொண்டுசெல்லுதல்.

பிரேரிதம் — முழங்காலிலிருந்து கைவிரல்களைப் பிரித்து ஆட்டிக் காண்பிப்பது.

பதார்த்மா — பத அர்த்தங்களைக் கையினால் பிரித்துக் காட்டுதல்.

துவேஷ்டிதம் — தேவையில்லை (வெறுப்பு) என்பதைக் குறிப்பது.

ஹஸ்த பேதங்கள்

இனி ஹஸ்த பேதங்களையும் (கையிலுள்ள விரல்களின் மாறுதல்கள்) அவற்றின் பிரயோகங்களையும் பின்வரும் பகுதிகளில் காண்போம்.

ஹஸ்த பேதங்கள்	அஸம்யுத ஹஸ்தங்கள் ஸம்யுத ஹஸ்தங்கள்	என 2 வகைப்படும்.

'அஸம்யுத ஹஸ்தம்' என்ருலே சேராமலுள்ள கைகள் என்று பொருள்.

இது ஒரே ஹஸ்தத்தை உபயோகிக்கும் வகையாகும்.

'ஸம்யுத ஹஸ்தம்' என்பதற்குச் சேர்க்கப்பட்ட கைகள் என்று பொருள்.

இந்த வகையில் இரண்டுகைகளும் உபயோகப்படுத்தப் படும். முதலில் அஸம்யுத ஹஸ்தங்களைப்பற்றியும், அவற்றின் பிரயோகங்களைப்பற்றியும் சிறிது ஆராய்வோம்.

அஸம்யுத ஹஸ்தங்கள்

1. பதாகம்	15. பத்மகோசம்
2. திரிபதாகம்	16. ஸர்ப்பசீருஷம்
3. அர்த்தபதாகம்	17. மிருகசீருஷம்
4. கர்த்தரீமுகம்	18. சிம்ஹமுகம்
5. மயூரம்	19. காங்கூலம்
6. அர்த்த சந்திரம்	20. அலபத்மம்
7. அராளம்	21. சதுரம்
8. சுகதுண்டம்	22. பிரமரம்
9. முஷ்டி	23. ஹம்ஸாஸ்யம்
10. சிகரம்	24. ஹம்ஸபக்ஷம்
11. கபித்தம்	25. ஸந்தம்சம்
12. கடகாமுகம்	26. முகுளம்
13. சூசி	27. தாம்ரசூடம்
14. சந்திரகலே	28. திரிசூலம்

பதாக ஹஸ்தத்தின் விநியோகம்

நாட்டியாரம்பம் :—

இரு கைகளேயும், ஒன்றை ஒன்று உட்புறம் பார்க்கும் படியாகவும், முகத்துச்குஅருகில் இருக்கும்படியாகவும், விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாகவும் அமைத்து, கைகளேச் சிரசுக்குமேல் தூக்கி ஒன்றுடன் ஒன்று பொருந்துவதுபோல இரு கைகளேயும் அருகில் கொண்டு வந்து, பிறகு அந்தந்தக் கையை அதனதன் பக்கத்தில் கொண்டு வந்து, தோள்பட்டை முதல் மணிக்கட்டுவரை கொஞ்சம் சாய்வாக நீட்டி, விரல்நுனி எதிரிலிருப்பவர்களுக்குத் தெரியும்படி முன் கையைத் (மணிக்கட்டுக்குக் கீழ்ப் பட்ட பாகம்-உள்ளங்கை-விரல்கள்) திருப்புதல்.



1. பதாகம்

மேகங்கள், காற்று :

ஒரு கையை முகத்துக்கும், தலேக்கும், நேராகத் தூக்கி அதே சமயத்தில் உள்ளங்கை பூமியை நோக்கி இருக்கும்

படியாய் அமைத்து, கையைக் கொஞ்சம் கொஞ்சமாய் அசைத்துக்கொண்டே, சாய்வாகக் கீழே இறக்குதல்.

வனம், இரவு :

தலைக்கு நேராக, முகத்துக்கு முன்பக்கத்தில், ஒரு கையை வைத்து, உள்ளங்கை தரையை நோக்கி இருக்கும்படி அமைத்துக் கொள்ளுதல்.

பொருட்களைத் தடை செய்தல் :

உள்ளங்கை பிறருக்குத் தெரியும்படியும், முழங்கை முதல் கீழ்க்கை முழுதும் எதிரிலுள்ளவர்க்குத் தெரியும்படி யும் நீட்டி, மணிக்கட்டு முதல் முன்கையினை வலது பக்க மாகவும் இடது பக்கமாகவும் அசைத்தல்.

ஸர்ப்பமிருக்குமிடம் :

உள்ளங்கையை எதிரிலிருப்பவர்க்குத் தெரியும்படி யாகப் பிடித்து, விரல் நுனிகள் பூமியைப் பார்க்கும்படி அமைத்து, முழங்கை முதல், கீழ்க்கையை கீழே இறக்குதல்.

ஆறு :

ஒரு கையை தலை உயரத்திற்கு மற்றொரு பக்கத்திற்குக் கொண்டு போய், பின்னால் இருப்பவர்க்கு உள்ளங்கை சிறிது தெரியும்படி காட்டி, பிறகு கையை முன்னிருந்த பக்கத்துக்கே வரும்படி சாய்வாய் இறக்குதல்.

தேவ சமுகம், அமர மண்டலம் :

கையைத் தலைக்குமேல் மறுபக்கத்துக்குக் கொண்டுவந்து, உள்ளங்கையைப் பின்புறம் இருப்பவர்க்குத் தெரியும்படி திருப்பி, அதே சமயத்தில் விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படி அமைத்து, கொஞ்சம் வளைவாய்க் காட்டுதல்.

குதிரை, துண்டித்தல் :

இடக்கை விரல் நுனிகள் மட்டும், எதிரில் இருப்பவர் களுக்குத் தெரியும்படி வைத்து, முழங்கை முதல் (கீழ்க்கை) நீட்டி, வலது உள்ளங்கை இடது பாகத்தில் இருப்பவர்க்குக் கொஞ்சம் தெரியும்படி இடது காதுக்கு அருகில் பிடித்து, சாய்வாக வேகத்துடன் வலது கையை இறக்கித் தன்பக்கத் திற்குக் கொண்டு வருதல்.

படுக்கை :

விரல் நுனிகள் பின்னால் இருப்பவர்க்குத் தெரியும்படி இரண்டு கைகளையும் அதனதன் பக்கத்திலுள்ள காதுக்கு சமீபத்தில் இருத்தி, உள்ளங்கைகள் காதுகளில் பொருந்துவதுபோலக்காட்டி, தலையினை ஏதாவதொரு கையில் பொருந்துவது போல அமைத்து அந்தப்பக்கம் தலையைச் சிறிது சாய்த்தல்.

புறப்படுதல் :

மணிக்கட்டு மார்புக்கு நேராக வர மணிக்கட்டுக்கு மேல் பட்ட பாகம் எதிரில் இருப்பவரைப் பார்ப்பதுபோல ஆனால் அதே சமயத்தில் விரல்நுனிகள் மட்டும் அவர்களுக்குத் தெரியும்படி அமைத்து, கையை எதிரில் கொண்டுபோதல்.

கீர்த்தி :

அந்தந்தக் கைகளை உள்ளபக்கத்தில் முழங்கை முதல் (கீழ்க்கை) மேலே தூக்கி, உள்ளங்கை பின்னால் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்க் கையைக் கொஞ்சம் பின்னால் கொண்டுபோதல். (இந்தச் சமயத்தில் விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கவேண்டும்.)

அனுக்ரகம் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தெரியும் படியாயும், விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாயும் அமைத்து, கையைக் கொஞ்சம் சாய்வாகப் பிடித்தல்.

தவித்தல் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து உள்ளங்கையைக் கொஞ்சம் பூமிக்கும், சிறிதளவு மார்புக்கும் தெரியும்படியாக வேகமாக அசைத்தல்.

கதவைத் திறத்தலும், மூடலும் :

தோள்பட்டை முதல் முழங்கை வரையில் சிறிது முன்னுக்குக் கொண்டுவந்து, மணிக்கட்டு மார்புக்கு நேராக வரும்படியாக கீழ்க்கையை (முழங்கைக் கீழ்பாகம்) சிறிது மடித்து, மணிக்கட்டின் மேல் பாகத்தை மேலே தூக்கி.

உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாகப் பிடித்தல்.

ஏழு விபத்திகளை விளக்குதல் :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி பிடித்தல்.

அலை :

''காற்று''க்குப் பிடித்த ஹஸ்தம் போலவே மார்புக்கு நேராகப் பிடித்து கையை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குக் கொண்டு வருதல்.

வீதியில் ஊர்வலம் செல்லுதல் :

வலக்கையை இடது பக்கத்திற்கு அருகில் கொண்டு வந்து, உள்ளங்கையை ஆகாயத்தைப் பார்த்திருக்கும் படியாகப் பிடித்து, அப்படியே தாழ்வாகத் தன் பக்கத்திற்குக் கொண்டு வருதல்.

பிரவேசம்:

வலது மணிக்கட்டை மார்பின் நடுப்பாகத்திற்கு நேராகக் கொண்டுவந்து, விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படி பிடித்து, மணிக்கட்டு முதல் மேற்பட்ட பாகத்தை எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தள்ளுதல்.

சமத்துவம்:

கணுக்கையை மார்பின் நடுப்பாகத்திற்கு நேராகப் பிடித்து, உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படியாய் அமைத்து, எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தள்ளி மறுபடியும் தன் மார்புக்குச் சமீபமாகவே இழுத்துக் கொள்ளுதல்.

சந்தனம் பூசுவது :

உள்ளங்கையை வயிற்றில் பொருத்தித் தோளிற்குச் சமீபம் வரை இழுத்தல்.

ஆத்ம பிரயோஜனம் :

உள்ளங்கையை மார்பில் பொருத்துதல்.

சபதம் :—முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னால் இருப்ப வரைப் பார்க்கும்படி நீட்டியும், உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படியும் அமைத்து, மணிக்கட்டு பூமியைப் பார்க்க ஒரு தடவை அசைத்தல்.

மெதுவாகப் பேசு எனல்:

பாம்பு விரல் மூக்குக்குச் சமீபமாய்ப் பொருந்துவது போலவும், மற்ற விரல்கள் வாயில் பொருந்துவது போலவும் அமைத்து, உள்ளங்கை தன்னைப் பார்க்கப் பிடித்தல்.

ஆசீர்வதித்தல்:

முழங்கை முதல் (கீழ்க்கை) எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டி, எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படி பிடித்து, கீழ்க்கையை (உள்ளங்கை நிலைமாருமல்) ஒரு தடவை பூமியைப் பார்க்க இறக்கல்.

பெரிய அரசர்களைக் காட்டல் :

முழங்கை முதல் (கீழ்க்கை) தோள்பட்டையைப் பார்க்க வலப் பக்கமாகத் தூக்கி, கட்டைவிரல் நுனியைக் கொஞ்சம் காதுப்பக்கம் சாய்த்து அமைத்தல். உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியவேண்டும்.

பனையோலை :

வலதுகை இடது முழங்கைக்கு மேலாக இருக்கும்படி யாகவும், உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கும்படியாகவும் அமைத்து, கொஞ்சம் சாய்வாகக் கையைத் தன் பக்கத்திற்குக் கொண்டு வருதல்.

கன்னத்தைக் காட்டல் :

விரல் உட்புறத்தைக் கன்னங்களில் வைத்தல்.

பொருட்களைத் தொடுதல் :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை பூமியைப் பார்க்கப் பிடித்து, மணிக்கட்டுக்கு மேற்பட்ட பாகத்தைப் பூமியைப் பார்க்க ஒரு தடவை அசைத்து, முன் அசைத்த இடம் விட்டு இரண்டு அல்லது மூன்று தடவைகள்மேலே சொன்னபடி அசைத்தல்.

'அதை' 'இதை' என்று சுட்டிக் காட்டுவது:

முழங்கை முதல் (கீழ்க்கை) எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டியும், உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படி பிடித்தும், கீழ்க்கையை இரண்டு-மூன்று தடவை அசைத்தல்.

சமுத்திரம் :

மணிக்கட்டு முதல் கொப்பூழுக்கு அருகில் கொண்டு வந்து உள்ளங்கையைப் பூமியில் பார்க்கப் பிடித்து, மணிக் கட்டு முதல் கீழே இறங்கி மேல் ஏறினதுபோல் எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தள்ளுதல்.

புண்ணியவான் :

'அதை' என்று காட்டப் பிடித்ததுபோலப் பிடித்து ஒரு தடவை அசைத்தல்.

I "அடே" என்பதுபோலுள்ள தாத்பரீயம் · II "முன் னால் போனவன்" எனல்:

தோள்பட்டை முதல் (மேல் கை) எதிரில் இருப்பவரை நோக்கி, தன் மார்புக்கு நேராக இருக்கும்படியாக நீட்டுதல். உள்ளங்கை ஆகாயத்தைப் பார்த்திருக்க வேண்டும்.

கத்தி பிடித்தல் :

முழங்கை முதல் (கீழ்க்கை) மேலே தூக்கி, உள்ளங்கை கன்னத்தைப் பார்த்திருக்கும்படி பிடித்தல்.

வருடம், மாதம், நாள் :

மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் கொண்டு வந்து, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும் படியாக மணிக்கட்டு முதல் மேல் பட்ட பாகத்தை மேலே தூக்குதல்.

மழை பெய்தல் :


முகத்துக்கு எதிரில் தலைக்கு மேலாகக் கையைக் கொண்டு வந்து, உள்ளங்கை பூமியை நோக்கியிருக்கும்படி அமைத்துக் கொஞ்சம் அசைத்தல்.

துடைப்பம் :

முழங்கை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டி, மணிக்கட்டு இடுப்புக்குச் சமீபமாக வரும்படி தாழ்த்தி முழங்கை முதல் (கீழ்க்கை) வலம் இடமாக அசைத்தல்.

இது மட்டுமல்லாமல் மத்தளத்திலும், பலகையிலும், வாத்தியம் வாசித்தல், பக்ஷிகள் பறப்பதைக் காட்டுதல், தரையை மெழுகுதல், சுவரில் சுண்ணும்பு தீட்டுதல், முழம் அளத்தல், நீந்துதல், சலாமிடுதல், அஞ்சனம் பார்த்தல், பிரபஞ்ச விஸ்தாரம் காட்டுதல், பாகமளத்தல், வேல், வாள், சமுதாடு இவைகளின் உருவங்காட்டுதல், மார்பைத் தட்டுதல், சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தல், பந்தடித்தல், கன்னத்தில் அறைதல், துக்கமுற்ருர் முகத்தை மறைத்தல், வாய் பொத்தி விஷயம் கேட்டல், பேயாட்டத்தில் தரையிற் கையை ஊன்றுதல், தயிர் கடைதல், யாகாக்கினியை கை வைத்து ஊதுதல். கண்ணேறு பட்டாரையும், சுரமுற்ருரையும் தொட்டுப் பார்த்தல், நினைத்த காரியம் கை கூடுமெனல் ஆகிய பலவும் பதாக ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

திரிபதாக ஹஸ்தத்தின் விநியோகம்



2. திரிபதாகம்

கிரீடம் : உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவருக்குத் தெரியும்படி நடுத்தலைக்கு சமீபத்தில் பிடித்தல்

விருக்ஷம் : தோள்பட்டை முதல் (மேல் கையை) எதிரில் இருப்பவரை நோக்கிக் கொஞ்சம் நீட்டி, மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் வரும்படி மேலே தூக்கி, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தெரியும்படி பிடித்தல்.

வச்ராயுதம் : உள்ளங்கை எதிரில் இருப்பவரைப் பார்க்க, முழங்கை முதல் (கீழ்க்கை) தோள்பட்டைக்கு மேலே தூக்கல்.

இந்திரன் : தோள்பட்டைக்குமேல் மணிக்கட்டைத் திருப்பி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாயும் அமைத்துப் பிடித்தல்.

தாழம்பூ : மணிக்கட்டை மார்புக்கு அருகில் பிடித்து, உள்ளங்கை மற்ருெரு பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், விரல் நுனிகள் எதிரில் இருப்பவரைப் பார்க்கும்படியாயும் அசைத்துப் பிடித்தல்.

விளக்கு : மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் பிடித்து, விரல் நுனி ஆகாயத்தையும் உள்ளங்கை அடுத்த பக்கத்திலுள்ளவரையும் பார்க்கப் பிடித்தல்.

கபோலம் : கன்னத்தில் பாம்பு விரலைப் பதிய வைத்தல்.

மகரிகாபத்திரம் எழுதுதல் : மோதிர விரல் நுனியை ஸ்தானத்தில் வைத்துச் சுற்றிக் கோடு போடுவதுபோல் காட்டல்.

நெருப்புச் சுவாலை : ''விளக்குக்குப்'' பிடித்ததுபோல பிடித்து கொஞ்சம் அசைத்தல்.

பாணம் அல்லது அம்பு விடுதல் : ''தாழம்பூ''வுக்குப் பிடித்ததுபோலக் காட்டி, முன்னுலிருப்பவரைப் பார்க்கத் தள்ளுதல்.

நாண் இழுத்தல் : மேலே சொன்னபடி காட்டி மார்புக்குச் சமீபமாய் இழுத்துக்கொள்ளுதல்.

ஆண் பெண் சேருதல் : முழங்கை முதல் எதிரில் இருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படி காட்டல்.

இவைகள் மட்டுமன்றி விஷ்ணுவின் சங்குசக்கர ஹஸ்தங் காட்டுதல், மோதிர விரலால் கண் மையிடுதல், திருநாமம், திலகம் ஆகியவை இடுதல், தேகத்திலும், நெற்றியிலும் ஆகமவிதிப்படி மந்திரமெழுதல், அங்குசங் காட்டுதல், ஜவ்வாது, புனுகு பூசுதல் ஆகியவைகளும் 'திரிபதாக' ஹஸ்தத்தின் விநியோகங்களாதும்.

அர்த்த பதாக ஹஸ்தத்தின் விநியோகம்

துளிர் : முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கையை ஆகாயத்தைப் பார்க்க வைத்துக் கொள்ளுதல்.

பலகை : வலது கையை, இடது கை இருக்கும் இடத்திற்கு நேராகக் கொண்டு போய். உள்ளங்கையை ஆகாயத்தைப் பார்க்கும்படியாக வைத்துக் கொண்டு தன் பக்கத்துக்கு மெதுவாகக் கொண்டுவருதல்.



3. அர்த்தபதாகம்

தீரம் ; அதாவது ஆறு குளங்களின் கரை:—

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியப் பிடித்து, வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் இழுத்தல்.

"இருவர்" என்னும் குறிப்பு :—

முழங்கை (கீழ்க்கை) முதல் முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி விரல் நுனி ஆகாயம் பார்க்கக் காட்டல்.

கத்தி : மணிக்கட்டை மார்புக்குச் சமீபமாய்க் கொண்டு வந்து, விரல் நுனிகள் ஆகாயம் பார்க்கவும், உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும் அமைத்துக் காட்டுதல்.

துவஜஸ்தம்பம் : மணிக்கட்டைக் கொப்பூழுக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கையை அடுத்த பக்கத்தில் இருப்பவர் பார்க்கும்படியாயும், விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும் அமைத்துப் பிடித்து, முகம் வரையில் நேராகத் தூக்கிக்கொண்டு போதல்.

கோபுரம் : தோள்பட்டை முதல் (மேல் கை) மேலே தூக்கியும், விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும் அமைத்துக் காட்டல்.

மாடு முதலியவைகளின் கொம்பு : விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாக சாய்வாய் அமைத்து, மணிக்கட்டு அடிவாரத்தைத் தலையில் வைத்துக் கொள்ளுதல்.

இரம்பம் : மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்கும், விரல் நுனி எதிரில் உள்ளவர்க்கும் தெரியக் காட்டி முன் தள்ளிப் பின்னிழுத்தல். (இப்படி 2 அல்லது 3 முறை செய்யவேண்டும்.)

அவைகளோடல்லாமல் வாத்தியம் முழக்குதல், உடுக்கடித்தல், சுழல் வண்டு சுற்றுதல், பூவை நாடி வண்டு வீழ்தல், சூறைக்காற்றைக் காட்டுதல், மழைக்கும் வாடைக் காற்றுக்கும் ஒடுங்குதல், தூமகேதுவைக் காட்டுதல், கத்தி உருவம் காட்டுதல், கத்தி சுழல்வதைக் காட்டுதல், மீன் கொத்தி மீன்மேற் பாய்தல், சக்கரம், ராட்டினம், தேர் வண்டியில் சுற்றுதல், பம்பரமாடுதல், மயிர்க் கூச்செரிதல், தயிர் சிலுப்பல், தேகவெரிப்புக்கும், சீக்கிரக் குறிப்புக் காட்டுதல், தேங்காயை எடுத்து நீர் ஆட்டிப் பார்த்தல் முதலியனவும் ‘‘அர்த்த பதாக ஹஸ்த’’த்தின் பிரயோகங்களேயாகும்.

கர்த்தரீமுக ஹஸ்தத்தின் விநியோகம்



4. கர்த்தரீ முகம்
(கத்தரிக் கோலின் அலகுகள்)

ஆண் பெண் பிரிந்திருத்தல் : (விபரீதம்)

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து மணிக்கட்டு முதல் அதற்கு மேற்பட்ட பாகத்தை வலது சாரியாகப் புரட்டிக் காண்பித்தல்.

கன்னக்கோல் வைத்தல் :

மேலே சொன்னப்படி பிடித்து, மணிக்கட்டை வலதுசாரியாகவும், இடது சாரியாகவும் வெட்டுதல்.

கடைக்கண் :

விரல் ஓரத்தைக் கீழ் இமை ஓரத்தில் கொண்டு போதல்.

மரணம் ; கீழே விழுதல் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படி பிடித்து, மணிக்கட்டு முதல் (மணிக்கட்டு மேற்பட்ட பாகமும்கூட) வலது சாரியாய்ப் புரட்டி ஆள் காட்டி விரல் நுனி பூமியைப் பார்க்கும்படி பிடித்தல்.

பேதித்தல் :

மணிக்கட்டை மார்புக்கு நேரில் கொண்டுவந்து உள் ளங்கையை எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டி, வலது சாரியாய் கணுக்கையைப் புரட்டல்.

மின்னல் :

மணிக்கட்டை முகத்துக்கு எதிரில் தூக்கியும், உள் ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியாக வும் காட்டல்.

தனியனுய்ப் படுத்தல் :

மணிக்கட்டை காதுக்குச் சமீபத்தில் கொண்டு போய் உள்ளங்கை காதைப் பார்க்கப் பிடித்தல்.

தனியனுக விரகதாபப்படுதல் :

மணிக்கட்டை மார்புக்கு நேரில் கொண்டு வந்து உள் ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்குத் தெரியும்படியாய் காட்டி மணிக்கட்டு முதல் வலது சாரியாய்ப் புரட்டல்.

கொடி :—தோள்பட்டை முதல் கொஞ்சம் முன்னுலே கொண்டு வந்து, மணிக்கட்டை முகப்பக்கத்தில் தூக்கி, கொஞ்சம் கொஞ்சமாய் அசைத்துக்கொண்டே இறக்கு தல்.

மயூர ஹஸ்தத்தின் விநியோகம்



5. மயூரம்

மயில், பட்சிகள் :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னிலிருப்பவரைப் பார்க்க நீட்டி, நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்துக்காட்டல்.

லதா அல்லது பூங்கொடி :

கைகள் இருக்கும் பக்கத்தில் விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படி தூக்கி, அசைத்துக் கொண்டே கீழே இறக்குதல்.

கக்குதல் அல்லது வாந்தியெடுத்தல் :

உள்ளங்கை வாயை நோக்கி இருக்கும்படி வாய்க்குச் சமீபத்தில் மடித்து வலது சாரியாய் மணிக்கட்டு முதல் அதற்கு மேற்பட்ட பாகத்தைப் புரட்டல்.

மயிராற்றுதல் அல்லது விடுத்தல் :

விரல் நுனிகளைத் தலையின் பக்கத்திற்கு பிடித்துக் கோத்ததுபோல் காட்டி, அதனதன் கைகள் உள்ள பக்கத்தில் நேராக நீட்டுதல்.

நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ளுதல் :

மோதிர விரல் நுனி நெற்றியில் பொருந்தியதுபோலக் காட்டுதல்.


கண்ணீர் உகுத்தல் :

மோதிர விரல் நுனியைக் கண்ணின் இமையோரத்தில் நீளத்தடவிப் பூமியை நோக்கி உதறுதல்.

சாஸ்த்திர வாதம் :

கணுக்கை முதல் மார்புக்கு நேராகக் கொண்டுவந்து தன்னைக் காட்டி எதிரில் இருப்பவரையும் சுட்டிக் காட்டுதல்.

அர்த்த சந்திர ஹஸ்தத்தின் விநியோகம்



6. அர்த்த சந்திரம்
(அரைமதி)

கிருஷ்ணபக்ஷ சந்திரன் :
(தேய்பிறை)

தோள்பட்டை முதல் (மேல் கையை) கொஞ்சம் நீட்டி உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர் பார்க்கும்படியாகக் காட்டல்.

கழுத்தில் கைகொடுத்துத் தள்ளுதல் :

முழங்கை முதல் தோள்பட்டையைப் பார்க்கத் தூக்கி, விரல் நுனிகள் எதிரிலிருப்பவர்களுக்குத் தெரியக் காட்டி, முன்னால் தள்ளுதல்.

பல்லம் என்னும் ஆயுதம் : (ஈட்டி போன்றது)

தோள்பட்டை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டுதல்.

தேவதைகளுக்கு அபிஷேகம் செய்தல் :

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனி பூமியைப் பார்க்கக் காட்டுதல்

போஜன பாத்திரம் : (உணவுக் கலம்)

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகவும், நீண்ட விரல் நுனிகள் அடுத்தபக்கத்தில் இருப்பவர்க்குத்தெரியும்படியாயும் அமைத்துக் காட்டுதல். (உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்க வேண்டும்.)

இருப்பு :

பின் பக்கத்தில் கட்டைவிரலும், முன் பக்கத்தில் மற்ற விரல்களும் பொருந்துமாறு அமைத்துக் காட்டல்.

தனக்குள் சிந்தித்தல் :

உள்ளங்கையை மார்புநடுவில் பொருந்தும்படி காட்டிய பிறகு, ஆகாயத்தை நோக்கித் திருப்புதல்.

தியானம் :

உள்ளங்கையை மார்பில் பொருத்தி வைத்தல்.

பிரார்த்தித்தல் :

விரல் நுனி எதிரில் இருப்பவரைப் பார்க்கும்படி அமைத்து, மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் வைத்துக் கொள்ளுதல்.

அவயவத்தைத் தொடுதல் :

சரீரத்தின் பல இடங்களில் உள்ளங்கையைப் பொருத்துதல்.

பொதுஜனங்களுக்கு வணக்கம் செய்தல்:


உள்ளங்கையை நெற்றியில் பொருத்தினதுபோலக் காட்டல்.

இவை மட்டுமல்லாமல் சாணளவு அளத்தல், தலைவலி என்று நெற்றியைப் பிடித்தல், குரல்வளையை நெறித்தல், மூக்கிற் கைவைத்துச் சரம் பார்த்தல், கேட்கக்கூடாத வார்த்தைக்குக் காதை மூடுதல், அஞ்சனம் பார்த்தல், வில்லுக்குப் பாணம் காட்டல், மஞ்சள் பூசுதல், இடுப்பளவு பார்த்தல் ஆகியவையும் அர்த்த சந்திர ஹஸ்தத்தின் விநியோகங்களாகும்.

அராள ஹஸ்தத்தின் விநியோகம்

விஷம் குடித்தல் :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கும்படியாய் அமைத்துக் காட்டல்.



7. அராளம்
(வளைந்தது)

அமிர்தம், ஜலம் இவைகளைப் பானம் செய்தல், ஆசமனம் செய்தல் :

விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்க உள்ளங்கையை வாய்க்குச் சமீபத்தில் கொண்டுபோதல்.

பெருங்காற்று :

வலது கையை இடது பக்கத் தோளுக்கு நேராக எதிரில் தூக்கி, உள்ளங்கை பூமியைப் பார்க்கப் பிடித்து அசைத்துக்கொண்டே இறக்கித் தன் பக்கத்திற்கு இழுத்துக் கொள்ளுதல்.

சுகதுண்ட ஹஸ்தத்தின் வினியோகம்

பாணப்பிரயோகம் : (அம்பெய்தல்)



8. சுகதுண்டம்
(கிளி மூக்கு)

மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் கொண்டுவந்து விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்து, கணுக் கையை முன்னால் தள்ளுதல்.

கடப்பாரை :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னாலிருப்பவரைப்பார்க்க நீட்டி, நீண்ட விரல் நுனிகளைப் பூமியைப் பார்க்கப் பிடித்துத் தோண்டுவது போலக் காட்டுதல்.

மர்மம் :

உள்ளங்கையை மார்பில்பொருந்த வைத்துக் கொள்ளுதல்.

உக்கிரபாவம் அல்லது பயமுறுத்தல் :

மணிக்கட்டைத் தோளுக்கு நேராகத் தூக்கி, நீண்ட விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்க்குத் தெரியக்காட்டி, மணிக்கட்டு முதல் (கீழ்க்கையை) அசைத்தல்.

முஷ்டி ஹஸ்தத்தின் வினியோகம்



9. முஷ்டி
(முட்டிக்கை)

ஸ்திரம் அல்லது நிலைத்தல் :

மணிக்கட்டை தன் மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, நகக் கண்கள் தன்னைப்பார்க்கப் பிடித்தல்.

தலைக்கொண்டையைப் பிடித்திழுத்தல்:

கணுக்கையை அந்தக் கையுள்ள பக்கத்துத் தலைமயிருக்குச் சமீபத்தில் கொண்டுபோய் இழுத்துக் காட்டடல்.

திடம் அல்லது உறுதி :

மணிக்கட்டைத் தோளுக்கு நேராகப் பிடித்தல்.

பதார்த்தங்களை வைத்துக் கொள்ளுதல் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

மல்லர்கள் செய்யும் யுத்தம் :

தோள்பட்டை முதல் கொஞ்சம் பின்னாலே விலக்கித் தள்ளி, மணிக்கட்டை இடுப்புக்குச் சமீபத்தில் அமைத்துக் காட்டுதல்.

இவைகளோடு மட்டுமல்லாமல், கேடயம், வில், வாள், மழு, சூலம், தண்டம், ரம்பம், மரக்கால் இவைகளைப் பிடித்தல்; திருச்சின்னம், எக்காளம் இவைகளைப் பிடித்து ஊதல்; தருமத்தைப் பெற்றேனெனல், ஈதல், விக்னேஸ்வரனை வணங்குதல் ஆகியவைகளும் முஷ்டி ஹஸ்தத்தின் விநியோகங்களாகும்

சிகர ஹஸ்தத்தின் விநியோகம்

மன்மதன் தனுசு : (வில்)

இடக்கைத் தோள்பட்டை முதல் முன்னால் இருப்பவர்களை நோக்கி நீட்டி, முழங்கை முதல் அடுத்த பக்கத்தைப் பார்க்கத் திருப்பி, கட்டைவிரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்தல்.

கம்பம், நிச்சயம் :

மணிக்கட்டை முகத்துக்கு நேராகக் கொண்டுவந்து, கட்டைவிரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்தல்.



10. சிகரம்
(உச்சி)

பிதுரு தர்ப்பணம் :

மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் கொண்டுவந்து நீண்ட விரல் நுனிகள் பூமியைப் பார்க்கும்படி அமைத்துக் காட்டல்.

அதரம் : (கீழுதடு)

கட்டைவிரல் ஓரத்தைக் கீழுதட்டின் சமீபத்தில் காட்டல்.

பிராணநாதன் அவயவம் :

மணிக்கட்டை மார்புக்கு எதிரில் கொண்டுவந்து, விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்தல்.

பற்கள் :

உதட்டுக்குப் பிடித்தது போலவே பற்களுக்கும் பிடித்துக் காட்டுதல்.

பிரவேசித்தல் :

சுண்டுவிரல் ஓரத்தைப் பூமியில் பதியவைத்தல்.

கேள்வி கேட்டல் :

மணிக்கட்டைக் கழுத்துக்கு நேரில் பிடித்து, கட்டை விரல் நகம் எதிரிலுள்ளவர்களைப் பார்க்கக் காட்டல்,

'இல்லை' எனும் வார்த்தை :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்து அசைத்தல்.

நினைத்தல் :

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்துக் மணிக்கட்டை மார்பில் பொருத்துதல்.

வால் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, நீண்ட விரல் நுனிகள் மார்பைப் பார்க்கும்படி அமைத்துக் காட்டல்.

இடுப்பின் முடிச்சு இழுக்கப்படும் பாவனை :

தோள்பட்டை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தாழ நீட்டி, உள்ளுக்கிழுத்தல்.

ஆலிங்கனம் :

கையை முன்னுலிருப்பவரைப் பார்க்கத் தோள்பட்டை முதல் நீட்டி, மார்புக்கு நேராக மணிக்கட்டைக் கொண்டு வருதல்.

சக்தி, தோமரம் என்னும் ஆயுத வகைகளால் குத்துதல் :

தோள்பட்டை முதல் அந்தக் கையுள்ள பக்கத்தில் கொஞ்சம் தள்ளி, முழங்கைக்கு மேற்பட்ட பாகத்தைத்

தூக்கி முன்னுலிருப்பவரை நோக்கி, மணிக்கட்டு முதல் நீட்டல்.

பூஜைமணி ஆட்டுதல் :

முழங்கை முதல் முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி கட்டைவிரலின் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்து, கணுக்கை முதல் அசைத்தல்.

இவையன்றி அலகு, அங்குசம், வேல், ஈட்டி, சூலம், இடுக்கி, எழுத்தாணி, உலக்கை இவைகளைப் பிடித்தலும்; உடம்பு வலிக்குக் குத்துதல், கணேசனை வணங்குதல், தலை மயிரைக் கூட்டுதல், குடுமி முடிதல், பெண்கள் பாதத்தில் செம்பஞ்சூட்டுதல் ஆகியவைகளும் 'சிகர' ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

கபித்த ஹஸ்தத்தின் விநியோகம்

இலக்குமி :


உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படி அமைத்துப் பிடித்து மணிக்கட்டைத் தோள் பட்டைக்குச் சமீபத்தில் பிடித்தல்.

சரஸ்வதி :

மணிக்கட்டை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

ஆடை அணிந்து கொளல் :

மணிக்கட்டால் இடுப்பைச் சுற்றிக் காட்டுதல்.



11. கபித்தம்
(விளாம்பழம்)

தாளம் பிடித்தல் :

மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் பிடித்துக் கொஞ்சம் அசைத்தல். (உள்ளங்கை அடுத்தபக்கத்திலுள்ளவர்களுக்குத் தெரியவேண்டும்.)

பால் கறத்தல் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்குத் தெரியப் பிடித்து இரண்டு மூன்று தடவை ஏற்றி இறக்கிப் பிடித்தல்.

கண்ணுக்கு மை இடுதல் :

ஆள்காட்டி விரல் நுனியைக் கண்ணோரத்தில் இழுத்துக் காட்டுதல்.

பூச்செண்டு பிடித்துக் கொள்ளுதல் :

உள்ளங்கையை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படி அமைத்து, மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் பிடித்துக் கொள்ளுதல். (4, 5, 6, 7 இந்த விநியோக காலங்களில் மணிக்கட்டின் ஓரம், பூமியைப் பார்க்கும்படி அமைந்திருக்க வேண்டும்.)

சேலைத் தலைப்பைப் பிடித்திழுத்தல் :

முழங்கை முதல் முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டியும், உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியப் பிடித்தும் வைத்துக்கொண்டு, உள்ளுக்கிழுத்தல்.

முக்காடிட்டுக் கொள்ளுதல் :

வலது மணிக்கட்டுக்குமேற்பட்ட பாகத்தால் இடது சாரியாய் ஒரு தடவை முகத்தைச் சுற்றி உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படி அமைத்துக் காட்டி, அந்தக் கையுள்ள பக்கத்திலேயே வைத்துக் கொள்ளுதல்.

தூப தீப அர்ச்சனை :

[முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்து, வலது பக்கமாய்ச் சக்கரம்போல் சுழற்றுதல்-தூபம் கொடுக்க.]-[உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குக் காட்டி, மேல் கண்டபடியே சுற்றுதல் தீபம் கொடுக்க.]

இவைகளோடு அல்லாமல், விசிறி, கவரி, ஆலவட்டம், பாசக்கயிறு, அங்குசம், குறடு இவைகளைப் பிடித்தல், ஆரத்தி எடுத்தல், எழுத்தாணி தீட்டுதல், பூப்பறித்தல், ஜபமணி உருட்டுதல், வாத்தியங்களைக் கோல்கொண்டடித்தல், வில்லுருண்டை செலுத்துதல், பெரியோர்களுக்குப் பிண்டம் இடுதல், இராட்டினம், பம்பரம் சுற்றுதல், கவண்கல் எறிதல், மணிகோர்த்தல், தூண்டில் இழுத்தல், குச்சியால் பல் துலக்குதல், அஸ்திரம் பிரயோகித்தல், குத்துதல், அறுத்தல், வெட்டுதல், விதை விதைத்தல், ஆற்றிலோ குளத்திலோ குளித்தல், வெற்றிலை போட்டுக் கொள்ளுதல் முதலியவைகளும் ''கபித்த ஹஸ்த'' விநியோகங்களில் அடங்கும்.

கடகா முகஹஸ்தத்தின் விநியோகம்

பூப்பறித்தல் :

தோள்பட்டை முதல் அந்தக் கை உள்ள பக்கத்தில் மேலே தூக்கினாற்போல சாய்வாக நீட்டி மறுபடியும் மடக்குதல்.



12. கடகாமுகம்
(வளையின் வாய்)

முத்துமாலே, பூமாலே:

பொருந்திய மூன்று விரல் நுனிகளையும் தோளுக்கு நேரில் பிடித்து, வயிறு வரையில் இறக்கிக் காட்டுதல்.

பாணத்தை இழுத்தல் :

தோள்பட்டை முதல் முன்னால் நீட்டி, சேர்ந்த விரல் நுனியெதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படி பிடித்து, மணிக்கட்டு காதுக்கு வரும்படி இழுத்தல்.

வெற்றிலே கொடுத்தல் :

தோள்பட்டை முதல் கொஞ்சம் தாழ்வாக முன்னாலிருப் பவரைப் பார்க்கநீட்டி, பொருந்திய விரல்கள் ஆகாயத்தைப் பார்க்க அமைத்துப் பிடித்தல்.

கஸ்தூரி முதலிய வாசனைப்பொருள்களைக் கலத்தல் :

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகளைத் தரையைப் பார்க்கத் திருப்பி, விரல்களால் பிசைதல்.

சந்தனத்தை வாசனைபார்த்தல் :

விரல் ஓரத்தை மூக்குக்குச் சமீபத்தில் கொண்டு போதல்.

பேசுதல் :

விரல் நுனிகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்திலும் பிடித்துக் காட்டுதல்.

காணுதல் :

விரல் நுனிகளைக் கண்ணுக்கு நேராகப் பிடித்தல்.

இவைகளோடு பூச்செண்டுகாட்டல், பாசாங்குசெய்தல், வீணை முதலிய நரம்பு வாத்தியங்களைச் சுருதி கூட்டுதல், வர்ண மெழுதுதல் ஆகிய பலவும் "கடகாமுக" ஹஸ்தத் தின் பாற்படும்.

சூசி ஹஸ்தத்தின் விநியோகம்



13. சூசி
(ஊசி)

'ஒன்று' எனல் :

நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்க, கணுக்கையை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

பரப்பிரம்மம் :

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்க அமைத்து கணுக்கையை முகத்துக்கு நேராகத் தலைக்கு மேல் கொஞ்சம் தூக்குதல்.

பாவித்தல் அல்லது நினைத்தல்:

எதிரில் இருக்கிறவர்களை விரல் நுனியால் காட்டல்.

'நூறு' என்னும் எண்ணிக்கை :

விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும், உள்ளங்கை எதிரில் இருப்பவரைப் பார்க்கும்படியாயும் அமைத்து மணிக்கட்டை கன்னத்துக்குச் சமீபத்தில் பிடித்தல்.

சூரிய மண்டலத்தைக் காட்டல் :

விரல் நுனியை ஆகாயத்தைப் பார்க்கும்படியாய் அமைத்து, மணிக்கட்டை முகத்துக்கு நேராய்த் தலைக்கு மேல் கொஞ்சம் தூக்கி, வட்டமாய் மணிக்கட்டை மட்டும் சுற்றுதல்.

உலகம் அல்லது பிரபஞ்சம் :

விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாய் அமைத்து மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, மணிக்கட்டினை வட்டமாய்ச் சுற்றுதல்.

''அப்படியே'' என்று சொல்லும் குறிப்பு :

விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாக அமைத்து, மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும் படியாய்ப் பிடித்து, முன்னுலிருப்பவரை நோக்கி மணிக்கட்டினைச் சாய்த்துக் காட்டல்.

'எவன்?' 'எவள்?' 'எது?' 'அவன்?' 'அவள்?' 'அது?' என்பவைகளின் குறிப்பு :

முன்னாலிருப்பவர்க்கு விரல் நுனி தெரியக் காட்டி கனுக்கையை மார்புக்கு நேராகப் பிடித்து, மணிக்கட்டினை இரண்டு மூன்று தடவை அசைத்துக் கொண்டே ஓரிடம் விட்டு மற்றோர் இடத்திற்குக் கையை மாற்றுதல்.

விசிறி :

விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியக்காட்டி, மணிக்கட்டை மார்புக்கு நேராகப் பிடித்து, ஆள்காட்டி விரலை வலம் இடமாக அசைத்தல்.

பயமுறுத்துதல் :

விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்க மணிக்கட்டை முகத்துக்கு நேராகத் தூக்கி, மணிக்கட்டினை எதிரில் இருப்பவரைப் பார்க்க அசைத்தல்.

இளைத்தல் :

விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாகவும், உள்ளங்கை முகத்தைப் பார்த்திருக்கும்படியாயும், கையை முகத்துக்கு நேராகப் பிடித்து இலேசாக இறக்குதல்.

சலாகை அல்லது இரும்புக் குச்சி :

மணிக்கட்டை மார்புக்கு நேரே பிடித்து, விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாக அமைத்துக் காட்டல்.

சரீரம் :

நீட்டிய விரல் நுனியால் அவயவங்களைக் காட்டல்.

ஆச்சரியம் :

விரல் நுனி ஆகாயத்தை நோக்கி இருக்க, மூக்கில் ஆள் காட்டி விரலைப் பதித்தல்.

சடை அல்லது தலைமயிர் ஆற்றல் :

நீண்ட விரல் நுனியைப் பிடரிக்கு மேலாகக் கொண்டு போய்ச் சிறிது சிறிதாக இறக்கியபடி அதே கையின் பக்கத்திலேயே கொண்டு வருதல்.

குடை :

நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாக அமைத்து, மணிக்கட்டை முகத்துக்கு நேராக தலைக்கு மேல் கொஞ்சம் தூக்கிப் பிடித்துக் காட்டல்.

கெட்டிக்காரன் :

நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும் படியாக அமைத்து, உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டி, மணிக்கட்டை தோளுக்கு நேராகத் தூக்குதல்.

கோணம் :

நீண்ட விரல் நுனியால் பூமியில் 4 மூலையாகக் கீறுதல்.

வகிடு :

தலையின் நடுவில் ஆள்காட்டி விரலைப் பொருத்தி, முன்புறத்திலிருந்து பின் புறத்திற்குக் கொண்டு போதல்.

பேரிகை முழக்குதல் :

நீண்ட விரல் நுனியை முன்னலிருப்பவர்க்குத் தெரியக் காட்டி, கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து அடிப்பது போல், மணிக்கட்டின் முற்பட்ட பாகத்தை அசைத்தல்.

குயவன் சக்கரம் :


நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்கும் படி அமைத்து. மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, மணிக்கட்டின் முற்பட்ட பாகத்தை வட்டமாகச் சுற்றுதல்.

மாலை வேளை :

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்க, மணிக்கட்டினை முகத்துக்கு நேராகக் கிழக்கே தூக்கி மேற்கே கொண்டு போதல்.

இவைகளோடு பூமியிலெழுதுதல், கரலீலை செய்தல், பல்விளக்குதல், கண்களுக்கு மையிடுதல், அம்புக்கும், குத்தூசிக்கும் உபமானம் காட்டுதல், தினக் கடன்களை முடித்தல், மோகினி வேடம் திரிவிக்ரமாவதாரத்தைக் காட்டுதல், பகைவரைப் பயமுறுத்தல் ஆகிய பலவும் ‘‘சூசி ஹஸ்தத்தின்’’ பிரயோகங்களேயாகும்.

சந்திரகலா ஹஸ்தத்தின் வினியோகம்



14. சந்திரகலா
(சந்திரனின் கலை)

மூன்றும் பிறைச் சந்திரன் :

தோள் பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னால் நீட்டிக் காண்பித்தல்.

பத்ம கோச ஹஸ்தத்தின் வினியோகம்



15. பத்ம கோசம்

பெரிய பழங்கள், (வில்வம், நார்த்தை, விளா.) கோழி முட்டை முதலிய உருண்டை வஸ்துக்கள், பூப்பந்து, மாம்பழம், குறைவான சாப்பாடு :

முழங்கைமுதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படியாக அமைத்துக் காட்டல்.

ஸ்திரீகளின் மார்பு : (முலை)

விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாக அமைத்து, மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் பிடித்துக் காட்டல்.

வட்டமாயிருக்கும் வஸ்துக்கள் :

உள்ளங்கை முன்னாலிருப்பவர்களுக்குத் தெரியக்காட்டி, மணிக்கட்டை மார்புக்கு நேராகப் பிடித்து, வலது சாரியாய்த் திருப்புதல்.

பூக்கொத்து :

விரல் நுனி பூமியைப் பார்க்கும்படியாய் அமைத்து, கையை முகத்துக்கு நேராகத் தலைக்கு மேல் கொஞ்சம் தூக்குதல்.

பூசை மணி உருவத்தைக் காட்டல் :

முழங்கை முதல் முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகள் தரையை நோக்கி இருக்கும்படியாய் அமைத்துப் பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

கறையான், பாம்பு, இவைகளின் புற்று :

முழங்கை முதற்பட்டபாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப் பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி யிருக்கும்படியாய் அமைத்துப் பிடித்து, கையைக் கொஞ்சம் மேலே தூக்குதல்.

இவையன்றி கடப்பாரை, ஐந்து தலை நாகம், கல் லெறிதல், பெண்கள் ஸ்தனத்தில் நகக்குறி வைத்தல், பஞ்சாக்கினிக்கும், ஐந்து தலைக்கும், குடைக்கும் உவமை காட்டுதல், பார்வதி, சாமுண்டியின் தரிசனத்தைக் காணுதல், நிராஞ்சனமெடுத்தல் ஆகிய பலவும்கூட "பத்மகோச" ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

சர்ப்ப சீருஷ ஹஸ்தத்தின் விநியோகம்



16. சர்பப சீருஷம்
(பாம்புப் படம்)

சந்தனம் :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும் படியாய் அமைத்துக் காட்டல்.

பாம்பு :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் காட்டுதல்.

மந்தம் அல்லது மெது, இரட்சித்தல் :

"பாம்பு"க்குப் பிடித்த ஹஸ்தம் போல் பிடித்து, பூமியை நோக்கி முழங்கை முதல் (கீழ்க்கை) இரண்டு தடவை சிறிது இறக்கி ஏற்றுதல்.

மந்திரத் தண்ணீர் தெளித்தல் :

முழங்கை முதற் பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை பூமியை நோக்கிப் பிடித்து, ஒன்றைத் தொட்டு உதறுவதுபோல் அபிநயித்துக் காட்டல்.

தேவர் ரிஷிகளுக்குத் தர்ப்பித்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாய் அமைத்துப் பிடித்து, மணிக்கட்டு முதல் தரையை நோக்கிச் சாய்த்தல்.

யானை மத்தகத்தைத் தட்டிக் கொடுத்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை பூமியை நோக்கி இருக்கும்படியாய் அமைத்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை ஒரு தடவை அசைத்தல்.

மல்லர்கள் தோள் தட்டுதல் :

அடுத்த புறத்துத் தோள்பட்டையை உள்ளங்கையால் தட்டுதல்.

இவைகளோடு அரசனுக்கு முன்னும், ஆசானுக்கு முன்னும் வாய்பொத்தி நிற்றல், கண் பொத்தி விளையாடுதல், துக்க சமயத்தில் கன்னத்தில் கை வைத்தல், ஜெயித்தபோது தொடை தட்டுதல், தீர்த்தம் வாங்கிக் குடித்தல், வெயில் தாங்காது முகத்தை மறைத்தல், வாழைக் குலை காட்டுதல், மிருகங்களின் காதுகளைக் காட்டுதல், ஓடம், தோணி இவை களுக்குவமை காட்டுதல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளு தல், சிறங்கை பொருள் கொடுத்தல், சாணந்தெளித்தல், குதிரை முகத்தைத் தட்டுதல, கடவாத்தியம் செய்தல், பெண்கள் கடிதடங் காட்டுதல் ஆகியவைகளும் 'சர்ப்ப சீருஷ' ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

—

மிருக சீருஷ ஹஸ்தத்தின் வினியோகம்



17. மிருக சீருஷம்
(மான் தலை)

ஸ்திரீ :

தோள்பட்டை முதல் கொஞ்சம் விலக்கி, முழங்கை முதற்பட்ட கீழ்க்கையை, சிறிது பக்கத்தில் சாய்த்து உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படி அமைத்துப் பிடித்தல்.

கபோலம் :

கன்னத்தை, சேர்ந்தவிரல் நுனியால் தொடல்.

சிரமம், மரியாதை :

மணிக்கட்டை வயிற்றுக்கு அருகில் கொண்டு வந்து, உள்ளங்கை பூமியை நோக்கி இருக்கும்படியாய் அமைத்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை ஒரு தடவை பூமியைப் பார்க்க அசைத்தல்.

பயம் :

கையை அடுத்த கையின் அக்குளில் மறைத்துக் கொள்ளுதல்

விவாதம், எதிராகச் சொல்லுதல் :

மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் கொண்டு வந்து, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படியாய் அமைத்துப் பிடித்து, ஊஞ்சல்போல் மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை ஆட்டுதல்.

பக்தியுடன் வார்த்தைகளைக் கேட்டல் :

உள்ளங்கை வாய்க்குச் சமீபமாகவும், நடு விரல் நுனியை மூக்குக்கு அருகிலும், வைத்துக் கொள்ளுதல்.

ஆவாகனம் செய்தல் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை பூமியைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குத தெரியும் படியாய்ப் பிடித்து, அவர்களை நோக்கி விரல் நுனிகளை நீட்டி பூமிக்கு நேராகக் கொஞ்சம் சாய்த்துப் பிடித்தல்.

விபூதி தரித்தல் :

நடு மூன்று விரல் நுனிகளின் உட்புறத்தை நெற்றியின் இடப்பாகத்தில் பொருத்தி, வலப் பாகத்துக்குக் கொண்டு வருதல்.

கோலம் போடுதல் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தைப் பூமியைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்கும் படியாய் அமைத்துப் பிடித்து, உள்ளங்கையை நீளமாய் இழுத்தல்.

கால்பிடித்து விடுதல் :

காலில் பல இடங்களில் உள்ளங்கையைப் பொருத்திக் காட்டுதல்.

எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளுதல் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்ப வரைப் பார்க்க நீட்டி, வளைத்துக் கொண்டே அடுத்த பக்கத் திற்குக் கொண்டு போதல்.

வீடு :

வலது மணிக்கட்டை இடது அக்குளுக்கு அருகில் கொண்டுவந்து, உள்ளங்கை பூமியை நோக்கியிருக்கும்படி யாய் அமைத்துக் காட்டல்.

குடை பிடித்தல் :

உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படி அமைத்து, தலைக்கு மேல் உச்சந்தலைக்கு நேராகப் பிடித்தல்.

படிக்கட்டு :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை தனக்குத் தெரியும்படியாய்ப் பிடித்து, மணிக் கட்டைப் புரட்டிப் புரட்டிக் கொண்டே கையை மேலே கொண்டு போதல்.

காலடி வைத்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு விருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையைத் தரையை நோக்கும்படியாய் அமைத்து, அதை இடம் விட்டு இடம் மாற்றிக் காண்பித்தல்.

அன்பர்களை அழைத்தல், சஞ்சரித்தல் .

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை தனக்குத் தெரியும்படி பிடித்து, மணிக்கட்டைப் புரட்டிக் கொண்டே தன் அருகில் இழுத்தல்.

அலங்காரம் :

உடலில் நகை அணிந்து கொள்ளக்கூடிய இடங்களில் உள்ளங்கையைப் பதித்துக் காட்டல்.

இவைகளன்றி நாடி பிடித்துப் பார்த்தல், மயிரை வகிர்ந்து கோதுதல், நெற்றி வியர்வையைத் துடைத்தல், எழுத்தாணி பிடித்தல் ஆகிய பலவும் "மிருக சீருஷ" ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

சிம்ஹ முக ஹஸ்தத்தின் விநியோகம்

ஹோமம் செய்தல் : (தீ வளர்த்துச் சடங்கு செய்தல்)



18. சிம்மமுகம்
(சிங்கத்தின் முகம்)

அந்தந்தக் கையுள்ள பக்கத்தில் விரல் நுனியைப் பூமியில் பொருத்தி, பின்னர் விரல் நுனிகளை எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டல். (இம்மாதிரி இரண்டு மூன்று முறை செய்து காட்டுதல் வேண்டும்.)

முயல், சிங்கமுகம் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கையை அவர்களுக்குத் தெரியும்படியாய் அமைத்துக் காட்டுதல்.

யானை :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை தரையை நோக்கியிருக்கும்படியாய் அமைத்துப் பிடித்தல்

தர்ப்பையை அசைத்தல் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, ஒன்று சேர்ந்த விரல்நுனிகளைப் பூமியை நோக்கும்படி பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

பத்மாசனத்தில் அமர்ந்திருத்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னல் இருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி பிடித்துக் காட்டல்.

வைத்தியன் மருந்து சொல்லுதல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை எதிரில் இருப் பவர்க்குத் தெரியும்படியாய் அமைத்துப் பிடித்து, இரண்டு மூன்று தடவை இடம் விட்டு இடம் மாற்றல்.

தாமரைப்பூ மாலை :

சேர்ந்த விரல் நுனிகளைக் கழுத்தில் பொருத்தி வயிறு வரையில் இறக்கிக் காட்டுதல்.

ஆடம்பரம் - பகட்டு :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப் பவரை நோக்கி நீட்டி, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) மேலே தூக்கி, உள்ளங்கை பின்னுல் உள்ளவர்க் குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் காட்டல்.

இவை மட்டுமன்றி தேகத்தைத் தொட்டு நியாசம் செய்தல், நவதானியங்களை இரைத்தல் முதலியனவும் மேற் கண்ட "சிம்ம முக" ஹஸ்தத்தின் பாற்படும்.

காங்கூல ஹஸ்தத்தின் விநியோகம்

எலுமிச்சம்பழம், செங்கழுநீர்ப் புஷ்பம், சகோரப்பறவை, கொட்டைப்பாக்கு முதலியன காட்ட :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகா யத்தை நோக்கி இருக்கும்படியாய்ப் பிடித்துக் காட்டுதல்.



19. காங்கூலம்

சிறுபெண்ணின் மார்பகம் :

உள்ளங்கை தனக்குத் தெரியும்படியாய்ப் பிடித்து மணிக்கட்டை மார்புக்கு நேராக அமைத்துக் காட்டல்.

பூஜை செய்யும் சிறிய மணி :


முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை பூமியை நோக்கி இருக்கும்படியாய்ப் பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை அசைத்துக் காட்டுதல்.

உருண்டையான சிறுவஸ்துக்கள் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப் வரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியப் பிடித்தல்.

அலபத்ம ஹஸ்தத்தின் விநியோகம்

மலர்ந்த தாமரைப்பூ, பெரிய பழங்கள், இளநீர், சுரைக்காய், பிரம்மகபாலம் முதலிய பாத்திரம், தடாகம்:



20. அலபதுமம்
(மலர்ந்த தாமரை)

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உளளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாய் அமைத்துப் பிடித்தல்.

வட்டமானபொருள்கள், சூரியகாந்திப்பூ, கண்ணுடி முதலியன :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கையை அவர்களுக்குத் தெரியுமாறு பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை வலம் இடமாகத் திருப்புதல்.

பெரிய ஸ்தனம் :

உள்ளங்கை தன்னைப் பார்க்குமாறு அமைத்து, அதை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

விரகம்: (பிரிவினுல் ஏற்படும் துக்க உணர்ச்சி.)

உள்ளங்கையைப் பூமியைப் பார்க்கும்படி அமைத்து அதைத் தலைக்குமேல் தூக்கி, மறுபடி அந்தக் கையுள்ள பக்கத்திலேயே கொண்டுவருதல்.

முகம் பார்க்கும் கண்ணாடி :

உள்ளங்கை முகத்துக்குத்தெரியும்படி அதை முகத்துக்கு நேராகப் பிடித்தல்.

பூரணசந்திரன் : (முழுமதி)

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப் பவரைப் பார்க்க நீட்டி, சாய்வாய் உயரே தூக்கி உள்ளங்கை அடுத்த பக்கத்திலுள்ளவர்க்குத் தெரியும்படி பிடித்தல்.

சௌந்தரியம் : (அழகு)

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, உள் ளங்கையை அடுத்தபக்கத்திலிருப்பவர்க்குத் தெரியப்பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தைத் திருப்புதல்.

தலைச்சொருகு : (தலைக்கொப்பு)

உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்குத் தெரியும்படி பிடித்து, அதை அந்தப் பக்கத்துக் காதுக்குப் பின்புறத்தில் பிடித்தல்.

மேல்மாடி, மாடம், உப்பரிகை :

உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி அமைத்து, முகத்துக்குமேல் தூக்குதல்.

கிராமம் அல்லது ஊர் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவ ரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்குமாறு அமைத்துக் காட்டல்.

உயரத்தைக் குறிப்பது :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப் பவரை நோக்கி நீட்டி, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) மேலே தூக்கி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்குமாறு அமைத்துப் பிடித்தல்.

பெருங்கோபம் :

மணிக்கட்டை தோளுக்கு நேராகக் கொண்டுவந்து, உள்ளங்கை எதிரிலிருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்து சிறிதளவு அசைத்தல்.

வண்டியின் சக்கரம், சக்கரவாக பக்ஷி :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் கொஞ்சம் வலது பக்கமாய்த் திருப்புதல்.


கலகலவென்னும் பேச்சு :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப் பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை எதிரிலிருப்பவர்க்குத் தெரியப் பிடித்து வேகமாக அசைத்தல்.

பெருமைப் படுத்துதல் :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்குத் தெரியும் படியாய் அமைத்துப் பிடித்து, கையை வலது சாரியாய்த் திருப்புதல்.

சதுர ஹஸ்தத்தின் விநியோகம்



21. சதுரம்

கஸ்தூரி முதலிய வாசனை வஸ்துக்கள்:—சிவப்பு, கறுப்பு முதலிய நிறபேதங்கள் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னுல் இருப்பவரைப் பார்க்க கொஞ்சம் நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியுமாறு பிடித்தல்.

சிறிதளவு என்னும் குறிப்பு, செம்பு, தங்கம் முதலிய உலோகத்துண்டுகள் :

முழங்கை முதற்பட்டபாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப் பவரைப்பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயத்தைநோக்கி இருக்குமாறு பிடித்துக் காட்டுதல்.

துக்கம் : (வியசனம்)

நடுமார்பில் உள்ளங்கையைப் பொருத்திக் கொள்ளுதல்.

இரசம் முதலியன குடித்தல் :

ஒன்றுசேர்ந்தவிரல்நுனிகள் வாயைநோக்கி இருக்கும்படியும், உள்ளங்கை தனக்குத் தெரியும்படியும் அமைத்துக் காட்டி, கையை வாய்க்கு மேல் தூக்குதல்.

கண் :

உள்ளங்கை தனக்குத் தெரியும்படியாகக் கண்ணுக்கு நேராகப் பிடித்து அந்தக் கையுள்ள பக்கத்தில் இழுத்தல். (சேர்ந்துள்ள விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்க வேண்டும்.)

பிரமாணம் : (உறுதிமொழி அல்லது சத்தியம் செய்தல்.)

முன்னுலிருப்பவரை நோக்கி வயிற்றுக்கு நேராக முழங்கை முதல் (கீழ்க்கை) நீட்டி, உள்ளங்கையை பூமிக்குத் தெரியும்படி பிடித்து, பின்னர் உள்ளங்கையைத் திருப்பி மறுபடி இழுத்துக் கொள்ளுதல்.

சரசம் :

முன்னுலிருப்பவரைப் பார்க்க மார்புக்கு நேராக முழங்கை முதல் (கீழ்க்கை) நீட்டி, உள்ளங்கை முன்னுலிருப் பவர்க்குத் தெரியும்படி பிடித்தல்.

மெல்ல நடத்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) மார்புயரத் திற்கு முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை பூமிக்குத் தெரியப் பிடித்து, ஓரிடம் விட்டு மற்ருேரிடத்திற்கு மாற்றிக்கொண்டு முன்னுலே போதல்.


ஆசனம் :

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகக் கொண்டுவந்து, சேர்ந்த விரல் நுனிகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியுமாறு அமைத்துப் பிடித்தல்.

நெய், எண்ணெய் முதலிய வஸ்துக்கள் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை அந்தக் கையுள்ள பக்கத்திலேயே கொஞ்சம் தள்ளிப் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) மேலே தூக்கி, சேர்ந்துள்ள விரல் நுனிகள் பூமியைப் பார்க்கக் மணிக்கட்டு முதல் சாய்த்தல்.

பிரமர ஹஸ்தத்தின் விநியோகம்



22. பிரமரம்
(வண்டு)

வண்டு :

மணிக்கட்டை மார்புக்கு நேராக நீட்டி, உள்ளங்கை பூமிக்குத் தெரியும்படியாய்ப் பிடித்தல்.

கிளி, குயில் முதலிய பறவைகள்:

அந்தந்த கையுள்ள பக்கத்தில் மார்புக்கு நேராகக் கணுக்கையை நீட்டிப் பாம்புவிரல், கட்டைவிரல் இவைகளின் நுனி எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் காட்டல்.

யோகத் தியானம் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுல் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கும்படியாய் அமைத்துக் காட்டல்.

ஹம்ஸாஸ்ய ஹஸ்தத்தின் விநியோகம்



23. ஹம்ஸாஸ்யம்
(அன்னத்தின் அலகு)

தாலி கட்டுதல் :

இரு கைகளிலும் ஒன்று சேர்ந்துள்ள விரல் நுனிகளைக் கழுத்தின் முன்புறத்தில் பொருத்தி பின்புறமாகக் கொண்டுபோதல்.

உபதேசித்தல், சாக்ஷி சொல்லுதல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படியாகப் பிடித்துக் காட்டல்.

நிச்சயப்படுத்துதல், 'தயார்' என்பதைக் காட்டுதல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படியாய்க் காட்டி, கையைக் கொஞ்சம் மேலே தூக்கி மறுபடியும் இறக்குதல்.

மயிர்க்கூச்செறிதல் :

ஒன்று சேர்ந்துள்ள விரல் நுனிகளை அடுத்த பக்கத்தில் உள்ள கையில் பல இடங்களில் பொருத்திக் காட்டுதல்.

முத்து, காட்டுஈ, நீர்த்துளி, மல்லிகைமொட்டு முதலியவை :

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும், உள்ளங்கை எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படி யாயும் அமைத்துக் காட்டி, ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்கு இரண்டு மூன்று தடவை மாற்றல்.

சித்திரம் வரைதல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப் பவர்க்குத் தெரியும்படியும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியும் பிடித்துக்காட்டி, சுணுக்கை முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

விளக்கின் திரியைத் தூண்டுதல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படியாய்ப் பிடித்து, நீளமாய்க் கொஞ்சம் தள்ளுதல்.

தங்கம், மாத்திரை முதலியன உறைத்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை தரையை நோக்கி இருக்கும்படியாய்ப் பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

சோதித்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படியாய் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை நீளமாய்ச் சிறிது அசைத்தல். (முன்புறமாக நீட்டிச் சுருக்குதல்.)

பூமாலை அணிந்து கொள்ளுதல் :

இரண்டு கைகளிலும் முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாயும் பிடித்துப்

பிறகு சேர்ந்துள்ள விரல் நுனிகளைக் கழுத்தின் பக்க வாட்டில் வைத்துக் கீழே இறக்கிக் காண்பித்தல்.

''நான்'' எனல் :

சேர்ந்துள்ள விரல் நுனிகளை மார்புக்கு நடுவில் வைத்துக்கொள்ளுதல்.

'இல்லை'யெனல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும் அமைத்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை இடவலமாக அசைத்துக் காட்டுதல்.

கோடு கிழித்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை பார்க்க நீட்டி, சேர்ந்த விரல் நுனிகள் பூமியைநோக்கி இருக்கும்படியாய்ப் பிடித்து, நீளமாய் இழுத்துக் காட்டுதல்.

பாவித்தல்:

சேர்ந்த விரல் நுனிகளை மார்புக்கு நடுவில் பொருத்துதல்.

இவைகளேயன்றி மன்மதன் மலர்களைத் தொடுத்தல், பெண்களின் குயத்தை நெருடுதல், மூக்கைச் சிந்துதல், பூக்களை நுகர்தல், கவலையுற்றோர் துரும்பு கிள்ளல், நடராஜன் அங்கையின் அக்கினி காட்டல் ஆகியவைகளும் ''ஹம்ஸாஸ்ய'' ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

ஹம்ஸபக்ஷ ஹஸ்தத்தின் விநியோகம்



24. ஹம்ஸபக்ஷம்
(அன்னத்தின் சிறகு)

ஆறு என்னும் எண்ணிக்கையின் குறிப்பு :

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில்இருப்பவர்க்குத் தெரியும் படியாயும், நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும் படியாயும் பிடித்துக்காட்டல்.

சேது பந்தனம் :

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகக் கொண்டுவந்து உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்குமாறு பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) வலம் இடமாக அசைத்தல்.

நகக்குறி :

பயோதரம் என்னும் மார்பில் சுண்டுவிரலை ஊன்றிக் காட்டுதல்.


செய்து முடித்தல் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும் படியாய்ப் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தைக் கொஞ்சம் அசைத்தல்.

ஸந்தம்ச ஹஸ்தத்தின் விநியோகம்

உதாரம் :

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படியாய்ப் பிடித்தல்.



25. ஸந்தம்சம்
(இடுக்கி)

பிண்டம், எலுமிச்சம்பழம், முதலியவைகளை துர்தேவதைகளுக்குக் கொடுத்தல்:

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) மேலே தூக்கி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாய்ப் பிடித்து, இரண்டு மூன்று தடவை இறக்கி யேற்றுதல்.

புண் : (காயம்)

முழங்கைமுதற்பட்டபாகத்தை (கீழ்க்கை) முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி பிடித்தல்.

புழு :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப் பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும் படி பிடித்தல்.

மனப்பயம் :

உள்ளங்கையை மார்புக்குத் தெரியும்படி அதற்கு அருகில் பிடித்தல்.

அர்ச்சனை செய்தல் :

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகக் கொண்டு வந்து, வலது பக்கமாய்ப் பிடித்துக் காட்டுதல்.

ஐந்து என்னும் எண்ணிக்கை :

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, விரல் நுனிகள் அவர்களுக்குத் தெரியும்படி யாய்ப் பிடித்தல்.

முகுள ஹஸ்தத்தின் விநியோகம்



26. முகுளம்
(மொட்டு)

ஆம்பல் : (செவ்வல்லிப்பூ)

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டி, விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்குமாறு அமைத்துக் காட்டல்.

போஜனம் : (சாப்பாடு)

விரல் நுனிகளை வாய்க்குச் சமீபத்தில் கொண்டுபோதல்.

மன்மதனுடைய ஐந்து பாணங்கள் :

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுல் இருப்பவரை நோக்கி நீட்டி, விரல் நுனிகள் அவர்களுக்குத் தெரியும்படியாய்ப் பிடித்து, முன்னுல் கையைத் தள்ளிப் பின் னுக்கிழுத்தல்.

வைணவர்கள் முத்திரையிட்டுக் கொள்ளுதல் :

இரு தோள்பட்டையிலும் விரல் நுனியைப் பொருத்திக் காட்டுதல்.

நாபி : (கொப்பூழ்)

கொப்பூழில் விரல் நுனியைப் பொருத்திக் காட்டுதல்.

வாழைப் பூ :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை அந்தக் கையுள்ள பக்கத்தில் சிறிது தள்ளிப் பிடித்து, கீழ்க்கையை சிறிது மேலே தூக்கி, விரல் நுனிகள் பூமியைப் பார்த்திருக்கும்படி பிடித்துக் காட்டல்.

இவை மட்டுமன்றி பஞ்சபூதங்களைக் காட்டல், தன் எண்ணத்தைச் சொல்லுதல், தாமரை மொட்டு, யாசகர்களுக்குப் பொருள் வழங்குதல், பன்றி, குதிரை இவைகளின் முகங்களைக் காட்டல், குஞ்சங் காட்டல் ஆகியபலவும் "முகுள" ஹஸ்தத்தின்பாற் படும்.

தாம்ர சூட ஹஸ்தத்தின் விநியோகம்

காகம், கோழி, கொக்கு முதலியன :

கீழ்க்கையை (முழங்கை முதற்பட்ட பாகம்) மேலே தூக்கி, சேர்ந்துள்ள விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்தல்.



27. தாம்ர சூடம்
(சிவப்பு கோழி)

ஒட்டகம் :

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை (மேல்கை) முன்னால் இருப்பவரை நோக்கி நீட்டி, கீழ்க்கையை மேலேதூக்கி சேர்ந்துள்ள விரல் நுனிகள் அவர்களுக்குத் தெரியும்படி பிடித்தல்.

சிறு பிள்ளைகள் மணலில் எழுதுவது :

ஆள்காட்டி விரலைப் பூமியில் பதித்து கோணல்மாணலாய்க் கோடு போடுவது போலக் காட்டுதல்.

இவை மட்டுமன்றி பெண்குறி, சிவலிங்கம், திரிதிரித்தல், சோற்றைப் பதம்பார்த்தல், பயிர்க்குழியில் விதையூன்றுதல் முதலியவைகளும் 'தாம்ர சூட' ஹஸ்தத்தின் விநியோகங்களேயாகும்.

திரிசூல ஹஸ்தத்தின் விநியோகம்

வில்வஇலை, 'மூன்று' எனல், ஈசுவரனின்திரிசூலம் முதலியன :



28. திரிசூலம்

கீழ்க்கையை (முழங்கை முதற் பட்ட பாகம்) முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்குமாறு அமைத்துக் காட்டுதல்.

இதுவரையில் ஹஸ்த பேதங்களில் முதல் வகையான அஸம்யுத ஹஸ்தங்களின் பிரிவுகளான 28 ஹஸ்தங்களைத் தெரிந்து கொண்டோம். இனி ஹஸ்த பேதங்களின் இரண்டாவது பிரிவான ஸம்யுத ஹஸ்தங்களைப் பற்றியும் அவற்றின் பிரயோகங்கள் எப்படி என்ற விவரங்களையும் அறியலாம்.

''ஸம்யுத ஹஸ்தம்'' என்பது இரண்டு கைகளையும் இணைத்து, பாவங்களை விளக்குவதாகும். (ஸம்யுதம்—சேர்க்கப்பட்ட கைகள்) நந்திகேசுவரர், பரதர் போன்ற மிகப்பெரிய அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்டு வழங்கிவரும் ''ஸம்யுத ஹஸ்தங்கள்'' மொத்தம் 23 ஆகும்.

ஸம்யுத - ஹஸ்தங்கள்

1. அஞ்சலி	13. சக்கரம்
2. கபோதம்	14. சம்புடம்
3. கற்கடகம்	15. பாசம்
4. ஸ்வஸ்திகம்	16. கீலகம்
5. டோலம் (டோளா)	17. மத்ஸியம்
6. புஷ்பபுடம்	18. கூர்மம்
7. உத்ஸங்கம்	19. வராகம்
8. சிவலிங்கம்	20. கருடம்
9. கடகாவர்த்தனம்	21. நாகபந்தம்
10. கர்த்தரீ ஸ்வஸ்திகம்	22. கட்வா
11. சகடம்	23. பேருண்டம்
12. சங்கம்	

அஞ்சலி ஹஸ்தத்தின் விநியோகம்



1. அஞ்சலி
(கும்பிடுதல்)

தேவதைகள், குரு, பிராமணர்கள் இவர்களை வணங்குதல்.

தேவதைகளை வணங்கும்போது கையைத் தலைக்குமேலும், குருவை வணங்கும் போது முகத்துக்கு நேராகவும், பிராமணர்களை வணங் கும்போது மார்புக்கு நேராகவும் பிடித்தல் வேண்டும். எல்லா வணக்கங்களின்போது விரல் நுனி கள் ஆகாயத்தை நோக்கியே இருக்கவேண்டும.

கபோத ஹஸ்தத்தின் விநியோகம்



2. கபோதம்
(புரு)

பிராமணர், பெரியவர்களிடத்தில் பேசுதல், ஒன்றை வணக்கத் தோடு ஒப்புக்கொள்ளுதல், முதலியவைகளைக் குறிக்க :

ஒன்று சேர்ந்துள்ள கைகளை மார்புக்கு நடுவில் வைத்துக் கொள்ள வேண்டும். விரல் நுனி கள் எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படிபிடிக்க வேண்டும்.

கற்கடக ஹஸ்தத்தின் விநியோகம்



3. கற்கடம்
(நண்டு)

கும்பல், நெருங்கின பொருள்களைக் காட்டுதல் :

சேர்ந்துள்ள கைகளை மார்புக்கு நேராகப் பிடித்து விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்க்குத் தெரியும் படியாய்க் காட்டுதல்

பருமனுயிருப்பவன் :

கையை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து விரல்நுனி எதிரில்

இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், முழங்கைகள் அந்தந்தப் பக்கத்திலேயே சிறிதுவிலகி இருக்குமாறும் பிடித்துக் காட்டுதல்.

சங்கம்ஊதுதல் :

கட்டை விரல் நுனி வாய்க்குச் சமீபத்தில் இருக்கும் படியாயும், மற்ற விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்குமாறும் பிடித்துக் காட்டுதல்.

சோம்பல் முறித்தல் :

விரல் நுனிகளை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாய் அமைத்து, கையைத் தலைக்கு மேல் தூக்குதல்.


மரக்கிளையை வளைத்தல் :

மேலே சொன்னது போலவே கையைத் தூக்கி மறுபடி கீழே இறக்குதல்.

நாயகன் பிரிய விரகத்தால் நாயகி துயருறுதல் :

கையின் உட்புறத்தைப் பூமியில் பதித்தல்.


ஸ்வஸ்திக ஹஸ்தத்தின் விநியோகம்



(1) ஸ்வஸ்திகம்

4.

(குறுக்கிட்டது)




(2) ஸ்வஸ்திகம்

பயத்தோடு பேசுதல் :—(பயத்தோடு புகழ்தல்)

இந்த ஹஸ்தம் படத்தில் காட்டிய படியேதான் பயன் படும். வேறொரு வித மாறுதலும் அடையாது.

டோள ஹஸ்தத்தின் விநியோகம்




5. டோளம்
(ஊஞ்சல்)

இது நாட்டிய ஆரம்ப காலத்தில் உபயோகப்படும்.

புஸ்ப புட ஹஸ்தத்தின் விநியோகம்

கற்பூரம் முதலியவற்ருல் ஆரத்தி எடுத்தல் :

உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாய் அமைத்து, கையினை மார்புக்கு நேராகப் பிடித்து வலது சாரியாய்ச் சுற்றுதல்.



6. புஷ்ப புடம்
(மலர்க்கூடை)

குழந்தை, முதலியவைகளை வாங்கிக் கொள்ளுதல் :

உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்து, கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் காட்டுதல்.

மாலைவேளைகளில் அர்க்கியம் விடுதல், மந்திர புஷ்பங்களால் அர்ச்சித்தல் :

மேலே சொன்னவாறே பிடித்து கையை முகத்துக்கு நேராகத் தூக்கி, விரல் நுனி பூமியைப் பார்க்கும்படி சாய்த்துப் பிடிக்க வேண்டும்.

உத்ஸங்க ஹஸ்தத்தின் விநியோகம்



7. உத்ஸங்கம்
(அணைவு)

நாயகனையாவது, குழந்தைகளை யாவது கட்டிக் கொள்ளுதல் :

முன்னால் இருப்பவரை நோக்கி தோள் பட்டை முதற்பட்ட பாகத்தை (மேல்கையை) நீட்டி, பிறகு உத்ஸங்க ஹஸ்தத்தைப் பிடிக்கவேண்டும்.

வெட்கப் படுதல் :

உத்ஸங்க ஹஸ்தத்தைப் பிடித்து, முகம் பூமியைப் பார்க்கும்படியாகத் தலையை முன்பக்கமாய்ச் சிறிது வளைத்தல்.

தோள் பட்டையைக் காட்டல் :

உத்ஸங்க ஹஸ்தத்தை அப்படியே பிடித்துக் காட்ட வேண்டும்.

சிவலிங்க ஹஸ்தத்தின் விநியோகம்



8. சிவலிங்கம்

சிவலிங்கம் :

படத்தில் கண்டபடி ஹஸ்தத்தைப் பிடித்து வலது கையிலுள்ள நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாகக் கையை மார்புக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.

கடகாவர்த்தன ஹஸ்தத்தின் விநியோகம்



9. கடகாவர்த்தனம்

பட்டாபிஷேக காலத்திலும், பூஜா காலத்திலும், விவாக காலத்திலும் அக்ஷதை போட்டு ஆசீர்வாதம் செய்தலைக் காண்பித்தல் :

இரு கைகளிலும் உள்ள கட்டை விரல், பாம்பு விரல், ஆள் காட்டி விரல் இவைகளின் நுனிகளைப் பூமியில் பதித்து, பிறகு முகத்துக்கு நேராகத் தூக்கிக் காட்டுதல்.

கர்த்தரீஸ்வஸ்திக ஹஸ்தத்தின் விநியோகம்

மரம், மரக்கொம்பு:

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்க, மணிக்கட்டு முதற் பட்ட பாகத்தை முகத்துக்கு நேராகத் தூக்குதல்.



10. கர்த்தரீஸ்வஸ்திகம்
(விரித்த கத்தரி)

மலைச் சிகரம்: (உச்சி)

நீட்டிய விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படி பிடித்து, கணுக்கை முதற்பட்ட பாகத்தை முகத்துக்கு நேராகத் தலைக்கு மேல் தூக்குதல்.

சகட ஹஸ்தத்தின் விநியோகம்


இராட்சதன்: (அசுரன்)

சுண்டு விரல்கள் கடைவாய்க்குச் சமீபத்தில் இருக்கும்படி, அந்தந்தப் பக்கத்துக் கடைவாய்க்கு அருகில் அந்தந்தக் கையைப் பிடித்தல்.



11. சகடம்
(வண்டி)

சங்க ஹஸ்தத்தின் விநியோகம்



12. சங்கம்
(சங்கு)

உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியப் பிடித்தல்.

சக்கர ஹஸ்தத்தின் விநியோகம்



13. சக்ராயுதம்
(சக்கரம்)

கையை வலது தோள் பட்டைக்குச் சமீபத்தில் பிடித்தல்.

ஸம்புட ஹஸ்தத்தின் விநியோகம்



14. சம்புடம் (செப்பு)

ஒரு பொருளை மூடிக் கொள்ளுதல்:

கையை இடது இடுப்புக்கு அருகில் பிடிக்க வேண்டும்.


சம்புடம் :

கையை வயிற்றுக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.

பாச ஹஸ்தத்தின் விநியோகம்


ஒருவருக்கொருவர் நேரிடும் சண்டை, பாசக் கயிறு, சங்கிலி முதலியன :

மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை மார்புக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.



15. பாசம் (கயிறு)

கீலக ஹஸ்தத்தின் விநியோகம்



16. கிலகம் (பிணிப்பு)

சுகமாய்ப் பேசுதல், ஒற்றுமை, நட்பு :

கையை மார்புக்கு நேராகப் பிடிக்கவேண்டும்.

மத்ஸிய ஹஸ்தத்தின் விநியோகம்



17. மத்ஸியம்

மீன் :

வயிற்றுக்கு நேராகக் கையைப் பிடிக்க வேண்டும்.

கூர்ம ஹஸ்தத்தின் விநியோகம்



18. கூர்மம்

ஆமை :

இதற்கும் கையை வயிற்றுக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.

வராக ஹஸ்தத்தின் விநியோகம்



19. வராகம்

பன்றி :

நீண்ட விரல் நுனிகள் பூமியை நோக்கி இருக்கும்படியாய் அமைத்து, கையை வயிற்றுக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.

கருட ஹஸ்தத்தின் விநியோகம்

கருடப் பறவை :

உள்ளங்கையைத் தன்னை நோக்கி இருக்கும்படி அமைத்து, கையை மார்புக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.




20. கருடன்

நாகபந்த ஹஸ்தத்தின் விநியோகம்

நாகபந்தம் அல்லது ஆண் பெண் சேருதல் :

உள்ளங்கை பின்னால் இருப்பவர்க்குத் தெரியும்படியாகக் கையை மார்புக்கு நேராகப் பிடிக்கவேண்டும்.



21. நாகபந்தம்
(பாம்பின் பிணைதல்)


புதர், குகை முதலியவை :

கையை முகத்துக்கு மேல் தூக்க வேண்டும்.

அதர்வண மந்திர ஜபம் :

உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி மடியில் வைக்க வேண்டும்.

கட்வா ஹஸ்தத்தின் விநியோகம்



22. கட்வா
(கட்டில்)

கட்டில் :

நீண்ட விரல் நுனிகள் பூமியை நோக்கி இருக்க, கையை வயிற்றுக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.

பேருண்ட ஹஸ்தத்தின் விநியோகம்




23. பேருண்டம்

பேருண்டப் பறவை :

உள்ளங்கைகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தெரியும்படியாக அவைகளை மார்புக்கு நேராகப் பிடிக்க வேண்டும்.

தேவதா ஹஸ்தங்கள்

தேவர்களைக் குறிப்பிடப் பயன் படுத்தும் ஹஸ்தங்கள் "தேவதா ஹஸ்தங்கள்" எனப்படும். இனி அவைகளின் வகைகளையும், ஒவ்வொரு வகையின் பிரயோகத்தைப் பற்றியும் அறியலாம்.



பிரம்ம தேவர்


வலது கையால் ஹம்ஸாஸ்ய ஹஸ்தமும், இடது கையால் சதுர ஹஸ்தமும் பிடித்து, வலது உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், இடது உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாயும் அமைத்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்டுதல் 'பிரம்மா' வாகும்.



சிவன்

வலது கையினுல் திரிபதாக ஹஸ்தத்தையும், இடது கையினுல் மிருகசீர்ஷ ஹஸ்தத்தையும் பிடித்து, வலது உள்ளங்கை, இடது புறங்கையும் எதிரில் இருப்பவர்க்குத்

தெரியும்படியாக முழங்கை முதற்பட்ட பாகமான கீழ்க் கையை மேலே தூக்கி, இடது கையின் விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாய் அமைத்துக் காட்டுதல் 'சிவா' வாகும்.



விஷ்ணு

இரண்டு கைகளாலும் திரிபதாக ஹஸ்தம் பிடித்து அந்தந்தக் கைகள் அதனதன் தோள்பட்டைக்குச் சமீபத்தில் இருக்கும்படியாயும், நீண்டுள்ள விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாயும், உள்ளங்கைகள் இரண்டும் எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும் பிடித்துக் காட்டுதல் 'திருமாலா'கும்.




ஸரஸ்வதி

வலது கையால் சூசி ஹஸ்தம் பிடித்து, வலது உள்ளங்கை கொப்பூழுக்கு நேராக இருக்கும்படியாய் அமைத்தும், இடது கையால் அர்த்த சந்திர ஹஸ்தம் பிடித்து இடது உள்ளங்கை இடது தோள்பட்டைக்கு அருகில் இருக்கும்படியாய் அமைத்தும் காட்டுதல் 'சரஸ்வதி' யாகும்.




பார்வதி

இரண்டு கைகளாலும் அர்த்த சந்திர ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கைகள் எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படியாய் இரு கீழ்க்கைகளையும் (முழங்கை முதற் பட்டபாகம்) முன்னுலிருப்பவரை நோக்கி நீட்ட வேண்டும். ஆனுல் வலது கை விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும், இடது கை விரல் நுனிகள் கீழ் நோக்கி இருக்கும்படியாயும் பிடித்துக் காட்டுதல் 'பார்வதி' ஆகும்.




இலக்குமி


இரு கையாலும் கபித்த ஹஸ்தத்தைப் பிடித்து இரு கைகளிலும் மணிக்கட்டிற்கு மேற்பட்ட பாகத்தை அந்தந்தப் பக்கத்துத் தோள்பட்டைக்குச் சமீபத்தில் வைத்துக் கொள்ளு தல் 'இலக்குமி' ஆகும். ஆனுல் உள்ளங்கைகளும் எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் காட்டுதல் அவசியமாகும்.



விக்நேஸ்வரன்

முதலில் வலது கையால் துதிக்கை வளைந்திருப்பது போல் காட்டிவிட்டு, பிறகு இரு கைகளாலும் கபித்த ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கைகள் ஒன்றை யொன்று நோக்கி இருக்கும் படியாய்க் கைகள் இரண்டையும், மார்புக்கு நேராகப் பிடிப்பது 'கணபதி' ஆகும்.





ஷண்முகன் அல்லது சுப்பிரமணியன்

இடது கையால் சிகர ஹஸ்தமும், வலது கையால் திரிசூல ஹஸ்தமும் பிடித்து, கைகள் இரண்டையும் அதனதன் தோளபட்டைக்கு நேராக இருக்கும்படியாயும், அதே சமயத்

தில் இருகைகளும் பின்ஞல் இருப்பவரை நோக்கிச் சிறிது நீட்டப்பட்டவையாயும் அமைத்துக் காட்டுதல் 'ஷண்முக' ஞகும்.





மன்மதன்

வலது கையால் கடகாமுக ஹஸ்தமும், இடது கையால் சிகர ஹஸ்தமும் பிடித்து, கைகள் ஒன்றையொன்று பார்க்கும் படியாய் இரண்டு கைகளையும் மார்புக்கு நேராக வைத்துக் கொள்ளுதல் 'மன்மத'ஞகும்.

இந்திரன்


இரண்டு கையாலும் திரிபாதகம் பிடித்து, மணிக்கட்டோடு மணிக் கட்டைப் பொருத்தி, கைகளை மார்புக் குச் சமீபத்தில் பிடித்துக் காட்டுதல் 'இந்திர' ஞகும்.





அக்னி

வலது கையால் திரிபதாகமும், இடது கையால் காங்கூல ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டிக் காட்டுதல் 'அக்னி' யாகும். ஆனால் நீண்டவிரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கவேண்டும்.




யமன்

வலது கையால் சூசி ஹஸ்தமும், இடது கையால் பாச ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'யம'னாகும்.



நிருருதி

முதலில் கட்வா ஹஸ்தமும், பிறகு கடகாமுகமும் பிடித்துக் காட்டுதல் 'நிருருதி' ஆகும்.





வருணன்

வலது கையால் சிகர ஹஸ்தமும் இடது கை யால் பதாக ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற் பட்ட பாகத்தை முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'வருண'னு கும். ஆனல் விரல் நுனி கள் ஆகாயத்தைப்பார்த் திருக்கவேண்டும்.

வாயு

வலது கையால் அராள ஹஸ்தமும், இடது கையால் அர்த்த பதாக ஹஸ்தமும் பிடித்து, உள்ளங்கை யெதிரில் இருப்பவர்க்குத் தெரியும் படி நீட்டுதல் 'வாயு' வாகும். ஆனல் நீண்ட விரல் நுனிகள் ஆகாயத் தைப் பார்த்திருகக வேண்டும்.






குபேரன்

வலது கையால் கதா ஹஸ்தமும், இடது கையால் பத்ம ஹஸ்த மும் பிடித்து, முழங்கை முதற்பட்டபாகம் முன்னு லிருப்பவர்க்குத் தெரியும் படி நீட்டுதல் குபேர னுகும்.

இனி பகவான் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பத்து விதமான அவதாரங்களைக் குறிக்கும் ஹஸ்தங்களையும், அவை ஒவ் வொன்றின் விநியோகங்களையும் அறியலாம்.


தசாவதார ஹஸ்தங்கள்



1. மச்சாவதாரம் 2. கூர்மாவதாரம்

1. முதலில் வயிற்றுக்கு நேராக மத்ஸிய ஹஸ்தம் பிடித்து, பிறகு இருகைகளாலும் திரிபதாக ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாக அந்தந்தக் கையை வைத்துக் கொள்ளுதல்.


2. வயிற்றுக்குச் சமீபத்தில் கூர்ம ஹஸ்தம் பிடித்து, பிறகு இருகைகளாலும் திரிபாதக ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கைகள் எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாக அந்தந்தக் கைகளை அதனதன் தோள்பட்டைக்குச் சமீபத்தில் பிடித்துக் காட்டுதல், 'மத்ஸிய-கூர்ம'ங் களாகும்.



3. வராக அவதாரம்

சேர்ந்திருக்கும் விரல் நுனிகள் பூமியைப் பார்க்கும்படியாய், வயிற்றுக்கு நேராக வராகஹஸ்தம் பிடித்துப் பிறகு அந்தந்த உள்ளங்கையை அதனதன் பக்கத்து இடுப்பில் பொருத்திக் காட்டுதல் 'வராக' மாகும்.

4. நரசிம்மாவதாரம்



முதலில் வலது கையால் திரிபதாகமும், இடது கையால் சிம்ம முகமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகமான கீழ்க்கையை முன்னுலிருப்பவர்க்குத் தெரியும்படி நீட்டுதல். 'நரசிம்ம'மாதும். ஆனுல் வலது உள்ளங்கையும், இடது முழங்கையும் முன்னுல் இருப்பவர்களுக்குத் தெரியவேண்டும். பிறகு ராக்ஷஸ ஹஸ்தம் பிடித்துக் காட்டவேண்டும்.

5. வாமனுவதாரம்




இரு கைகளாலும் முஷ்டி ஹஸ்தம் பிடித்து, இடது கையை இடது தோள்பட்டைக்கு மேலும், வலது கையை வலது இடுப்புக்குச் சமீபத்திலும் பிடித்துக் காட்டுதல் 'வாமன' மாகும்.

6. பரசுராமாவதாரம்



வலது கையால் அர்த்த பதாக ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்குமாறும், முழங்கை முதற்பட்ட பாகமான கீழ்க்கையை முன்னுல் இருப்பவர் பார்க்க நீட்டி, பிறகு இடது கையில் பதாக ஹஸ்தம் பிடித்து,


அந்தந்த உள்ளங்கையை அதனதன் பக்கத்து இடுப்பில் பொருத்திக் காட்டுதல் ''பரசுராம''மாகும். சிலர் வலக்கை யால் திரிபதாகமும், இடைக்கையால் பதாகமும் பிடிக்க வேண்டும் என்றும் கூறுவர்.




7. இராமாவதாரம்

வலது கையால் கபித்த ஹஸ்தம் பிடித்து, கையை வலது இடுப்புக்கு அருகிலும், இடது கையால் சிகர ஹஸ்தம் பிடித்து, இடது தோள்பட்டைக்குச் சமீபத்திலும் பிடித்துக் காட்டுதல் ''ஶ்ரீராம'' மாகும்.

8. பலராமாவதாரம்




வலது கையால் பதாக ஹஸ்தமும், இடது கையால் முஷ்டி ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவர் பார்க்க நீட்டவேண்டும். உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாயும் காண்பித்தல் 'பலராம' மாகும்.



9. கிருஷ்ணுவதாரம்

இரண்டு கைகளாலும் மிருகசீருஷ ஹஸ்தம் பிடித்து, அந்தந்தக் கைகள் அதனதன் தோள்பட்டைக்கு நேராக இருக்கும்படி வைத்துக் கொள்ளுதல் 'ஶ்ரீ கிருஷ்ண' ணுகும். ஆனல் சேர்ந்த விரல்நுனிகள் தோளேப் பார்க்கவேண்டும்.




10. கல்கி அவதாரம்

வலது கையால் பதாகமும், இடது கையால் திரிபதாகமும் பிடித்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாயும் அமைத்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னலிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'கல்கி' ஆகும்.


நவக்ரக ஹஸ்தங்கள்

இனி ஒன்பது வகைப்பட்ட கிரகங்களையும், தனித் தனியே ஒவ்வொன்றைக் குறிக்கும் ஹஸ்தத்தையும் காண் போம்.




சூரியன்

ஒவ்வொரு கன்னத்துக்கு நேராகவும் அந்தந்தப்பக்கத் துக் கைகளால் முதலில் அல பத்ம ஹஸ்தமும் பிறகு கபித்த ஹஸ்தமும் பிடித் துக் காட்டுதல் 'ரவி' ஆகும்.



சந்திரன்


வலது கையால் பதாக ஹஸ்தமும், இடது கையால் அலபத்ம ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப் பவரைப் பார்க்க நீட்டு தல் 'சசி' ஆகும். நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கவேண்டும்.



அங்காரகன்


வலது கையால் முஷ்டி ஹஸ்தமும், இடது கையால் சூசி ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற் பட்ட பாகத்தை முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'செவ்வா' யாதும். நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்க வேண்டும்.

புதன்




வலது கையால் பதாக ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாய் முழங்கை முதற்பட்ட பாகத்தை நீட்டுதலோடு, இடது கையால் முஷ்டி ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கும்படி கையை மார்புக்கு நேராக வைத்துக் கொள்ளுதல் 'புத' னாகும்

பிரகஸ்பதி




இரண்டு கைகளாலும் சிகர ஹஸ்தம பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, பிறகு பூணூல் போட்டிருப்பதாக வலதுகைக் கட்டை விரல்நுனியால் காட்டுதல் 'குரு' வாகும். விரல் நுனிகள் முறையே இடையையும், தோளையும் நோக்கி இருக்க வேண்டும்.

சுக்கிரன்



இருகைகளாலும் முஷ்டி ஹஸ்தம் பிடித்து. இடது கையைத் தோள்பட்டைக்கு நேராகவும், வலது கையை இடுப்புக்குச் சமீபத்திலும் வைத்துக் கொள்ளுதல் 'சுக்கிர' னாகும்.




சனி

வலது கையால் திரிசூலஹஸ்தமும், இடது கையால் சிகர ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்ஞலிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'சனீச்வர' ஞகும். நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்க வேண்டும்.



இராகு


வலது கையால் சூசிஹஸ்தமும், இடது கையால் சர்ப்பசீருஷ ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்ஞலிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'இராகு' வாகும். நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கவேண்டும்.




கேது

வலது கையால் அர்த்த பதாகஹஸ்த'மும், இடது கையால் சூசி ஹஸ்தமும் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்ஞலிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'கேது' வாகும். நீண்ட விரல் நுனிகள் ஆகாயததை நோக்கி இருக்கேவண்டும்.


மன்னர்களின் ஹஸ்தங்கள்



லவண
முகுளா
கைகள் மேலும் கீழும்




இக்ஷு
அலபத்மா
கைகள் மேலும் கீழும்




சுரா

சங்கீர்ண, பதாகக் கைகள்
மேலும் கீழும்




சர்ப்பி

சதுரக் கைகள் மேலும் கீழும்




ததி

த்ரிபதாகக் கைகள் மேலும் கீழும்




க்ஷீரா

சர்ப்பசிருக் கைகள் மேலும் கீழும்



சுத்தோதகா

பதாகக் கைகள்




நளன்

வலதுகை மயூரா




ஹரிச்சந்திரன்

வலதுகை சுகதுண்டம்




புருகுத்ஸர்

வலது கை ஆலபத்மம்




புரூரவசு

வலது கை முஷ்டி




திலீபன்

வலது கை பதாகம்




அம்பரீஷன்

வலது கை கர்த்தரிமுகம்




நகுலன்

வலதுகை கடகம்



யயாதி

வலதுகை தாம்ரசூடம்



சகாதேவன்


வலதுகை சிகரம்

சாகரர்

தலையின் மேல்

அலபத்மம்






சிபி

கபித்த கைகளை முன் நோக்கி
அசைத்தல்




கார்த்தவீர்யன்

இரண்டு பதாகக் கைகள்
தோள்களில், தேவவிபாவனத்தில்




இராவணன்

பதாகக் கைகளை விரித்தல்




தர்மராஜன்


பதாகக் கைகளைப் புஜத்தின்
பக்கம் அசைத்தல்




அர்ஜுனன்
திரிபதாகக் கையை முன்னால் மறுபடியும்
மறபடியும் அசைத்தல்




சைப்யா
ஸூசிக்கை விரலைமேல்நோக்கிப்புரட்டுதல்



பீமன்
முஷ்டிக் கையை முன்னுக்கு அசைத்தல்




நகுஷா
பதாகக் கையை முன்னுக்கு அசைத்தல்




மாந்தாதாவும்—மர்த்வானும்

முகுலா, ஸூசி, முஷ்டி, அர்த்த பதாக, ஹஸ்தங்களை புரட்டப்பட்டு தேகத்தில் தொடும் மாதிரி கைகளை வரிசையாக உபயோகிக்கவேண்டும்.




ரகு

வலது கையை அர்த்தபதாகம் போல் மேல் நோக்கிப் புரட்டி, தேகத்தைத் தொடல்




பகீரதன்

அர்த்த சந்திரக் கையைத் திரிபதாகம் மாதிரி அசைத்தல்




அஜன்

இடது கையை அர்த்தபதாகம் போல் மேல் நோக்கிப் புரட்டி உடம்பில் பதித்தல்



தசரதன்

அர்த்த பதாகக் கைகள் குறுக்கே வைக்கப்படல்



இராமன்

சிகரம், வலது தோளின் மேல்



லக்ஷ்மணன்

சிகரம், இடது தோள்களின் மேல்



சத்துருக்னன்

சிகரக் கைகள் முகத்தில்




மனிதவர்க்கம்

இடதுகையால் இடது தோளின்மேல் சிகரம்


ஜாதி ஹஸ்தங்கள்

பிராமணர்




இரண்டு கைகளா லும் சிகர ஹஸ்தம் பிடித்து, நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்க, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டி, பின்னர் வலதுகைக் கட்டை விரல் நுனியால் பூணூலைக் குறித்துக் காட்டுமாறு இடது தோள்பட்டை முதல் குறுக்காக இறக்கி, வலது இடுப்புக்குச் சமீபத்தில் கொண்டு வருதல் ‘அந்தணர்’ குலமாகும்.

வைசியர்




வலது கையால் கடகாமுகமும், இடது கையால் ஹம்ஸாஸ்ய மும் பிடித்து அந்தந் தக் கையுள்ள பாகத் தில் முழங்கை முதற் பட்ட பாகம் முன்னு லிருப்பவரைப் பார்க்க நீட்டிக் காட்டுதல் ‘வணிகர்’ குலமாகும். ஆனுல் உள்ளங்கை முன்னுலிருப்பவர்க்குத் தெரியவேண்டும்.



க்ஷத்திரியர்

வலதுகையால் பதாக ஹஸ்தம் பிடித்து, முழங்கை முதல் முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாயும் வைத்துக் கொண்டு, இடது கையால் சிகரஹஸ்தம் பிடித்து முழங்கை முதற்பட்ட பாகம் முன்னுலிருப்பவரைப் பார்க்குமாறு நீட்டி, கட்டை விரல் நுனி வலது பக்கத்தைப் பார்ப்பது போலச் சிறிது சாய்த்தல் 'க்ஷத்திரிய' குலமாகும்.

சூத்திரர்



வலது கையால் சூசி ஹஸ்தமும் இடது கையால் சிகர ஹஸ்தமும் பிடித்து, அந்தந்தக் கையுள்ள பாகத்தில் முழங்கை முதல் முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டுதல் 'சூத்திரக்' குலமாகும். ஆனுல் நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்க வேண்டும்.

இவைகளேயன்றி, இன்னும் பதினெட்டு விதமான ஜாதிகளேயும் காட்ட, அந்தந்த ஜாதியார் செய்யும் தொழிலே அனுசரித்தும், அந்தந்தத் தேசத்துக்குத் தக்கபடி தேச ஹஸ்தங்களே உபயோகித்தும், சமயத்துக்குத் தக்கவாறு கைகளேப் பிடிக்க வேண்டும்.

இராக்ஷஸ ஹஸ்தம்



ஒவ்வொரு கையாலும் சகடஹஸ்தம் பிடித்து அந்தந்தக் கையுள்ள பாகத்தின் கடைவாய் ஓரமாக விரல் நுனிகள் பொருந்துவது போலக் காட்டுதல் 'ராக்ஷஸம்' ஆகும்.

பாந்தவ ஹஸ்தங்கள்


இனி வரும் பக்கங்களில் மனிதர்களிடையே உள்ள பலவித உறவு முறைகளைக் குறிப்பதற்குக் கையாளப் படும் ஹஸ்தங்கள் பற்றியும், அவற்றின் விநியோகங் களையும் தெரிந்து கொள்ளலாம்.



தம்பதிகள் (கணவன் மனைவி)

வலது கையால் மிருகசீருஷ ஹஸ்தமும், இடது கையால் சிகர ஹஸ்தமும் பிடித்து, இருகைகளையும் அந்தந்தப்பக்கத்து மார்புக்கு நேராகக் கொண்டுவரவேண்டும். இடதுகைக் கட்டை விரலும், வலதுகைச் சுண்டு விரல், கட்டை விரல் இரண்டும் ஆகாயத்தை நோக்கி இருக்கவேண்டும். வலது கையிலுள்ள மற்ற விரல்கள் இடதுகையைப் பார்க்க வேண்டும். மேற்கண்டவையே 'தம்பதிகளைக்' குறிக்கும் ஹஸ்தமாகும்.

தாயார்



இடது கையால் அர்த்த சந்திர ஹஸ்தம் பிடித்துக் கையைக் கொப்பூழுக்குச் சமீபத்தில் உள்ளங்கை மேல்நோக்கி இருக்குமாறு பிடித்து, வலது கையால் சந்தம்ச ஹஸ்தம் பிடித்து, இடது உள்ளங்கைக்கு மேல் வலது புறங்கையைப் பொருத்திக் காட்டி, பிறகு இடது கையால் மிருக சீருஷ ஹஸ்தம் பிடித்து, *''ஸ்திரீ''க்குக் காட்டுவதுபோல் அந்தந்தக் கையை அதனதன் பக்கத்தில் முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னால் நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படியாய் பிடித்துக் காட்டுதல் 'மாத்ரு' (தாயார்) ஹஸ்தமாகும்.


தந்தை



இடது கையால் அர்த்த சந்திர ஹஸ்தம் பிடித்து, உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி, கையைக் கொப்பூழுக்குநேராகக்கொண்டு வந்து, வலது கையால் சந்தம்ச ஹஸ்தம் பிடித்து, வலது புறங்கையை இடது உள்ளங்கைக்கு மேல் பொருத்திப் பிறகு வலக் கையால் சிகர ஹஸ்தம் பிடித்துக் கட்டை விரல் நுனி ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி கையை மார்புக்கு நேராக வைத்துக் கொள்ளுதல் 'தந்தை'யைக் குறிக்கும் (பித்ரு) ஹஸ்தமாகும்.


---

* ஸ்திரீ ஹஸ்தம், அதாவது பெண்ணின் கை தனியாக விவரிக்கப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு கையையும் கர்ப்பப்பையைக் குறிக்கும் வயிற்றின் மேல் வைப்பதின் மூலம் அதை அறியலாம்.




மாமியார்

இரு கைகளாலும் ஹம்ஸாஸ்ய ஹஸ்தம் பிடித்து, கைகளைக் கழுத்துக்குச் சமீபத்தில் காட்டி, வலது கையால் சந்தம்சஹஸ்தம் பிடித்து, விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாய்க் கையைக் கொப்பூழுக்கு நேராகக் காட்டி, இடது கையால் மிருகசீருஷம் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னாலிருப்பவர் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படி காட்டுதல் 'மாமியார்' உறவைக் காட்டும் ஹஸ்தமாகும்.




மாமனார்

மாமியாருக்குப் பிடித்த ஹஸ்தம் போலக் காட்டுவதில் இடது கையால் காட்டுவதை நிறுத்தி, வலது கையால் சிகர ஹஸ்தம் பிடித்து, கட்டை விரல் நுனி ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி மார்புக்கு நேராகப் பிடித்தல் 'ஸ்வசுர' (மாமனார்) ஹஸ்தமாகும்.



மைத்துனன் (புருஷனுடைய சகோதரன்)

இடது கையால் சிகரஹஸ்தம் பிடித்து, கட்டைவிரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, வலது கையால் கர்த்தரீ முகம் பிடித்து வலம் இடம் ஆகிய பக்கங்களில் காட்டுதல் 'மைத்துனன்,' ஹஸ்தமாகும்.



நாத்தனூர்

மைத்துனனுக்குக் காட்டியது போல் ஹஸ்தம் பிடித்துப் பிறகு வலது கையால் மிருக சீருஷ ஹஸ்தம்பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங் கை பூமியைப் பார்க்கக் காட்டுதல் 'நாத்தனூர்' உறவைக் குறிக்கும் ஹஸ்தமாகும்.

அண்ணன் தம்பி

இரண்டு கைகளா லும் மயூர ஹஸ்தம் பிடித்து, கைகளை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, வலது கை முன்னுலிருப்பவ ரைப் பார்க்கும்படி யாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்குமாறும் அமைத்துக் காட்டி, வலது புறங்கையில் இடது புறங்கையைப் பொருத்திக் காட்டுதல் 'அண்ணன் தம்பிக்கு' உரிய ஹஸ்தமாகும்.





புருஷன்

இரு கைகளாலும் ஹம்ஸாஸிய ஹஸ்தம் பிடித்து, கைகளைக் கழுத்துக்குச் சமீபத்தில் கொண்டு போய் கழுத்தை வளைத்துக் காட்டி, பிறகு சிகர ஹஸ்தம் பிடித்து, விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி கைகளை மார்புக்கு நேராகப் பிடித்தல் 'புருஷ' ஹஸ்தமாகும்.

சக்களத்தி

பாச ஹஸ்தத்தை மார்புக்கு நேராகப் பிடித்து, பிறகு இரு கைகளாலும் மிருகசிருஷ ஹஸ்தம் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியை நோக்கி இருக்கும்படி பிடித்தல் 'சக்களத்தி' ஹஸ்தமாகும்.





மகன்

சந்தம்ச ஹஸ்தத்தை அடிவயிற்றின் மேல் வைத்துப் பின் அதை எடுப்பதோடு சிகர ஹஸ்தத்ைத இடது கையால் பிடித்தல் 'மகனை' (பிள்ளையை)க் குறிக்கும் ஹஸ்தமாகும்.



மருமகள்

மகனுக்குப் பிடித்தது போன்ற ஹஸ்தம் காட்டி, பிறகு இடது கையால் மிருகசீருஷ ஹஸ்தம் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னுலிருப்பவரைப் பார்க்க நீட்டி உள்ளங்கை பூமிக்குத் தெரியப் பிடித்தல் 'மருமகள்' ஹஸ்த மாகும்.

விரல்களின் லக்ஷண விநியோகம்

ஐந்து விரல்களையும் அவைகளின் விநியோகங்கள் பற்றியும் இங்கு சிறிது பார்ப்போம். ஒவ்வொரு விரலும் தனித்தனியே தேவதை, திசை, நிறம் இம்மூன்றையும் குறிக்கப் பயன்படுகிறது, கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் ஒவ்வொரு விரலின் விநியோகமும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

	விரல்	தேவதை	நிறம் (அல்லது) வர்ணம்	திசை
1.	கட்டைவிரல்	தத்புருஷம்	பொன்னிறம் சுத்தமஞ்சள்	தெற்கு
2.	ஆள்காட்டிவிரல்	ஈசான்னியம்	நீலம், பச்சை, கறுப்பு	கிழக்கு
3.	பாம்புவிரல்	தத்புருஷம்	மஞ்சள்	தெற்கு
4.	மோதிரவிரல்	அகோரம்	வெண்மை	மேற்கு
5.	சுண்டுவிரல்	வாமதேவம்	சிவப்பு	வடக்கு

பாத லக்ஷணங்கள்

இனி நாம் 10 விதமான பாத லக்ஷணங்களையும், அவற்றின் விநியோகங்களையும் அறியலாம்.

1.	ஸமபாதம்	6.	தாடிதபாதம்
2.	மண்டலிபாதம்	7.	நாகபந்த பாதம்
3.	குஞ்சிதபாதம்	8.	சாட்கதிபாதம்
4.	அஞ்சிதபாதம்	9.	நிருத்த மூர்த்திபாதம்
5.	வடிப்புப்பாதம்.	10.	கருடநிலைப் பாதம்

1. ஸமபாதம் : தன் இரண்டு பாதங்களையும் ஒன்று சேர்த்துச் செவ்வனே நிற்றல்.

பிரயோகம் : தேவர்கள், ஆசிரியன், அரசர்கள், பெரியோர்கள், தபோதனர் ஆகியோர் முன்னிலையில் வணக்கமொடு வாய்பொத்தி நிற்கும்போது 'ஸமபாதம்' பயன்படும். அன்றியும் தந்தை, தாய், குரு இவர்களைப் பூஜிக்கும் போதும் பிரயோகிக்கப் பெறும்.

2. மண்டலிபாதம் : இரண்டு குதிகால்களேயும் எதிர்முக மாகச் சேர்த்து, கால்களினிடையே இடைவெளி வரு மாறு வளைத்து நிற்குதல்.

விநியோகம் : விஷ்ணு கருடன் மேலேறுதல், குதிரையேற்றம், புலிப்பாய்ச்சல், யானையேற்றம், ஆயுதம் பிடித்தல் ஆகியவைகளைக் காட்டும்போது 'மண்டலி' பாதம் பயன்படும்.

3. குஞ்சிதபாதம் : இரண்டு கால்களிலும் பெருவிரல் நுனியைப் பூமியில் ஊன்றி, குதிகால் இரண்டையும் மேல் நோக்கித் தூக்குதல்.

விநியோகம் : கழைக்கூத்தாடி கயிற்றின் மேல் நடத்தலைக் காட்ட இக்குஞ்சித பாதம் பயன்படும்.

4. அஞ்சித பாதம் : இரண்டு குதிகால்களைத் தரையில் ஊன்றி கால்படத்தை மேல் நோக்கித் தூக்குதல்.

விநியோகம் : பொய்க்கால் ஆட்டக் குதிரை நடை, புடவை நெய்வோர் தொழில், திருடர் தாம் அடிவைத்தல் தெரியாது ஒளிந்து நடத்தல், நெற் பதம் பார்ப்போர் நெல்லை நெருடுதல், குயவர் மண் மிதித்தல், முதலியவைகளைக் காட்ட "அஞ்சித பாதம்" பயன்படும்.

5 வடிப்புப் பாதம் : இரு புற வடிகளையும், இருபக்கங்களி லும் ஊன்றி நடத்தல்.

விநியோகம் : மெதுவாய் ஊன்றல், நடித்தல், வயல், வாய்க்கால், முறம்பு, சேறு இவைகளைத் திருத்தல், ஒதுங்கி நடத்தல், மோஹினிநிலை—தாப தர்நிலை — யோகநிலை காட்டுதல், சுடுமண்ணில் நடப்பவர் காலையாற்றிக் கொள்ளுதல், கிரீடை முதலியவைகளில் 'வடிப்புப்பாதம்' உபயோகிக்கப் பெறும்.

6. தாடித பாதம் : வலது கால் படத்து நுனியை, இடது கால் படத்துக் கருகில் ஊன்றுதல்.

உபயோகம் : புல்லாங்குழல் ஊதுவோர் நிற்கும் நிலைக்கு இத்தாடிதபாதம் பயன்படும்.

7. நாகபந்தபாதம் : இரு கால்களின் பாதங்களையும் இடம் மாற்றி வைத்தல்.

உபயோகம் : நிலையோகம் செய்தல், சூரிய நமஸ்காரம் செய்தல் ஆகியவற்றில் 'நாகபந்தபாதம்' பயன் படும்.

8. சாட்கதிபாதம் : இடது காலைச் செவ்வையாய்த் தரை யில் ஊன்றி, வலது காலைக் குஞ்சிதபாதமாக நிறுத்தல்.

பிரயோகம் : ஆயுதம் பிடித்தல், சேனையை நிலைநிறுத் தல் ஆகியவைகளைக் காட்ட 'சாட்கதிப்பாதம்' உப யோகப்படும்.

9. நிருத்த மூர்த்திப் பாதம் : ஸமபாதமாக வலது பாதத் தின் படத்தைப் பூமியிலூன்றி, இடது பாதத்தை வளைத் துக் குஞ்சிதமாக வைத்து முன்னால் நாட்டுதல்.

பிரயோகம் : பதஞ்சலியார், வியாக்கிரபாதர் காணப் பொன்னம்பலத்திலும், பாண்டியன் வேண்டு கோளுக்கிணங்கி, கால்மாறி மதுரையில் வெள்ளி யம்பலத்திலும், நடனஞ் செய்த சபாநாயகன் கூத்தைக் காட்ட 'நிருத்தமூர்த்திபாதம்' பயன்படும்.

10. கருடநிலைப் பாதம் : இடதுகால் படத்து நுனியையும் இடது முழங்காலையும் தரையில் ஊன்றி, வலது முழங் காலை வளைத்துப் பாதத்தை முன்னால் வைத்து நிற்றல்.

உபயோகம் : கருடனும், ஹனுமானும் விஷ்ணுவைத் தாங்கி நிற்கும நிலை காட்டவும், கிருஷ்ணன் தவழ்ந்து தயிர் பால் வெண்ணெயை வாரி உண்ட நிலை காட்டவும், இராவணன் கயிலையை எடுத்தநிலை காட்டவும், அஸ்திர சாஸ்திரம் தொடுக்கும் நிலை காட்டவும் 'இக்கருடநிலைபாதம்' உபயோகிக்கப் படும்.

இனி நாயகி, நாயகன் இவர்களிடையே உண்டாகும், மதனாவஸ்தைகளையும், மதனசைனியம், மன்மத பாணங் கள், மதனசைனியாவஸ்தைகள் ஆகியவைகளைப் பற்றி அறியலாம்.

மதனாவஸ்தை பத்து வகைப்படும். தனித்தனியே அவை கள் ஒவ்வொன்றும் என்ன என்பதைப் பாக்கலாம்.

மதனுவஸ்தை

1. நேத்திரோற்சவம் — நாயகனைக் கண்குளிரப் பார்த்தல்.
2. சித்தசங்கமம் — நாயகன் மேல் உள்ளம் ஒன்றுதல்.
3. ஸ்மரணம் — நாயகனை நினைத்துக் கொண்டேயிருத்தல்.
4. குணகீர்த்தனம் — நாயகனது குண விசேஷங்களைச் சொல்லுதல்.
5. அரதி — நாயகனைப் பிரிந்த பிரிவாற்றுமை.
6. தாபம் — காமச்சுரம் உண்டாகுதல்.
7. லஜ்ஜாத்தியாகம் — வெட்கத்தை ஒழித்தல்.
8. கமனம் — நாயகனைக் குறித்துப் பேசிக் கொண்டிருத்தல்.
9. மூர்ச்சை — மூர்ச்சையாதல்.
10. தன்னியதா — நாயகனைச் செல்லமாய்த் தன்னுடனேவைத்துக் கொண்டிருத்தல்.

இனி மதன சைனியங்கள் 19-க்கும் விபரங்களைக் கீழே பார்ப்போம். சாதாரண சைனியத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்திற்கும் ஈடாக இதில் வரும் பொருள்கள் கீழே விளக்கப் பட்டுள்ளன.

மதன சைனியங்கள்

1. இரதம் — தென்றல்.
2. கஜம் (யானை) — இருள்.
3. துரகம் (குதிரை) — கிளி.
4. சைனியம் (படை) — மங்கையர்கள்.
5. துவஜம் (தேர்க்கொடி) — மகர மீன்.
6. அஸ்திரம் (ஆயுதம்) — சந்திரன், காளாஞ்சி, படிக்கம், மகிழம்பூமாலை, மல்லிகை, வெற்றிலை மாலை, மஞ்சள்.
7. வாகனம் — அன்னம் (ஹம்ஸம்)
8. கட்கம் — மாந்தளிர்.

9.	பேரிகை	—	கடல் அலைகள்.
10.	எக்காளம்	—	குயில்.
11.	நடி	—	மயில்.
12.	தனுசு (வில்)	—	கரும்பு.
13.	நாண்	—	தும்பி, (வண்டு)
14.	பாணம் (அம்பு)	—	தாமரை, அசோகம், சூதம் அல்லது மா, முல்லை. நீலோற்பலம் ஆகிய 5 புஷ்பங்கள்.
15.	ஆசனம்	—	சகடம்.
16.	கரகம்	—	சுர தாலயம்.
17.	வாள்	—	தாழம் பூ.
18.	கவரி (சாமரம்)	—	கமுகம்பாளை,
19.	படை வீடு (ஆயுத சாலை)	—	இளஞ்சோலை.

பஞ்ச பாணங்களின் குணங்கள்

மன்மத சைனியத்தில் 14-ஆவதாகச் சொல்லப்பட்ட பாணங்கள் ஐந்தின் குணங்களை அறியலாம்.

	பாணங்கள்		குணங்கள்
(1)	தாமரை	—	நினைப்புண்டாக்கும்.
(2)	மாம்பூ	—	பசலை - அதாவது பச்சை நரம் போடச் செய்யும்.
(3)	அசோகம்	—	உணவு தவிர்க்கச் செய்யும்.
(4)	முல்லை	—	சோக முண்டாக்கும்.
(5)	நீலோற்பலம்	—	மரண மூர்ச்சை.

இந்த 5-ஆவது பாணத்தைப் போடக்கூடாது.

அடுத்து மதன சைனியாவஸ்தைகள் என்னென்ன என்பதை அறிவதுடன், மதனவஸ்தையில் எந்தெந்தப் பொருள்கள் அவற்றின் குணத்திற்கு நேர்மாறுன குண முடையன போல் தோன்றுகின்றன என்பதையும் அறியலாம்.

(1)	சந்தனம், பன்னீர்	—	நெருப்பு
(2)	தென்றல் காற்று	—	வச்சிராயுதம்—புலிபோல் பாய்தல்.
(3)	இருள்	—	முட்டுதல்.
(4)	கிளி, வார்த்தைகள்	—	ஊசிபோல் சொற்கள் நுழைதல்.

(5) ஸ்திரீகள் — கைகொட்டிச் சிரித்தல்.
(6) மகரம் — கவ்வுதல்.
(7) சந்திரன் — அனல்போல் தகித்துக் கொப்புளமுண்டாதல்.
(8) குயிலோசை — பயமுண்டாக்குதல்.
(9) மயில் ஆட்டம் — கண் கூசுதல்.
(10) அன்னம் — நடை தள்ளாடுதல்.
(11) கட்கம் — பிரமையுண்டாதல்.
(12) கரும்பு — புன்சிரிப்புண்டாதல்.
(13) தும்பி — காது அடைத்தல்.

நாயகிபேத லக்ஷணங்கள்

சிருங்காரரஸ நாயகிகள் மூவராவர்கள். அவர்கள் சிவ்யா, பரகீயா, சாமானியா, எனப்படுவார். மேலும் இச்சிவ்யா நாயகியில் முக்தா, மத்யா, பிரகல்பா என மூன்று பேதங்களும், இதைத்தொக்கி முக்தா நாயகியில் ஞாத யௌவன, அஞ்ஞாத யௌவன என இரு பிரிவுகளும், இதுபோல் மத்யா நாயகியில், தீரா, அதீரா, தீராதீரா எனமூன்று வகைகளும், இப்படியே பிரகல்பா நாயகியிலும் தீரா, அதீரா, தீராதீரா என மூன்று வகைகளும் உண்டு. ஆனல் மத்யா-பிரகல்பா நாயகிகளில் ஜேஷ்டா, கனிஷ்டா என இரண்டு பிரிவுகளுமுண்டு. எனவே சிவ்யா நாயகியின் பிரிவில் மொத்தம் பதினன்கு பேதங்கள் இடம் பெறுகின்றன. இனி மேற்கண்டவைகளைப் பற்றிப் பின் வருமாறு கீழே அறியலாம்.

1. சிவ்யா என்பவள் தனக்குத் தாலி கட்டின புருஷனையே ஆத்மசாக்ஷியாகப் பாவித்து ஆனந்தமடைகிறவள்.

2. பரகீயா என்பவள் தனக்குத் தாலி கட்டின புருஷனிருக்கையில் அந்நிய புருஷனை அபேக்ஷிப்பவள்.

3. சாமானியா என்பவள் காசுபணத்தில் அபேக்ஷையாயிருந்து அநேக புருஷருக்கு இணங்கினவள். இவளுக்கு ஆடல் பாடல் முதலியவை தெரியும். இவள் தாசியாவாள்.

சிவ்யா நாயகியின் லக்ஷணங்கள்

முக்தா குணம் படைத்த சிவ்யா நாயகி யௌவன ஆரம்பத்தை அடைந்தும், சிருங்கார சேஷ்டைகளுக்கு கொஞ்ச மேனும் இணங்காமல் லச்சை அடைபவள் ஆவள்.

இந்த முக்தா குணம் படைத்தவள் ஞாதயௌவன அதாவது தனக்கு யௌவனம் வந்ததை அறிந்தவள், அஞ்ஞாதயௌவன அதாவது தனக்கு யௌவனம் வந்ததை அறியாதவள் என இருவகைப்படும்.

மத்யாகுணம் படைத்தவள் யௌவனம் அடைந்தும் சிருங்கார விலாஸம் கொஞ்சம் தெரிந்தும் பதியுடன் இணங்கியும் இணங்காமலும் இருப்பவள்.

மத்யாதீரா என்பவள் தனக்கு அபராதம் செய்த நாயகனைப் பார்த்து மாறுபாடான பேச்சுப் பேசுகிறவள்.

மத்யாஅதீரா தனக்கு அபராதம் செய்த நாயகனை கோபமாகிய பேச்சுகளினுல் வருத்தப்படச் செய்பவள்.

மத்யா அதீரா—தீரா தனக்கு அபராதம் செய்த நாயகனைப் பார்த்தவுடனே கண்ணீர் விட்டழுது கொடூர மான வார்த்தைகளைப் பேசுகிறவள்.

பிரகல்பாகுணம் சிருங்கார ரஸம் நன்ருய் தெரிந்தும் தன் பதியுடன் அனுபவிப்பவள் ஆவள்.

பிரகல்பாதீரா என்பவள் தனக்கு அபராதம் செய்து நாயகனிடத்தில் கபடமான மனதுடன் இரதியில் உபேக்ஷை அல்லது அவமதிப்பு செய்பவள் ஆவள்.

பிரகல்பா—அதீரா எனப்படுபவள் தனக்கு அபராதம் செய்த நாயகனைப் பயப்படும்படி செய்பவள் ஆவள்.

பிரகல்பா அதீரா—தீரா என்னும் நாயகி தனக்கு அபராதம் செய்த நாயகனை இரதியில் அவமதிப்பும், பயப்படவும் செய்த வள் ஆவள்.

மத்யாகுணம், பிரகல்பா குணம் ஆகிய இரண்டும் ஜேஷ்டா, கனிஷ்டா என இரு பேதங்களுடையன.

ஜேஷ்டா பேதம் எனப்படுவது, ஒரு நாயகனுல் அங்கீ கரிக்கப்பட்டிருக்கும். இரண்டு நாயகிகளில், நாயகனுடைய அதிக பிரியத்துக்கு பாத்தியப்பட்டவள் ஜேஷ்டா; மற் ருெருத்தி கனிஷ்டா.

பரகீயா நாயகியின் லக்ஷணங்கள்

பரகீயா நாயகி என்பவளை **கன்யகா** என்றும், **பரோடா** என்றும் இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

கன்யகா என்பவள், யௌவன பிராயத்தை அடைந்தும் சாமர்த்தியமும் வெட்கமும் உடையவளாயும், தாய் தகப்பன் போஷணையில் இருந்தும் தனக்கு பிரியமுள்ள நாயகனிடத்தில் கொஞ்சம் வெட்கத்துடன் ஆசையை வெளிப்படுத்துகிறவள்.

பரோடா நாயகி என்பவள், ஒருவனுக்கு விவாகமாகியும் அவன் மனதுக்கிசைந்தபடி சமாதானமாக குடித்தனம் செய்து கொண்டும் இருந்து, பிறர் அறியாமல் அந்நிய புருஷனை இரதிக்கு அபேக்ஷிக்கிறவள்.

சிவ்யாநாயகிகள் சாராம்சம்

(1)	முக்தா————	ஞாதயௌவன அஞ்ஞாதயௌவன	——— 2
(2)	மத்யா————	தீரர அதீரா அதீர—தீரா	——— 3
(3)	பிரகல்பா———	தீரா அதீரா அதீர—தீரா	——— 3
(4)	மத்யா பிரகல்பா	ஜேஷ்டா கனிஷ்டா	——— 2

மொத்தப் பிரிவுகள்——— **10**

அஷ்டநாயகிகளின் லக்ஷணம்

மேற்கண்ட அஷ்டவித நாயகிகளைச் சிருங்கார ரஸத்திற்குத் தக்கபடி பின்வருமாறு நயபேதமாக பிரிக்கப்பட்டிருக்கின்றன:

1.	ஸ்வாதீனபதிகா	5.	கண்டிதா
2.	வாஸ கஸஜ்ஜிகா	6.	கலகாந்தரிதா
3.	விர கோத் கண்டித	7.	ப்ரோஷித பத்ருகா
4.	விப்ர லப்தா	8.	அபிசாரிகா

(1) ஸ்வாதீனபதிகா

நாயகனால் எப்பொழுதும் சந்தோஷிக்கப்படுகின்றவள்.

குணம் :

மன்மத பூஜாமஹோத்ஸவமும், சிங்காரவன சஞ்சாரமும், ஜலக்ரீடை, புஷ்பசயனம் அல்லது பூஞ்சோலையிற் போய் புஷ்பம் பறித்தல் முதலியவைகள் ஆகும்.

(2) வாஸகஸஜ்ஜிகா

நாயகன் வரும் சமயமறிந்து கேளீக்ருஹம் அல்லது படுக்கையறையை, அலங்கரித்துக்கொண்டு சித்தமாயிருப்பவள்.

குணம் :

நாயகனோடு கலந்து அநுபவித்தல், வித்தையைப்பற்றி யோசித்தல், தன் சகிகளிடம் விநோதத்தைப்பற்றிச் சொல்லுதல், அடிக்கடி தன் தாதியை குதூகலமாகப் பார்த்தல், நாயகன் வரும் வழியைப் பார்த்தல் முதலியவை.

(3) விர கோத் கண்டிதா

நிரபராதியான நாயகன் சிரமமான சமயத்தில் வராமலிருக்க, காலம் அதிக்ரமித்ததைச் சகியாமல் வழி பார்க்கிறவள்.

குணம் : தேகம் வணங்குதல், இளைத்தல், அந்நிய வேலையில் பிரியமில்லாதிருத்தல், கண்ணீர் விடுதல், தன் வருத்தத்தைச் சகிகளிடம் சொல்லுதல் முதலியவை.

(4) விப்ரலப்தா

தானும் நாயகனும் கலக்க உத்தேசித்திருந்த இடத்துக்கு தான் மட்டும் போய், நாயகன் மட்டும் வராமலே இருக்கக் கண்டு மன்மத பீடையடைகிறவள்.

குணம் :

ஆசையதிகரித்தல், கவலை, விரோதம், இளைப்பு, கண்ணீர்விடுதல், பெருமூச்சு விடுதல், மூர்ச்சையடைதல் முதலியவை.

(5) கண்டிதா

குறிப்பிட்டிருந்த நேரம் கடந்தோ அல்லது அந்நிய ஸ்திரீயுடன் அனுபவித்த அடையாளங்களுடனே நாயகன் வரக்கண்டவள்.

குணம் .

பெருமூச்சுவிடுதல், பேசாதிருத்தல், கண்ணீர்விடுதல், வருத்தப்படுதல், பிரமித்தல், முணுமுணுத்தல் முதலியவை.

(6) கலகாந்தரிதா

சகிகள் முன்னிலையில் தன் காலில் விழுந்த நாயகனை நிராகரித்துவிட்டு, பிறகு ஏக்கம் அல்லது விசனப்படுபவள்.

குணம் :

பெருமூச்சு விடுதல், பேசாதிருத்தல், கண்ணீர் விடுதல், வருத்தப்படுதல், பிரமித்தல், மனஸ்தாபப்படுதல், அடிக்கடி பிரலாபித்தல் முதலியவை.

(7) புரோஷித பத்ருகா

நாயகன் தேசாந்திரம் போயிருக்கும் காலத்தில் வருத்தப்படுகிறவள்.

குணம் :

நித்திரையற்று இருத்தல், உடம்பு இளைத்தல், நாயகன் எப்போது வருவான் என்று சகுனம் பார்த்தல், மலினம் அல்லது அழாதிருத்தல், நின்ற இடத்தில் நிற்காமல் அலைதல், எப்போதும் தனிமையில் படுத்தல், ஒன்றும் தோன்றுமல் இருத்தல் முதலியவை.

(8) அபிசாரிகா

மன்மத விலாசத்தில் அதிகம் பிரியம் கொண்டவளாக தன்னிடம் நாயகன் வரும்படியாவது, அல்லது நாயகனிடத்துக்குத் தான் போகும்படி முயல்கின்றவள்.

குணம் :

சந்தாபப்படுதல், கவலை முதலியவைகளுடன் அந்தந்த சமயத்துக்குத் தக்கபடி வேறு சில குணபேதங்களும் உண்டாகும்.

மேலே சொன்ன எல்லா நாயகிகளிலும் உத்தம நாயகி, மத்திம நாயகி, அதமநாயகி என மூன்று வகை உண்டு.

(1) உத்தம நாயகி

நாயகன் அபராதம் செய்தாலும், அவனிடம் மனஸ் தாபப்படாமலும், அவனைவிட்டுப் பிரியாமலு மிருப்பவள்.

(2) மத்திமநாயகி

நாயகன் பிரியப்பட்டால் தானும் பிரியப்படுதல், அவன் கோபித்துக் கொண்டால் தானும் கோபித்துக் கொள்ளுதல், அவன் நிஜம் சொன்னால் தானும் நிஜத்தைச் சொல்லுதல், அவன் அபராதம் செய்தால் தானும் அபராதம் செய்தல், அவன் சினேகித்தால் தானும் சினேகித்தல் இப்படியாக ஒவ்வொரு சமயத்திலும் நாயகனைபோல் நடப்பாள்.

(3) அதமநாயகி

இதம் செய்பவனிடத்தில் அஹிதம் செய்வதும், காரண மின்றிக் கோபித்துக் கொள்வதும், பிரார்த்தித்தும், கோபத்தை விடாமலிருப்பதும். கெட்டிக்காரனாயிருந்தாலும், அழகற்றவனாயிருந்தாலும், எப்படி இருந்தாலும் நாயகனை இச்சிக்கின்றவள்.

மேற்கண்ட மூவர்களைத் தவிர, 'அந்நிய சம்போக துக்கிதா' என்கிறவள் தன் நாயகனை அழைத்து வரும்படிக்கு அனுப்பிய தூதி, அந்த நாயகனையணைந்து வந்து வேறு சாக்குப்போக்குச் சொல்ல அவளுடைய கபடத்தையறிந்து சுடாமற் சுட்டிப்பேசுகிறவளாம்.

முற்கூறிய நாயகிகளுக்குச் சகாயமாக இருந்தும் அவர்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொடுத்தும் சந்தோஷமாக பேசிக்கொண்டும் இருப்பவர்கள்:

(1) தூதி (2) தாசி (3) சகி (4) சேடி (5) தாத்ரேயா (6) ப்ராதிவேசினி (7) இலிங்கினி (8) சில்பினி என்று எட்டு பேதகமாகப் பிரிக்கப் படுவார்கள்.

அவர்கள் குணம்

(1) தூதி :—நாயகியால் சொல்லப்படும் வார்த்தைகளை நாயகனிடத்தில் சொல்லும் திறமையுடையவள்.

(2) தாசி :— வீட்டு வேலை செய்யும் ஊழியக்காரி.

(3) சகி :—நாயகியினது சுகதுக்கங்களைத் தன்னது போலவே அடைந்து அநுபவிப்பவள்.

(4) சேடி :—நாயகி - நாயகர்களைக் கூட்டி வைக்கிறவள்.

(5) தாத்ரேயா :—தன்னை வளர்த்த செவிலித் தாயின் மகள்.

(6) ப்ராதி வேசினி :—தனக்கு சமீபமான வீட்டில் வசிப்பவள்.

(7) இலிங்கினி :—சமயத்துக்குத் தக்கபடி உருமாறிக் கொள்பவள் அல்லது வேஷம் போட்டுக் கொள்பவள்.

(8) சில்பினி :—மாலை முதலியன கட்டிக் கொடுத்தும், அலங்காரம் செய்தும் உதவுபவள்.

நாயக பேத லக்ஷணங்கள்

முன் கூறிய நாயகிகளுடன் கூடி அநுபவிக்கும் நாயகர்கள் பதி, உபபதி, வைசிகன், என மூவராவர். இவர்கள் முறையே சிவ்யா, பரகீயா, சாமானியா எனும் நாயகிகளுக்குப் பதிகளாவார்.

1. பதி :

வேத சாஸ்த்ரோக்தமாக விவாகம் செய்து கொண்ட ஸ்திரீயுடன் சுகித்திருப்பவன்.

உதாரணம் : சீதாபிராட்டி ஒருத்தியுடனேயே சிருங்கார சுகம் அனுபவித்த ஸ்ரீ ராமச்சந்திரன் முதலியோர்.

2. உபபதி :

அந்நிய ஸ்திரீகளைத் தன் சாமர்த்தியத்தால் வசப்படுத்திக்கொண்டு அநுபவிப்பவன்.

உதாரணம் : கோகுலத்தில் உள்ள கோபிப் பெண்கள் முதலானவர்களை அநுபவித்த ஸ்ரீ கோபிகாரமணன் போன்ருேர்.

3. வைசிகன் :

வேசிகளிடத்திலேயே பிரியம் கொண்டு, அதனுல் கௌரவமிருப்பதுபோல் எண்ணிப் பணங்களைச் செலவு செய்துஉல்லாசமாயிருப்பவன்.

உதாரணம் : தற்காலச் சாமானிய மனிதர்களே ஆகும்.

நாயகிகள் தாங்கள் தங்கள் அவஸ்தையினுல் அனேக விதப் பெயர்களை அடைவது போலவே, நாயகர்களும் ஸ்வபாவபேதத்தினுல், அனுகூலன், தக்ஷிணன், திருஷ்டன், ஜடன் என பற்பல பெயர்களை யடைவார்கள்.

1. அனு கூலன் :

பிற ஸ்திரீகளைப் பற்றிய ஸ்மரணமேயன்றி விவாகமான ஸ்திரீயுடன் கூடி ஆனந்தமடைகிறவன்.

உதாரணம் : மிகுந்த ஆனந்தமாக ஜானகியுடன் பல வருஷகாலம் சுகமநுபவித்தும், சிற்சில சமயங்களில் பிரபஞ்சத்தாருக்காக அவளிடத்தில் வெறுப்புக் கொண்டது போல வேஷம்போட்டு, சீதாபிராட்டி பூமியில் நிலையமான பிறகு, தான் கலந்தநுபவித்த சுகத்தை மறுபடி கொடுக்கக் கூடிய ஸ்திரீகள் இல்லை என்கிற நிச்சய எண்ணத்தினால், எத்தனையோ வருஷ காலம் நாயகியின்றிக் காலம் கழித்ததுபோல வாழக்கூடிய ஸ்ரீ ராமச்சந்திரன் போன்றோர்.

2. தக்ஷிணன் :

தன்னைச் சேர்ந்த எல்லா ஸ்திரீகளிடத்திலும் சமமான பிரியமுள்ளவன்.

உதாரணம் : ப்ராக் ஜோதிஷ நகரத்தில் நரகாசூரனால் சேகரிக்கப்பட்டிருந்த எல்லா ஸ்திரீகளும், தங்கள் தங்களிடத்திலேயே பிரியமாய் இருப்பதுபோல பாவிக்கும்படி லீலை செய்து அநுபவித்த ஸ்ரீ கோபிகாரமணனாகிய கிருஷ்ணன் ஆகும்.

3. திருஷ்டன் :

தான் செய்த அபராதத்தைக் கண்ட நாயகி எவ்வளவு கோபித்துக் கொண்டாலும், அவளால் அங்கீகரிக்கப்படாவிட்டாலும், விலகாமல் எவ்விதத்திலும் அவளை வசப்படுத்திக் கொள்கிறவன்.

உதாரணம் : நாரத மகரிஷியால் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாரிஜாத புஷ்பத்தை ருக்மணிக்குச் சூட்ட, அதையறிந்த சத்தியபாமை எவ்வளவு நிராகரித்தும் அஞ்சாமலிருந்து பிறகு சத்தியபாமையின் கோபத்தைத் தவிர்த்து அநுபவித்த கோபாலன் போன்றவர்கள்.

4. சடன் :

தன்னிடம் பிரியமுள்ள நாயகிக்கு அவள் அறியாமல் அஹிதம் அல்லது கெடுதல் செய்பவன்.

உதாரணம் : தன்னிடமிருந்து மோகம் கொண்ட சத்தியபாமை அறியாமல் இருக்கச் செய்து அவள் வீட்டு பாரிஜாதமலரை ருக்குமணி வீட்டில் சொரியும்படி செய்த கண்ணபிரான் போல்வோர்.

முற் கூறிய நாயகர்களுக்கு சகாயமாயிருப்பவர்கள் :—

(1) பிடமர்த்தன் (3) சேடன்
(2) விடன் (4) விதூஷகன்.

என நல்வர்களும் தூதர்களாகும்.

1. பிடமர்த்தன் :

நாயகியிடத்தில் அவள் நாயகனைப் பார்க்கிலும் கொஞ்சம் குறைவான பிரியத்துக்குப் பாத்தியப் பட்டவன். கோபம் கொண்ட நாயகியின் கோபம் தணிப்பவ னென்று இவனைச் சொல்வார்கள்.

2. விடன் :

காம சாஸ்திரத்தில் தேர்ந்தவன்.

3. சேடன் :

நாயகி, நாயகன் இவர்களைக் கூட்டி வைக்கிறவன்.

4. விதூஷகன் :

ஹாஸ்யரஸம் உற்பத்தியாகும்படி விகடமாகப் பேசி மகிழ்விக்கும் நடவடிக்கையுள்ளவன்.

இதுவரையிலும் நாயகி, தூதி, நாயகன், தூதன் இவர்கள் பேதத்தை மிகவும் சுருக்கமாக அறிந்தோம். மேலும் இதற்குரிய உதாரணங்களைப் பிற நூல்களில் காண்க.

நவரசம்

(1) சிருங்காரம் : சீதாராமர் கல்யாணத்தில் பிறந்தது.

(2) வீரம் : வருணன் மேல் கணை தொடுத்தகாலத்தில் பிறந்தது.

(3) கருணை : விபீஷணனுக்கு அபயம் கொடுத்த காலத்தில் பிறந்தது,

(4) அற்புதம் : அகல்யா கல்லுருமாறிப் பெண்ணாக வந்த காலத்தில் பிறந்தது.

(5) ஹாஸ்யம் : தாடகையைச் சங்கரித்த காலத்தில் பிறந்தது.

(6) பயாநகம் : மாரீசனை வதைத்த காலத்தில் பிறந்தது.

(7) பீபற்சம் : மூலபலாதிகளைச் சங்கரித்த காலத்தில் பிறந்தது.

(8) ரௌத்ரம் : இராவணனைச் சங்கரித்த காலத்தில் பிறந்தது.

(9) சாந்தி : ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக காலத்தில் பிறந்தது.

ரசவகையில் **'வத்சல்யம்'** என்று ஒரு ரஸமுண்டு என்றும் சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தொல்காப்பியர் காலத்தில் எட்டாக இருந்து பின்னர் ஒன்பதாக வளர்ந்த ரஸங்கள் நுண்ணிய பேதங்களின் அடிப்படையில் கவனிக்கும்போது எண்ணற்ற வகையாக அமைவதை அறிஞர் உலகம் நன்கறியும். ஆனாலும் எல்லாம் ஒருவாறு ஒன்பது தொகையுள் அடங்கும்.